# சிதறல்கள்

ரா. சீ.

அணியகம்
சென்னை-30.

# சிதறல்கள்

ரா. சீ.

அணியகம்
சென்னை-30

## நூல் விளக்கம்

| | |
|---|---|
| முதற்பதிப்பு | ➢ 1979 |
| மறுபதிப்பு | ➢ 1999 |
| நூல் தலைப்பு | ➢ **சிதறல்கள்** |
| ஆசிரியர் | ➢ ரா. சீனிவாசன் |
| பொருள் | ➢ நாவல் |
| பதிப்பகம் | ➢ அணியகம்,<br>5, செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 600 030. |
| தாள் | ➢ 11.6 Kg. |
| பக்கம் | ➢ 112 |
| **விலை** | ➢ **ரூ. 21.00** |
| அச்சிட்டோர் | ➢ நெல்சன் அச்சகம்,<br>சென்னை - 600 029. |

'கன்னிமை என்பது பிச்சைப் பாத்திரம்
தாய்மை என்பது அட்சய பாத்திரம்'

கவியரசு நா. காமராசன்

# சிதறல்கள்.

"நாம் அவசரப்படுவதில்லை. இந்தக் குழந்தைகள் தாம் அவசரப்படுகின்றன இந்த உலகத்தைக் காண்பதற்கு"—என்று எங்கோ ஒரு நாவலில் படித்தேன்.

அந்த அடிகள் தாம் வருகின்றன இந்த ரவியைப் பார்க்கும் பொழுது; அவனை அறிமுகப் படுத்தாமல் எப்படி அவன் கதையைச் சொல்ல முடியும். ஏன் அவன்தான் இந்தக் கதாநாயகன். கதாநாயகன் என்ருல் அவன் ஆறடி உயரமும் ஆஜானுபாகுவாகவும் இருக்க வேண்டும் என்று யாரும் இப்பொழுது எதிர்பார்ப்பதில்லை. அவன் ஒரு நாயகிக்கு நாயகனுக இருக்க வேண்டும் அவ்வளவுதானே. ரவி ஆறடி வளரவில்லை. அவன் என்ன நிலமா? நான் அடியால் அளப்பதற்கு; ஆனுல் கோபம் வரும்பொழுது சில அடிகள் அடித்திருக்கிறேன். அவன் வீறிட்டு அழுவான்.

அவனைப் பார்க்கும்பொழுது பரிதாபகரமாக இருக்கும். அவன் என்னைப் பார்த்து ஏங்குவான். அம்மா என்று கதற மாட்டான்; அந்தச் சொற்களை அவன் முழுமையாகக் கற்றுக் கொள்ளவில்லை. அவன் கற்க வேண்டியவை ஏராளம் இருக்கின்றன. முதல் பாடம் அம்மாதான்.

அவனுக்கு நான் எங்கே அம்மா என்று சொல்லிக் கொடுத்தேன். 'மம்மி' என்று தானே மற்றவர்கள் அவனுக்கு என்னை அறிமுகப்படுத்தினுர்கள்.

அவன் என் குழந்தை; ஆனுல் அழகாக இல்லை. அவன் அப்பனை அப்படியே உரித்து வைத்து இருக்கிறுன். அதனுல்தான் அவனைப் பார்த்தால் எனக்குப் பிடிப்பது

இல்லை. என் சாயல் எங்காவது கொஞ்சம் ஒட்டிக்கொண்டு இருக்கக்கூடாதா என்று துருவித்துருவிப் பார்த்தேன். அவன் உருவில் என் சாயல் இல்லை; அவன் கருவில் என் சாயல் படிந்தது. அவ்வளவுதான். அவன் சிரிக்கும்பொழுது நான் சிரிப்பேன். நான் சிரிக்கக் கற்றுக்கொண்டதே அவனிடம்தான், "நீ என் தங்கம்" என்று அவனை முகத் தோடு முகம் சேர்த்துக் கட்டி முத்தம் இடுவேன். அந்த மோன நிலை மிகவும் அழகாக இருக்கும்.

அவன் தான் இந்தக் கதைக்கு ஹீரோ, அவன் எதிர் காலத்தில் ஹீரோவாக இருப்பானா ஜீரோவாக மாறுவானா அது தெரியவில்லை. இப்பொழுது அவன் ஜீரோதான் இனி மேல் தான் அவன் ஹீரோவாக மாறவேண்டும்.

பாட்டிக்கு அவன் மீது உயிர்: அவனை விட்டு அவளால் பிரிந்து இருக்க முடியாது. என்னமோ கதை எழுதுகிறவர்கள் ஒரு பிரிவைத்தான் வருணிக்கிறார்கள். இது எனக்குப் பாலையாகத்தான் தெரிகிறது. இந்தச்சின்ன பிரிவையும் பாட்டியால் தாங்க முடியாது. எங்கே அவன் எங்காவது தெருவுக்குப் போய் விடுகிறான் என்று கத்துவாள்.

ஏன் எனக்கே அந்த நிலை ஏற்பட்டுவிட்டது. பேசாமல் தெருப்பக்கம் போய்விட்டான். யாரும் கவனிக்கவில்லை. நான் இந்த உலகத்தை மறந்து 'குருதிப்புனல்' என்னும் நாவலைப் படித்துக் கொண்டிருந்தேன். அது 'வெண்மணி' தீப் பந்தம் குறித்த நிகழ்ச்சி; அதிலே இருந்தவர்கள் அத் தனை பேரும் நெருப்புக்கு இரையாகிவிட்டார்கள். அவர் கள் கரிந்து சாம்பலாகி இருக்க வேண்டும்; அல்லது அவர் கள்குருதி உறைந்து கட்டிப்போய் இருக்க வேண்டும். அது எப்படி நீரோடு சேர்ந்து குருதிப்புனல் ஆயிற்று என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

'எங்கே ரவி' என்ற குரல் என்னைத் தட்டி எழுப்பியது. அப்பொழுதுதான் மறுபடியும் இந்த உலகத்துக்கு வந்தேன். என் அறை என் முன் தெரிந்தது. அது இதற்கு முன்னால் மிகச்சிறிய அறையாக இருந்தது. அது இப்பொழுது நாவல் பிரச்சனைகளைப்போல் விசுவரூபம் எடுத்துக் காட்டியது. மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருந்தன. சுவரில் மாட்டப் பட்டிருந்த 'ரவியின் படம்' என் நெஞ்சைத் திடுக்கிடச் செய்தது. அவன் படமாகவே நிற்கமாட்டான். அவன் ஆறடி உயரம் நிச்சயமாக வளர்வான்.

அதற்குள் அவனைப் பிடித்து இழுத்து வந்து நிறுத்தினார்கள். குற்றவாளியைக் கூண்டில் நிறுத்துவது போல. அப்படி யாரையும் நான் பார்த்தது இல்லை. நான் கோர்ட்டுக்கும், நீதிக்கும் ஏன் போகப் போகிறேன். பள்ளிக் கூடத்து வாத்தியார் முன் முரட்டுப் பையனைக் கொண்டு வந்து நிறுத்திவைப்பார்கள். மற்ற பையன்களுக்கு எல்லாம் ஒரே ஆவல் அடுத்த நிகழ்ச்சி என்ன? ஆசிரியர் ஆவேசக் காரராக மாறுவார். அந்தப்பையனை அடிப்பதில் அவர் வெறியாட்டம் தொடரும். பையன்கள் அப்பொழுது தான் ரொம்ப சீரியசாகப் பாடம் எழுதிக் கொண்டிருப்பார்கள். அந்த நினைவைத்தான் அந்தச் சுற்றுப்புறம் எனக்கு உண்டாக்கியது.

நான் எந்தப் பள்ளிக்கூடத்து ஆசிரியராகவும் மாற வில்லை. 'எங்கேடா போனே தங்கம்' என்று அவனைச் சேர்த்துக்கட்டி என் கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டி னேன்.

அவன் அழவில்லை சிரித்தான். அவன் சிரித்து அழ வைத்த இந்த நிகழ்ச்சி நான் மறக்க முடியாத ஒன்று. பாட்டி அவனைக் கட்டிப் போட வேண்டும் என்றார்கள். நான் அவனை எவ்வளவு நேரம் கட்டிப் போட முடியும். எனக்கு என்னையும் அறியாமல் சமுதாயச் சிந்தனைகள் வளர்ந்து விட்டன. அந்த நிலையில் என் வாழ்க்கை

எனக்கே பிடிக்காமல் போய்விட்டது. அதற்குக் காரணம் என்ன என் நாவல் படிப்புதான். ராசீயின் நாவல்கள் என்னை மாற்றி விட்டன.

பொதுவாக இதற்கு முன்னல் நாவல்கள் படித்து இருக்கிறேன். இப்பொழுது இந்த நாவல்களைப் படித்த பின் நான் அடியோடு மாறி விட்டேன், நான் சாதாரண பெண்ணுக இருக்க முடியவில்லை. என் தங்கையைக் கண்டு வியப்பேன். அவளுக்கு வாழ்க்கை எவ்வளவு நிம்மதியாகச் செல்கிறது. அவளுக்கு எனக் கடமைகள் இருக்கின்றன. சுற்றுப் புறத்தை அவள் ஆராய் வதில்லை.

அவள் கனவுகள் எல்லாம் சாதாரணமானவை. ஆனல் அழகானவை. ஒவ்வொரு பெண்ணும் நினைக்கின்ற சாதாரண ஆசைகள். அதாவது படித்துக் கொண்டே இருப்பது; காலம் வரும் என்று காத்திருப்பது.

நான் நினைக்கிறேன் அந்த நாட்களை என்னைப் பெண் பார்க்க வருவார்கள். அந்த அனுபவங்கள் நினைத்துப் பார்க்கத் தக்கவை திடீர். என்று யாரோ வருவார்கள். என் நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக்கொள்ளும் அவன் எப்படி இருப்பான். ரொம்ப அழகா இருக்கக் கூடாது என்றும் நினைத்தது உண்டு. ஏன் தெரியுமா? திடீர் என்று என் மனம் அவனிடம் லயித்து விட்டால் சனியன் அவனைப் பற்றியே கனவு காண வேண்டியதுதான். அவன் நிச்சய மாக என்னை ஏற்றுக் கொள்வான் என்று எப்படிச் சொல்ல முடியும்.

இந்தக் காலத்து இளைஞர்களைக் கணக்குப் போடவே முடியாது; அவர்கள் இல்லாத ஒன்றைத்தான் எதிர்பார்க் கிருர்கள். ஆரம்பத்தில் பெண் குணமுள்ளவளாக இருக்க வேண்டும் என்பார்கள்; அவர்கள் நெஞ்சு ஆழத்தில்

பணம்தான் வேர் பெற்றுக் கிடக்கும்; அதை வெளியே சொல்ல மாட்டார்கள்; சுமாராக இருந்தால் போதும் என்பார்கள்: ஆனல் முழு அழகு இருக்கிறதா என்று ஆராய்வார்கள். அவர்களால் எதையும் முடிவு செய்ய முடியாது. அந்த நிலையில் அவனிடம் என் நெஞ்சு போகக் கூடாது என்று கெட்டியாகப் பிடித்துக் கொள்வேன்; அது அவனை எட்டிப்பார்க்க வேண்டும் என்று துடிக்கும். இதைப் போன்ற அனுபவங்களுக்குப் பின்னல்தான் எனக்குத் திருமணம் நடந்தது.

அப்பொழுது நான் என் தங்கையைப் போலத்தான் இருந்தேன். என்றாலும் அவளைப்போல் மனநிறைவு எனக்கு இருந்ததே இல்லை. என்னல் அடங்கிக் கிடப்பது என்பது மட்டும் முடியாத விஷயமாகிவிட்டது. அது ஏனோ தெரியவில்லை.

அந்தக் காலத்தில் எனக்கு ரொம்பவும் பிடித்த தலைவர் காமராசர்தான். அது ஏனோ தெரியவில்லை. தலைவர் என்றாலே அவர்தான் நினைவுக்கு வருகிறது. அவரை நினைத்து நினைத்து எனக்கு என்னை அறியாமலேயே அரசியலில் ஒரு பற்றும், அதே சமயத்தில் அரசியல் ஆரவாரத்தில் ஒரு வெறுப்பும் தோன்ற ஆரம்பித்தன.

அரசியல் எனக்குப் பிடிப்பது இல்லை. என்றாலும் அதிலே இருந்து என்னல் விலகவும் முடிவதில்லை. ‘குட்டையிலே ஊறிய மட்டைகள்’ என்று அவர் யாரையோ எதையோ சொன்னது இப்பொழுதும் நினைவுக்கு வருகின்றது.

என்னுடைய வீட்டில் அவருக்கு ஒரு அழகிய படம் அவருக்காக மாட்டி வைத்திருக்கிறேன். அவர் முகத்தில் எப்பொழுதும் மென்மையான புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது. அவர் அன்பு என்னைக் கவர்ந்தது.

அவரை அன்பின் வடிவமாக என்னை அறியாமல் வழிப்பட்டு வருவது வழக்கமாகிவிட்டது.

இந்த உலகத்திலே நாம் தேடிக் கண்டது என்ன அன்புதான். அந்த அன்பைத்தான் என் ரவிக்குத் தருகிறேன். அதை அவன் முழுவதும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று துடிக்கிறேன்.

குருதிப்புனல் நாவலைப் படித்து முடித்தேன். கம்யூனிசம் இந்த நாட்டில் வரமுடியாது என்று ஆசிரியர் கூறுவதை எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். ஜனநாயக சோசலிசம்' என்பது முரண்பாடான ஒன்று என்று அவர் எழுதி இருக்கிறார். ஏன்? தெரியவில்லை. ஜனநாயகம் இருக்கிற இடத்தில் சோஷலிசம் இருக்காது; சோஷலிசம் இருக்கும் இடத்தில் ஜனநாயகம் இருக்காது என்பதை வற்புறுத்திக் கூறுகிறார்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த நாட்டில் ஜனநாயகமும் தலை எடுக்காது; சோஷலிசமும் வராது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. 'காணிக்கை என்ற நாவலைப் படித்தவுடன் இந்தச் சோர்வான எண்ணந்தான் எனக்கு உண்டாயிற்று' 'பொதுச் சொத்தை' அழிக்கும் வன்முறை தலையெடுக்கும் வரை ஜனநாயகமும் வாழாது என்பதை அந்த நாவல் அழகாக விளக்குகிறது.

அந்தக் கதையில் மது, அதி அற்புதமான படைப்பு; சமுதாய உணர்வோடு வாழ்கிறாள். அவள் தன்னைக் காத்துக் கொண்டு ஆண்களோடு பழகினாள்; மாணவர்களோடு பழகினாள். ஆனால் தன் மாண்பினை இழக்கவில்லை. அவள் கூறும் அதி அற்புதமான கற்பனையை நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். 'ஆண்களோடு பழகமுடியும் ஆனால் அதனால் தன்னை இழக்கத் தேவை இல்லை' என்ற கருத்தைத் தெரிவிக்கிறாள். அந்த உணர்வுகளை உயர்வு

படுத்தினல் அது தெய்வீகமாகிறது என்று கூறுகிருள். இது எனக்கு வியப்பாக இருக்கிறது.

என் அம்மா வேறுவிதமாக நினைக்கிருள். என் தங்கை பிறரோடு பழகக் கூடாது என்று கூறுகிருள். என்னைத் தேடிக்கொண்டு யாராவது வருவது வழக்கம். என்ன செய் வது நான் படித்த காலத்தில் அவர்களோடு பழகிவிட் டேன். Co-education கல்லூரியில் படித்துவிட்டு எப்படி அவர்களோடு பழகாமல் இருக்க முடியும்?

அந்த மடப் பசங்களும் சில சமயம் சரியாக நடந்து கொண்டதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் கிட்டே நெருங்கிவிடுவார்கள். எல்லாரையும் அப்படிச் சொல்ல முடியாது. ஒன்று இரண்டு 'லூஸ்கள்' அப்படி நடந்து கொள்கின்றன. அவர்களிடத்தில் சிரித்துப் பேசிப் பழகு வோம். உடனே அவர்கள் என்ன நினைக்கிருர்கள். நாங்கள் அப்படியே இழந்துவிடுவோம் என்று நினைத்துவிடுகிருர் கள். அது எப்படி முடியும்?

அந்தப் பழக்கத்தை என் அம்மா பார்த்து இருக்கிருள். அவர்களோடு பழகுவது பேசுவது அம்மாவுக்குப் பிடிப் பதே இல்லை. ஒருத்தர் மாதிரி ஒருவர் இருக்கமாட்டார்கள். என்பது அவள் அப்பொழுது தரும் அபாய அறிவிப்புகள்.

எனக்கு அப்பொழுது தெரியாது. ஏதோ இந்த உலகத் தில் பெண்ணுக்கு முழுச் சுதந்திரம் இருப்பதாக நினைத்தது உண்டு; அப்படி நினைத்துப் பழகிய நாட்களில் எல்லாம் என் அம்மா என்னைக் கண்டித்தே வந்தாள். எனக்கு அம்மாவின் போக்குப் பிடிப்பதே இல்லை. நான் அதெல் லாம் இப்பொழுது நினைத்து என்ன பயன்?

ரவியின் மேல் எல்லாத் தாய்மார்களும் வைப்பது போல் அளவு கடந்த அன்பு வைக்கிறேன். ஆனல் அதே அன்பை என் அத்தான், அவர்மீது வைக்க முடியவில்லை.

ஏன்? அது தெரியவில்லை. குழந்தை ரவியின் பார்வையில் கள்ளங் கபடமற்ற அன்புதான் தெரிகிறது. அவர் கண்களில் சேர் வன்புதான் தெரிகிறது. என்னை ரவி தாயாக்கினான்; அவர் என்னைப் பேயாக்கினார். இதுதான் வித்தியாசம்.

காமராசன் கவிதையில் ஒரு அடி என் நினைவுக்கு வருகிறது.

கன்னிமை என்பது பிச்சைப் பாத்திரம். தாய்மை என்பது அட்சய பாத்திரம். என்ன அழகான அடிகள்.

"ரவி என்னை உயர்த்துகிறான்
அவர் என்னைத் தாழ்த்துகிறார்"

அவர் என்னிடம் அந்த ஒன்றைத்தான் எதிர்பார்க்கிறார். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. என் சுக துக்கங்களில் பங்குகொள்ளும் கணவனை நான் எதிர்பார்த்தேன். அவர் சுகத்தில் மட்டும் பங்கு கொள்ளத் துடிக்கிறார். சுகத்தில் பங்குகொள்ள அன்பு தேவை இல்லை. ஆசையிருந்தால் மட்டும் போதும். துக்கத்தில் பங்குகொள்ள அன்பு தேவை. இந்த இரண்டாவது அவரிடம் நான் காணமுடியவில்லை.

எப்படியும் அவரோடுதானே வாழ்ந்து தீரவேண்டும். என் உடலைத்தான் அவர் கேட்கிறார். என் உள்ளத்தைக் கேட்டால் தர முடியும். அதை ஒரு நாள்கூடத் தட்டிக் கொஞ்சியது இல்லை. இந்த உடலை இதமாக்க நினைத்து என்னைப் பதம் பார்க்க அறியும் அவர் என் நெஞ்சு குளிர இனிமையாகப் பேசும் கனிவை நான் பார்த்தது இல்லை. அவரைப் பொறுத்த வரை அந்த இதயம் இரத்த ஓட்டத்தால்தான் நிரம்பிக் கிடந்தது. அன்பு ஓட்டத்தை அது அறிந்ததே இல்லை.

எனக்கு இந்தச் சமுதாய உணர்வோடு ஒன்றிப் போகப் வேண்டும் என்ற உணர்வு எப்படியோ வளர்ந்து விட்டது. அதற்குக் காரணம் என்ன? தலைவர் காமராசர் தான். என்னை அவர் ஒரு முறை நான் படித்த கல்லூரியில் அன்பு ஊறப் பார்த்தார். கடவுள் வாழ்த்துப் பாடச் சொன்னார். நான் நாட்டு வாழ்த்துப் பாடினேன். அது அவருக்கு வியப்பைத் தந்தது.

"ஏம்மா கடவுள் வாழ்த்துதானே முதலில் பாட வேண்டும் அதுதானே பழக்கம்" என்றார்.

"கடைசியிலே நாட்டுப்பண் பாடுவது எனக்குப் பிடிப்பது இல்லை" என்றேன்.

அது அவருக்கு விளங்கவில்லை. எனக்கு விளங்கியது.

நாட்டு வாழ்த்துக்கு முதலில் இடம் கொடுக்கவேண்டும். நாடுதான் முதல் கடவுள் பின்னால் வைக்கவேண்டும் என்ற உணர்வு என்னுள் ஓடியது.

அது அவருக்கு ஆச்சரியாக இருந்தது. "இதை யாருமே இதுவரை சொல்லவே இல்லையே" என்றார்.

நான் ஒன்றும் அப்படிப்பட்ட அறிவாளியல்ல அந்த மேதைக்கு எடுத்துச் சொல்ல; என்றாலும் அவர் என்னைப் பாராட்டியது இன்னும் மறக்க முடியவில்லை.

என் குரல் நன்றாக இருந்தது என்று பாராட்டினார்.

ரொம்ப பேருக்குத் தெரியாது; களிப்படைந்த உள்ளத்தில்தான் இசையும் பிறக்கும். குரல் இனிமை மிகவும் அவசியம். உள்ளத்து இனிமை குரலில்தான் வெளிப்படுகிறது என்பதைப் பல பேரிடம் கவனித்து வந்திருக்கிறேன்.

ரொம்ப பேருக்குத் தெரிவதில்லை. எப்படி வேண்டு மானாலும் பேசிவிடலாம் என்று நினைக்கிறார்கள். அப்படிப் பேசுவது அநாகரிகம் என்றுதான் நினைக்கிறேன்.

"பாடுவது ஒரு தனித் தன்மை; அது எல்லாருக்கும் வராது" என்று என் ஆசிரியை ஒருவர் பாராட்டி இருக் கிறார். அவர்கள் இப்பொழுது எங்கே இருக்கிறார்களோ தெரியவில்லை. வேலைவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். அவள் கணவனுக்கு எங்கேயோ மாற்ற லாம். அவள் வேறு என்ன செய்ய முடியும்.

"நான்தான் அவருக்குச் சமைத்துப் போடணும் ஒண்டியா அவர் எப்படிக் காலம் கடத்த முடியும்" என்று என்னிடம் அன்பு குழையப் பேசுவாள் அந்த ஆசிரியை.

"ஏம்மா அதுக்காக ஐந்நூறு ரூபாய் உத்தியோகத்தை இழக்க முடியுமா? என்று கேட்டேன்.

"உத்தியோகமா பெரிசு?"

அந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்.

அவளுக்கு அதிலே ஒரு லட்சியம்; அவள் லட்சியக் கனவு தன் கணவனிடம் இருந்தது. என் லட்சியக் கனவு கள்.

# 2

லட்சியம் உயர்ந்ததுதான். நாம் மட்டும் உயர்ந்த லட்சியங்களை வைத்துக் கொண்டு இருக்கிறோம்; சுற்றுப் புறம் அவற்றை அலட்சியப்படுத்தும்பொழுது அந்த லட்சியங்கள் பாழாகின்றன. பாழாகக் கூடாது. அதற்குத் தான் என் வாழ்வின் போராட்டமே.

'பாலிய சிநேகிதன்' என்று அவனைக் கூறமுடியாது. பாதியில் வந்த நண்பன்தான் அவன்; அவனிடத்திலே ஒரு லட்சியக் களையைக் காண்கிறேன். அதனால்தான் அவனிடம் என் மனம் தாவுகிறது. யாரோ சில பேர் உயர்ந்த லட்சியங்களோடு வாழ்கிறார்கள் வாழ முயல்கிறார் கள். அதனால்தான் இந்த வாழ்க்கை வாழப் பிடிக்கிறது.

அந்த ஆசிரியையை நினைத்துப் பார்க்கிறேன். அவளுக் குக் கிடைக்க முடியாத உத்தியோகம் அது. அவளுக்கு ஏதோ ஒரு அதிருஷ்டம் என்றுதான் கூறமுடியும். இந்தக் காலத்தில் ஒருவர் சுமாராக வாழ்க்கையை நடத்துவதையே இப்படித்தானே சொல்லிப் பழகிவிட்டோம். அதனால்தான் நான் இப்படிச் சொல்ல வேண்டியது ஆயிற்று. அதாவது தகுதிக்கு ஏற்பத் தொழில் கிடைத்தாலேயே அதை அதிருஷ்டம் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. ஏன் அந்தத் தகுதிக்கு ஏற்பப் பல பேருக்கு வாழ்க்கை அமை வது இல்லை அதனால்தான்.

அவள் தன் கணவன் மீது உயிர் விடுகிறாள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆச்சரியம் அவள் போக்கை ஒட்டி அல்ல; எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காதது பற்றி; அவள் ஆசிரியை என்றாலே என்னைவிட மூத்தவள் என்று தான் நினைப்பார்கள். மூத்தவள் தான். ஆனால்

அதிக வித்தியாசம் இல்லே. எல்லாம் நாலு வருஷம்தான் 'சீனியர்'. அவளேப் பார்த்தால் அப்படித் தெரியாது. கொஞ்சம் குள்ளமாக இருப்பாள், அது அவளுக்கு வய தைக் குறைத்துத் தருகிறது.

நெட்டைப் பெண்களேப் பார்த்தால் யாருக்குமே அவர்களுக்கு வயது ஆகிவிட்டது போலத் தோன்றும். அதிலே நானும் ஒருத்தி. நான் நெடிலாக வளர்ந்து விட்டேன். அவள் குறிலாக நின்றுவிட்டாள். வளர்ச்சியில் பெரிய வித்தியாசம் வயதில் வித்தியாசத்தை மறைத்து விட்டது. என்னே அக்கா என்பார்கள். அவளேத் தங்கை என்பார்கள்.

எப்படியோ ஆசிரியையோடு பழகிவிட்டேன். அப்ப டிச் சில ஆசிரியர்களோடு பழகவும் முடிகிறது. நான் சொல்வேன், 'மடேம் நீங்கள் கல்லூரியில்தான் ஆசிரியர் வெளியே அல்ல' என்பேன். அங்கு மட்டும் நான் உனக்கு ஆசிரியர் அல்ல; நான் மாணவி என்பாள். அதைச் சிந்தித் தால் சிரிப்பு வரும்,

அவள் சொல்கிருள், ஆசிரியர்கள் முதலில் தம்மை மாணவராக மதித்துக் கொள்ள வேண்டும்: இன்னும் நிறைய படிக்க இருக்கிறது என்று நினேத்துக் கொள்ள வேண்டும். வீட்டுக்கு வந்தால் சங்கீதம் பாடிக் கொண் டிருக்கக் கூடாது என்பாள். அவள் எதைக் குறிப்பிடு கிருள் யாரைக் குறிப்பிடுகிருள் என்பது எனக்கு விளங்கு வது இல்லே.

அவள் யாரோ தம் உடன் பணி செய்யும் ஆசிரியை பற்றி அப்படிப் பேசிஞள் என்பதைத் தெரிந்து கொண் டேன். அதாவது வீட்டில் எதையும் படிப்பதில்லே என் பதைத்தான் அப்படிக் குறிப்பிட்டாள் என்று நினேக் கிறேன்.

அந்த ஆசிரியரைப் பற்றி நினைக்கும்பொழுது பல ஆசிரியர்கள் என் நினைவுக்கு வருகிறார்கள். என்ன செய்வது. எதுவும் ஓடாவிட்டால் அவர்களைப் பற்றித்தான் நினைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. நூலகத்தில் சதா உழன்று கொண்டு இருப்பார். பார்த்தால் பரிதாபமாக இருக்கும், இவருக்குச் சொந்த மூளையே இருக்காதா என்று நினைப்பேன். அதாவது ஏதாவது குறிப்பு எடுத்துக் கொண்டு இருப்பார். போர் ஒரே போர் சொந்தமாக ஒன்றும் சொல்லத் தெரிவதில்லை.

அவரிடம் ஒரு கெட்ட பழக்கம். வகுப்பில் எங்களை நிமிர்ந்து பார்க்கமாட்டார். ஏன் தெரியாது. ரொம்ப நாளாகத் தெரியாது. பிறகுதான் தெரிந்து கொண்டேன். அவருக்கு என்று எந்தத் தனித் தன்மையும் கிடையாது என்று. அவர் ஒரு புத்தகப் புழு. சதா வகுப்பில் எழுத வைத்துக் கையொடிப்பார்.

இன்னொருவர் இருக்கிறார். உரத்த குரலில் பேசுவார். அங்கே நாங்கள் இருப்பது நாற்பது பேர்தான். அவர் பொதுக் கூட்டத்தில் பேச வேண்டியவர். காது புளித்து விடும். நாங்கள் கவனிக்கவில்லை என்றால் அவர் குரல் மேலே உயர்ந்துவிடும். எங்களைப் பேச ஓட்டாதபடி தடுக்க ஒரே வழி அவர் கூச்சல் போட்டுப் பேசுவது.

சிலபேர் அவர்கள் பேசிக்கொண்டே இருப்பார்கள். நாங்கள் பேசிக் கொண்டே இருப்போம். ரயில் வண்டியின் ஓட்டம் அப்படித்தான். அதன் இரைச்சலில் நாம் பேசுவது மற்றவர்களுக்குக் கேட்பதில்லை. அந்த நாட்களை எண்ணிப்பார்ப்பது உண்டு.

லட்சியமே இல்லாத ஆசிரியர்களுக்கிடையே அந்த ஆசிரியையிடம் லட்சியம் இருந்தது. அவள் பணத்தை மதிப்பதே இல்லை. அதற்காக நாம் அடிமை ஆகக்கூடாது.

என்று சொல்லுவாள். அது நமக்கு அடிமையாகக் கிடக்க வேண்டும் என்று சொல்லுவாள். அது எனக்கு அப் பொழுது விளங்கியது இல்லை. அவள் வேலையை விட்ட பிறகுதான் தெரிந்தது நிலையான தொழிலைவிட்டுத் தன் கணவனோடு வாழ வேண்டும் என்று நினைத்தாள்; நினைப் பதில் என்ன லட்சியம் இருக்கிறது; செயல் படுத்தினாள். அதில் அவள் லட்சியத்தைக் காணமுடிந்தது.

அப்படி ஒன்றும் அவள் வசதி மிக்கவள் என்றும் கூற முடியாது; வசதி இல்லை என்றும் கூறமுடியாது. நான் மட்டும் என்ன? எனக்கு என்ன இருக்கிறது. அம்மா எனக்கு எழுதிவைத்த வீடு அதில் வரும் குடிக்கூலி. அதை மாதம் மாதம் பென்ஷன் போல வாங்கி வருகிறேன், என் கணவன் மட்டும் என்னை எதற்காக மணம் செய்துகொண் டார். அந்த வீட்டுக்குத் தானே.

இதில் ஒரு ஆச்சரியம். அதையும் சொல்லிவிடுகிறேன். நேரே அவர் என்னை வந்து பார்க்கவில்லை. வீட்டைத்தான் வந்து பார்த்தார். வீடு அவருக்குப் பிடித்து இருந்தது, இப் பொழுது விற்றால்கூட ஐம்பதினாயிரம் போகும். திருடன் கிட்டே கொடுத்தால் கூட அதற்கு நாற்பதாயிரம் மதிப்பு இருக்கிறது என்று சொன்னாராம். 'காய்ந்த மாடு கம்பங் கொல்லையிலே புகுந்தாற் போல' என்று சொல்வார்கள். பாவம் அவர் வறுமை அவருக்குத் தெரியும். திட்டமிட்ட வாழ்க்கை வாழ நினைத்தார். அதில் அவர் கைப்பற்ற நினைத்தது முதலில் இந்த வீடு; பிறகு தான் நான்.

பாவம் அவரை மட்டும் குறை கூறிப் பயன் என்ன? யாரோ சிலர்தான் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் விரும்பும் கணவனைப் பெறுகிறார்கள். மற்றவர்கள் மெல்ல மெல்ல விரும்பத் தொடங்கி விடுகிறார்கள். இதுதான் உலக உண்மை. என் ஆசிரியை சினேகிதி அதுதான் ஆஷா. அது தான் அவள் பெயர். அதைப் பச்சைத் தமிழில்

சொன்னால் 'ஆசை' என்று தான் சொல்ல வேண்டும். அவள் கணவனிடம் அளவு மிக்க ஆசை வைத்திருந்தாள்.

உண்மையில் அவளைக் கண்டு நான் ஒரு வகையில் பொறுமைப்படுகிறேன். அவள் என்னைவிட அழகி என்று கூறமுடியாது. அவள் வாழ்வில் ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதை அவள் எப்படிச் சொல்லுவாள். சொல்லவும் கூடாது தான். அதனால் தான் அவள் அவனை அப்படி உயிர் விட்டு நேசிக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

என் மகன் ரவியின் முகத்தைப் பார்ப்பேன். "ஏனடா நீ பிறந்தாய் என்று கேட்பேன். நீ பிறக்காவிட்டால் நான் ஹாப்பியாக' ஏதாவது தொழில் செய்து கொண்டு வாழ்வு பூராவும் ஒரு மிஸ்ஸாகவே காலம் கடத்தியிருப்பேன்" அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

"அம்மா நீ விரும்பித்தான் நான் பிறந்தேன்" என்று அவன் சொல்வது போல இருந்தது.

இந்தக் காலத்திலே வளர்ந்த பிள்ளைகள் பெரியவர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள், "நீ ஏன் பெற்றுக் கொண்டாய்? பெற்றுக் கொள்ளத் தெரிந்தது காப்பாற்றத் தெரியவில்லையா? என்று பச்சையாகக் கேட்கிறார்கள்.

அவர்களைப் பெற்றபோது அவர்கள் சின்னக்குழந்தைகள். இப்பொழுது அவர்கள் மிகப் பெரியவர்கள் ஆகி விடுகிறார்கள். எந்தக் கேள்வியைக் கேட்கக் கூடாதோ அதைக் கூசாமல் கேட்பதைப் பார்த்திருக்கிறேன். எதை நினைவுபடுத்தக் கூடாதோ அதை நினைவுபடுத்தி விடுகிறார்கள்.

அதே நினைவை ரவி சிரித்து எழுப்பினான்.

அவனுக்கு நான் என்ன சொல்ல முடியும்.

"மனிதன் படைப்புக்குத் துணை செய்கிறான்; அவன் படைப்பதில்லை" என்ற பேருண்மையை எப்படி அவனிடம் சொல்லமுடியும்.

அவனுடைய மென்மையான விரல்கள் என் கன்னத்தைத் தடவிக் கொடுக்கும். அவன் தலைமயிர் முன்னால் அலை அலையாக எழும். அதைப் பின்னால் தள்ளுவேன்.

நான் எங்காவது போய்விட்டு வந்தால் அவன் ஒரே அழுகை அழுவான்.

ஒரே கோபமாக இருப்பான். அவன் முகத்தில் தான் எத்தனை கோணல்கள். அங்கே விளையாடிக் கொண்டு இருக்கும் பொம்மைகளைப் போட்டு அடிப்பான்.

"அடிக்காதடா கண்ணு" அது என்னடா செய்தது" என்று அவனிடம் பேசுவேன்.

அங்கே இருந்து வந்து ஓங்கி ஒரு அடி கொடுப்பான்.

அந்த அடியை அன்போடு ஏற்றுக்கொள்வேன். அவன் கைகளில் அடிபடக் கொடுத்து வைக்க வேண்டும். என்று நினைத்துச் சந்தோஷப்படுவேன். கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் ஓடிவந்து என் கன்னத்தைத் தொடுவான்.

"முத்தா கொடுடா கண்ணு" என்று கெஞ்சுவேன்.

அவன் வாயிதழ்கள் என் கன்னத்தைச் சுவைக்கும். என் கன்னம் அவன் வாயிதழ்களைச் சுவைக்கும்.

அதற்குப் பிறகு அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியாது. நான் கொஞ்சம் நேரம் தூக்கி வைத்துக் கொள்வேன். அதோ பாரு என்று சன்னலைக் காட்டுவேன்.

அதே சன்னல் எனக்கு எவ்வளவோ உதவியிருக்கிறது. கன்னிப் பெண்ணுக்கும் சன்னலுக்கும் உள்ள உறவை ஒரு காவியமாகவே எழுதலாம். என்ன செய்வது வீட்டிலே பொழுது போகாது. சுற்றிச் சுற்றி வருவேன். வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது. ஆனால் இந்த வெளியுலகத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை பிடித்துத்தள்ளும்! 'வயசு பொண்ணு' என்று எனக்கு முத்திரை குத்தி வைத்தார்கள்.

என் அம்மா எடுத்ததற்கு எல்லாம். இதைச் சுட்டிச் சுட்டிக் காட்டுவாள். வயசான கிழவர்களையும் கூடத்தான் இந்த உலகம் இப்படிச் சுட்டிக் காட்டுகிறது. கிழவருக்கு வயது ஆகிவிட்டது. நாங்கள் வயதை எட்டிப்பிடிக்கிறோம்.

அதே சன்னலை இந்தக்கண்கள் ஊடுருவிப் பார்க்கும். இந்த உலகம் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கும். 'வயது' உள்ளவர்களைப் பார்ப்பதில் என் உள்ளத்துக்கு ஏன் ஆசை அது தெரியாது. எனக்கு ஆண்களைப் பார்க்கப் பிடிப்பது இல்லை. அந்தச் சன்னலிலும் யாராவது பெண்கள் அழகான சேலையுடுத்திச்சென்றால் பார்த்துக்கொண்டு இருப்பேன். அவள் அழகை ரசிக்கமாட்டேன்; சேலையைத் தான் ரசிப்பேன். பெண்மனமே தனி இந்த வகையில் என்பதைப் பின்னால் எண்ணிப் பார்த்து இருக்கிறேன்.

பாட்டிக்கு என்னைப்பற்றி என்ன தெரியும். அவள் லட்சியம் எல்லாம் நான் என் கணவனோடு வாழவேண்டும் என்பது. நனவோட்டம் என்னும் நாவலைப் படித்து இருக்கிறேன். அதில் உஷா வாழாவெட்டியாக மாறிவிட்டாள். அவளுக்கு என்ன துணிச்சல். துணிந்து மறுவிவாகம் செய்துகொண்டுவிட்டாள். அந்த ஆசிரியர் மிகவும் துணிச்சல்காரராகத்தான் இருக்க வேண்டும். ஒரு பெண் துணிந்து விவாகரத்து செய்துகொள்ள வழிகாட்டுகிறார். அது பெண்ணுரிமைக்குப் போராடும் எழுத்தாக உள்ளது.

என் கணவன் அவ்வளவு பொல்லாதவர் என்று கூற முடியாது. நான் வேண்டும் என்றுதான் துடிக்கிருர். ஆனுல் எனக்குத்தான் அவரைப் பிடிப்பது இல்லே. இந்த மாதிரி அனுபவம் எந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்டு இருக்காது. ஏற்படவும் கூடாது.

அவருக்கு நான் முழுக்க முழுக்க மனேவியாக இருக்க வேண்டும் என்று நினேக்கிருர். பின் வேறு எப்படி நான் இருக்கமுடியும். அதாவது நான் இந்தச் சமூகத்தில் யாருடனும் பழகக்கூடாது; சிரிக்கக்கூடாது; பேசக்கூடாது என்பதுதான் அவர் நோக்கம். ஒரு நிமிஷம் என்னேவிட்டு அவருக்குப் பிரிய மனமே வராது.

ஆஷா அதுபோலத்தான் தன் கணவனிடம் நடந்து கொள்கிருள். என்ஞல் அவரை க்ஷணம்கூட விட்டுப் பிரிந்து இருக்க முடியாது என்கிருள்.

"இதோ பாரு நான் வெட்கம் விட்டுச் சொல்லுகிறேன்." என்னமோ சொல்லுவாள். என் பேஞ அதை எழுத மறுக்கிறது. சிலவற்றை வாய்விட்டுச் சொல்லிவிடுகிருர்கள். அதை எப்படி எழுத்தில் எழுத முடியும். எழுதக்கூடாது.

சிலருடைய வாழ்க்கையிலே பயங்கரமான ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை அவர்கள் எப்படிப் பேச முடியும். அவளுக்குக் கல்யாணம் சீக்கிரமாக ஆகவில்லே. அது அவள் மீது குற்றமில்லே. யாரும் அவளேக் கண்டு ஆசைப்படவில்லே. அவ்வளவுதான். 'ஆஷா' என்ற பெயருக்கும் அவளுக்கும் ரொம்பதூரம் இருந்தது.

ஏன் ஆசைப்படவில்லே. என்னேக் கேட்கிருர்கள். நான் எப்படிச் சொல்லமுடியும். அவளே சொல்லுகிருள். நான் குள்ளமாக இருக்கிறேன். யார் வந்து பெண்ணேப் பார்த்தாலும் முதலிலே என் உயரம்தான் அவர்கள் கண்களில் படுகிறது.

வெளியிலே ஆபீசுக்குப் போனால் 'ஹை ஹீல்ஸ்' செருப்பு போட்டுக் கொள்ளலாம். வீட்டிலே எப்படிப் போட்டுக்கொள்வது.

பயங்கரமான ரகசியம் என்று சொன்னேனே அது இதுதான். அவள் ஒருவனை ஆசைப்பட்டாள். எப்படியோ தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இதைப்போய் அவள் எப்படிச் சொல்லுவாள். அவள் கொஞ்சம் வசதி குறைவு. அந்தக்காலத்திலே டியூஷன் சொல்லித்தான் படிப்பை முடிக்க வேண்டி இருந்தது. அவளுக்கு ஒரே பயம். வயசு எங்கே ஆகிவிடுமோ என்று.

அவள் அதைச் சொல்லவில்லை. எப்படி அதைச் சொல்லுவாள். பின்னால் அந்தப் பாவி அவளை விடவில்லை. அடிக்கடி அவள் பின்னால் சுற்றிக்கொண்டு இருந்தான். 'ருசி கண்ட பூனை' என்று அவள் அவனைப்பற்றிச் சொல்லவில்லை. நானாக அப்படி நினைத்துக்கொண்டேன்.

அவனிடமிருந்து தப்புவதற்கு அவளுக்கு வழியே தெரியவில்லை.

அதைப்போல நானும் நடந்துகொள்ள வேண்டும் என்று என் 'அவர்' எதிர்பார்க்கிறார். இங்கேதான் எனக்கும் என் அவருக்கும் ஏற்படுகின்ற குழப்பம். நான் என் நண்பரோடு பழகினேன். அது கலை சம்பந்தமானது. அவருக்குத் திரைப்படம் ரொம்பவும் பிடிக்கும். எனக்கும் அதில் ஒற்றுமை. ரெண்டுபேரும் சேர்ந்து போய்ப்பார்த்து இருக்கிறோம்.

அது ஒரு தனி அனுபவம். இந்த உலகத்துக்கு அது விளங்காது.

முதல் முதலிலே இந்தத் தொடர்பு தியேட்டரில்தான் ஏற்பட்டுவிட்டது. எனக்குப் படம் ரிலீசானவுடன் உடனே பார்த்துவிடவேண்டும் என்று ஆசை அஃதிலே ஒரு நன்மையும் இருக்கிறது.

சிலபேருக்கு முதல் புத்தகம் வெளிவந்ததும் தன் பிரிய மானவர்களிடமிருந்து வாங்கிவிட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

நான் படிக்கிற காலத்திலே அப்படித்தான் அந்த ஆசிரியரும் 'கவிதைகள்' எழுதுவார். நல்ல நாவல்கள் எழுதக்கூடிய ஆசிரியர் அவர் வீணாகக் கவிதைகளை எழுதிக்கொண்டு இருப்பார். அது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

அவர் ஒரு புதுக்கவிதைப் பைத்தியம். சின்ன நிகழ்ச்சி ஒன்று பார்த்தாலும் உடனே கவிதை எழுதிவிடுவார். அது எப்படித்தான் அந்தக் கற்பனை உதயமாகிறதோ ஆச்சரியமாக இருக்கும். அவர் தமிழ் நடை நன்றாக இருக்கும். இனிமையான சொற்கள் அருவிபோலச் சுகமாக இருக்கும். அந்த நடை நல்ல நாவல் எழுதலாம். போயும் போயும் உதிரிகளாக வரும் கவிதைகளை எழுதிக் காலத்தைப் போக்குவார்.

இன்னொருவர் கவிதை எழுதுவார். அது வெறும் சொல்லடுக்குகளாக இருக்கும். ஆகா, ஓகோ என்று அலட்டிக் கொள்வார். தாம் கவிதைக்காகவே பிறந்தவர் என்று அலட்டிக்கொள்வார். அதுவேறு, யாரோ ஒரு பரிசு கொடுத்துவிட்டார்களாம். நான் பரிசுபெற்ற கவிஞர் என்று எப்பொழுதும் சொல்லிக்கொள்வார். போட்டியிலே யாருக்காவது பரிசு தந்துதானே ஆகவேண்டும்.

இன்னொருவர் அவர் தன்னை மரபுக் கவிஞர் என்று சொல்லிக்கொள்வார். அதாவது ஓசை கெடாமல் பாடுகிறார் என்று சொல்லிக்கொள்கிறார். அவர் எப்பொழுதாவது ஒரு முறை எழுதுவார் அவ்வளவுதான்.

இன்னொருவர் இருக்கிறார். அவர் பட்டிமன்றப் பேச்சாளர். எந்தப் பொருளையும் வெட்டியும் ஒட்டியும் பேசுவார். அவருக்குக் கைதட்டல் என்றால் உயிர். அந்த 'ஓசை

கேட்டுக் கேட்டுப் பழகிவிட்டது. அந்த ஒலியைக் கேட்காவிட்டால் அவருக்குத் தூக்கமே வராதாம். அதற்காக அவர் அதை 'டேப் ரிகார்டு' பண்ணி வைத்திருக்கிருராம். எந்த நாளிலும் பேச்சுச்கு வாய்ப்புக் கிடைக்காவிட்டால் அந்த டேப் ரிகார்டரைப் போட்டுப்பார்த்துவிட்டு அந்தக் கைதட்டலைக் கேட்டபிறகுதான் அவருக்குத் தூக்கம் வருமாம்.

எனக்கு இந்தக் கவிஞர்களைப் பார்த்தால் சில சமயம் சிரிப்பு வரும். அதாவது அவர்கள் தங்கள் பெயர்களின் முன்னுல் 'கவிஞர்' என்ற பட்டத்தை மறக்காமல் ஒட்டிக் கொள்கிருர்கள்.

எங்கேயோ அரசியல் கூட்டங்களிலேகூட இந்தப் பெயர்களைக் கேட்டு இருக்கிறேன். அமைச்சர்கள் கூடத் தங்களை அமைச்சர்கள் என்று சொல்லிக் கொள்வதில் திருப்தி பெறுவது இல்லை. இந்தமாதிரி கலையம்சம் பொருந்திய பெயர்களைச் சேர்த்துக்கொள்வதில் சந்தோஷம் அடைகிருர்கள்.

இவற்றை எல்லாம் படிக்கிற காலத்தில் ரசித்து இருக்கிறேன், அந்த ஆசிரியர் ஒரு கவிதைப் பயித்தியம் தான். போதாக் குறைக்கு மற்ற ஆசிரியர்கள் தூண்டி விட்டு விடுவார்கள். 'உங்கள் நூல் வெளிவர வேண்டும்' என்று தொடர்ந்து கூறிவிடுவார்கள். அவர்கள்மேல் என்ன தவறு இருக்கிறது. இவர் விடாமல் வருகிறவர் போகிறவர்களை நிறுத்தி வைத்துத் தான் எழுதிய கவிதைகளை படித்துக் காட்டுவார், அவர்கள் படித்து ரசிப்பார்கள். உள்ளுக்குள்ளே சிரித்துக் கொள்வார்கள். இவர் அவர் முகத்தைப் பார்ப்பார், அவர்கள் இவர் முகத்தைப் பார்ப்பார்கள். கடைசியிலே விட்டால் போதும் என்று ஆகிவிடும். அதற்காக இந்த நூல் கட்டாயம் வரவேண்டும் என்று சொல்லு வார்கள்' இவருக்கு ரொம்ப திருப்தி.

பாவம் நினைத்தாலே பரிதாபமாக இருக்கிறது. புத்தகம் வெளி வந்தது. இவராகப் பார்க்கிறவர்களிடத்தில் ஒரு பிரதியைக் கொடுப்பார். படித்துச் சொல்லுங்கள் என்று கெஞ்சுவார், உங்கள் கருத்தை எழுதுங்கள் என்பார்.

எல்லாம் 'ஓசியிலே'யே அவர்கள் வாங்கிக் கொள் வார்கள். அவர் எழுத்துக்குத்தான் மதிப்பு இல்லை, பாவம் காசு செலவு செய்துதான் அச்சிட்டு இருப்பார், காகித விலையாவது' கொடுத்தால்தானே நியாயம். கொஞ்சம் கூட அவர்களும் சிந்திப்பதில்லை.

இவருக்கு அவர்கள் படித்தால் போதும் என்று இருக்கும். புத்தகங்கள் கொடுப்பார். மறுபடியும் அவர் களைச் சந்திக்கும் பொழுது சிரித்துக் கொண்டே கேட்பார். 'எப்படி கதை' என்று கேட்பார்.

அவர்கள் சிரிப்பார்கள்.

அதாவது அவர்களுக்குப் படிக்க நேரம் கிடைப்பது இல்லை என்பதை அந்தச் சிரிப்பிலே வெளியிடுவார்கள். 'பிறகு படித்துச் சொல்லுங்கள்' என்று விடாமல் அவரும் தொடர்வார்.

'படிக்கிறேன்' என்று ஆறுதல் கூறுவார்கள். இதை யெல்லாம் ரசித்த நான் அவரிடம் முதல் பிரதியைக் கேட்டு வாங்கினேன். அவருக்கு ரொம்பவும் திருப்தி, அவரிடம் அந்தப் புத்தகத்தை நீட்டி அவர் கையெழுத் தைக் கேட்பேன், அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே, சொல்ல முடியாத மகிழ்ச்சி. பாவம், எழுத்தாளர்க்கு வேறு என்ன மகிழ்ச்சி. யாராவது ரசிகர்கள் வேண்டும் அவ்வளவு தான்.

பெண்கள் தான் பாராட்டுக்கு மயங்கிவிடுவார்கள் என்று கேள்விப் பட்டு இருக்கிறேன். என் அனுபவம்

அல்ல அது. பொதுவாக இப்படிப் பேசக் கேட்டு இருக்கிறேன். அது பொய்; அவர்கள் அந்த விஷயத்தில் ஏமாளிகள் அல்ல; ஆனல் இந்த எழுத்து எழுதுபவர்களைச் சுலபமாக ஏமாற்றி விடலாம்.

'உங்கள் எழுத்து நன்றாக இருக்கிறது' என்று சொல்லி விட்டால் போதும், அவ்வளவு தான். இந்த உலகத்தையே மறந்து விடுவார்கள்.

நான் அவர் 'ரசிகை'. அதிலே எனக்கு ஒரு திருப்தி. அந்தக் காலத்திலே இதெல்லாம் ஒரு 'ஹாபி' என்றுதான் கூற முடியும்.

அவர் கவிதை நிறைய 'காதலைப்' பற்றி அதிகமாக இருக்கும். 'பாவம்' பரிதாபமாக இருக்கும். இந்த மனுஷன் ஏன் இதை இப்படிப் பாடி வைக்கிறார் என்று தோன்றும், அவருக்கு மணமாகவில்லை என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன். அதுமுதல் அவரிடம் நெருங்குவது இல்லை. ஏன் நான் அவருக்கு ஒரு பிரச்சனையாக மாறக் கூடாது என்பதால் தான்,

அந்த முதல் பிரதியைப் பெறுவதோடு அவரிடமிருந்து விலகிக் கொள்வேன்.

அவர் மீது எனக்கு வெறுப்பு அல்ல. பாவம் நாம் ஏன் அவர் வாழ்க்கையில் குறுக்கே பாயவேண்டும் என்று நினைப்பேன்.

இந்த ஆண்கள் ஏமாளிகள். பாவம் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது தன்னடக்கத்தை இழந்து விடுவார்கள். அப்புறம் அவர்களைப் போல ஒழுக்கப் பிரச்சனைகளை விவாதிப்பவர்கள் இருக்க மாட்டார்கள்.

அவரிடம் முதல் பிரதி வாங்கும் பழக்கம்தான் முதல் படத்தைப் பார்க்கும் பழக்கத்துக்குக் கொண்டு சென்று விட்டது.

"ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்" என்று யாரையோ குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது. 'காமராசர் ஒரு சகாப்தம்' என்ற பெயரை எங்கோ கேட்ட நினைவு; அது ஒரு கவிதைப் புத்தகம் என்று நினைக்கிறேன். அவர் அரசியல் காமராசர், இவர் கவிதையில் காமராசர். இருவரும் இரண்டு புதிய சகாப்தங்களை உண்டாக்கினார்கள். உண்டாக்கி இருக்கிறார்கள்.

மிகவும் கண்ணியமான அரசியலை நடத்தித் தந்தவர் காமராசர். எனக்குப் பொழுது போகாவிட்டால் காமராசரைப் பற்றி நினைவு வரும், இல்லாவிட்டால் நான் படித்த கல்லூரி நினைவுகள் வரும். நான் படித்த ஆண்டு கள் இரண்டும் என் வாழ்வில் மறக்க முடியாதவை.

நான் மேல் படிப்புப் படித்துக் கொண்டிருந்த நாட்கள் அது, இலக்கியம் பயின்றேன். அந்த நாட்கள் வீணாகி இருக்கின்றன. நீளமான கோட்டு, நெற்றியில் சந்தனப் பொட்டு இப்படி ஒரு ஆசிரியர். அவர் திருக்குறளைத் தவிர வேறு எதையும் ஒப்புவித்து நான் கண்டது இல்லை. தனக்குத் திருக்குறள் தலைகீழ்ப்பாடம் என்று சொல்லிக் கொண்டு இருப்பார். எதையுமே அவர் இந்த இரண்டு அடிகளால் தான் அளப்பார். அதற்கு மேல் அவருக்குப் படிப்பிக்கத் தெரியாது.

இன்னொரு பைத்தியம் இருந்தார். திடீரென்று சித்தர் உலகத்தில் போய் விடுவார். அப்பொழுது எல்லாம் நான் சொன்னேனே அந்தச் சினிமா நண்பன் அவர் முன் சீட்டில் உட்கார்ந்துக் கொண்டு இருப்பார் அவர் மீது ஒரு அம்பு போடலாம் போலத் தோன்றும். ஏன் இந்த எண்ணம் வந்தது தெரியாது.

எங்கள் மீது இந்த ஆண்பிள்ளைகள் காகித அம்பு போடுவார்கள். நான் சில சமயம் அதைப் பிரித்துப் பார்ப்

**பேன்:** அவர்களுள் ஒருவன் தான் காதல் கடிதம் எழுதி இருந்தான். அவனைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அந்தக் கூட்டத்தில் நான் எப்படி அவனைக் கண்டு பிடிக்க முடியும்.

அந்தக் கடிதம் உண்மையிலேயே ஒரு அழகிய கவிதையாக இருந்தது. அந்தக் கவிதைப் பயித்தியம் ஆசிரியர் எழுதும் கவிதையைப் போலவே இருக்கும்.

"நீ எங்கே இருக்கிறாய்?
அங்கே நானும் வந்தால் என்ன?
நாம் இருவர் ஆவோம்
அது தனி உலகம்"

என்று அழகாக எழுதி இருந்தான்.

ஒருவர் மட்டும் வாழ்ந்தால் அது உலகம் ஆகாது. உண்மையில் நான் எண்ணிப் பார்க்கிறேன். நானும் ரவியும் ஒரு உலகம். நானும் அவரும் தான் ஒரு உலகமாக இருந்தோம். இணைபிரியாமல் இருந்தோம்—ஆனால் நீடிக்க முடியவில்லை.

ரவி பிறந்ததும் அவருக்கு என் மீது பிடிப்பு நெகிழ ஆரம்பித்தது, முக்கியமாக நான் பிரசவத்துக்குத் தாய் வீட்டுக்கு வந்தேன், அந்தச் சில மாதங்களில் அவர் மாறி விடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

நான் பல அம்புகளைத் தாங்கி இருக்கிறேன், மன்மதன் அம்பு போடுவான் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். அவை மன அம்புகள். இவை காகித அம்புகள். கல்லூரியில் பேரவை ஒன்று இருக்கிறது. அதற்குக் காந்தி மன்றம் என்று பெயர். இப்படித்தானே பெயர்கள் வைக்கிறார்கள், பேரவைகள் எல்லாம் பெரியவர்களுக்கு நினைவுச் சின்னங்களாக மாறி விடுகின்றன. ஒரு சில

இடங்களின் வள்ளுவர் மண்டபம் என்றும் பெயர் வைத்து இருக்கிறார்கள். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும். நான் ஒரு வாயாடி, அதாவது சுழற்கோப்பைப் பேச்சாளி, அதாவது எங்கள் கல்லூரியில் இரண்டு பேரைத் தேர்ந்து எடுப்பார்கள்.

நாங்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று பேசுவோம். எங்களுக்குப் பலவிதமான பேச்சுத் தலைப்புகள் கொடுப்பார்கள், "சட்டத்தால் இந்த நாட்டைத் திருந்த முடியுமா?'. என்று கொடுப்பார்கள் "சாதி ஒழிப்பால் இந்த நாட்டில் சோசலிசம் கொண்டுவர முடியும்" என்று பேசி இருக்கிறேன்.

எனக்குப் பிடித்த தலைப்பு 'பெண் உரிமை'தான்.

'சமுதாயப் பணியில் பெண்களின் இடம்' என்று பேசி இருக்கிறேன். ஒரு மேடையில் வாங்கு வாங்கு என்று வாங்கி இருக்கிறேன்.

"பெண் இந்த நாட்டிலே ஒரு தொழிலாளியாக மாறுகிறாள். ஆண்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள். அவர்கள் சம்பாதித்து அவர்களைக் காப்பாற்றும் நிலை இந்த நாட்டில் பெருகிவிட்டது. ஆண்கள் படிக்காமல் வேலை நிறுத்தம் செய்து கொண்டு தம் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்கள். நாங்கள் அமைதியாகப் படிக்கிறோம். இதன் விளைவு என்ன? நாங்கள் எதிர்காலத்தில் நல்ல உத்தியோகங்களுக்கு மனுப் போட்டு வெற்றி பெறுவோம். ஆண்கள் தோற்று வேலையில்லாமல் கஷ்டப்படுவார்கள். பிறகு என்ன செய்வார்கள். நாங்கள் வெளியிலே அதிகாரிகளாக இருப்போம்; வீட்டில் அவர்களுக்கு அடங்கி வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படும். முன்னெல்லாம் பெண்கள் இந்த வகையில் ஆண்களை வீட்டில் இருந்து கொண்டு அதிகாரம் செய்து கொண்டு இருந்தார்

கள். நாங்கள் இப்பொழுது அவர்களுக்கு வீட்டில் அடங்கிக் கிடக்க வேண்டியதுதான். 'யார் சும்மா இருக்கிறார்களோ, அவர்கள்தானே அதிகாரம் பண்ணுவது இயற்கை. உழைப்பவர்கள் என்றும் அடங்கிக் கிடக்க வேண்டும். என்பது உலக இயற்கைதானே",என்று நான் பேசி இருக்கிறேன்.

என் எதிர் தரப்புப் பேச்சாளர்கள் அதை வெட்டிப் பேசி இருக்கிறார்கள்."நாங்கள் வீரர்கள். இந்தச் சமுதாயத்தில் நடக்கும் அநியாயங்களைத் தட்டிக் கேட்பது எங்கள் கடமையாகிறது. நாங்கள் கிளர்ச்சிகள் செய்யாவிட்டால் இந்த நாட்டில் யார் அதைப் பற்றிக் கவலைப்படப் போகிறார்கள். நாங்கள் தியாகிகளாகிறோம். நீங்கள் அதன் பயனை அனுபவிக்கிறீர்கள்." மாணவர்கள் இன்று சிந்தனையாளர்களாக மாறிவிட்டார்கள்." நாங்கள் அரசியல்காரர்களுக்கு அடிமையல்ல; அவர்களுக்கு எடுத்துச் சொல்ல இந்த நாட்டில் அறிவாளிகள் தேவை.

இன்று ஆசிரியர்கள் என்ன செய்கிறார்கள். சிலம்பு ஒலித்துக் கொண்டு இருக்கிறார்கள். சங்க இலக்கியத்தில் பழமையின் பெருமையை வரலாறுக எடுத்துக் கொள்ளுகிறார்கள்.அவர்களுக்குள் எத்தனை பேர் நாட்டின் நிகழ்ச்சியோடு ஒத்துச் செல்கிறார்கள். இன்று அண்டை அயல் மாநிலங்களில் பாருங்கள், எவ்வளவு வேகமாக வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

புதிய எழுத்து வேகமாக வளர்கிறது. இங்கே எழுத்ததிகாரம் நடத்துகிறார்கள். அதற்கு உரை விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே சமுதாயச் சிந்தனைகளைப் புதினங்களில் வடித்துத் தருகிறார்கள். இங்கே இல்லறம் துறவறம் என்ற அறக் கோட்பாடுகளைப் பற்றி ஆராய்கிறார்கள். அங்கே பாட்டாளி வர்க்கம் எப்படி எழுச்சி பெறுவது என்பதைப் பற்றிப் பேசுகிறார்

கள். இங்கே மறு உலகம் எப்படி இந்த உலகத்தில் தியானம் செய்து பெற முடியும் என்று சிந்தனை செய்யச் சொல்லித் தருகிறார்கள். வெட்கப்பட வேண்டிய ஒன்று. புதிய எழுச்சி இலக்கியத்தில் இல்லை. இதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்" என்று மறுத்துப் பேசுவான்.

அவன் என்ன நினைத்துப் பேசுகிறான் என்பது தெரியாது.யாரோ எழுதிக் கொடுத்ததைக்கொண்டு வந்து பேசுவான். இல்லாவிட்டால் இந்த மாதிரி தொடர்பு இல்லாமல் ஏன் அவன் பேசவேண்டும்.

இதைப் போலப் பல மேடைகளில் பேசிக் கைதட்டல் பெற்றிருக்கிறேன். பிறகுதான் நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் என் பேச்சுக்குக் கைதட்டவில்லை என்று. எனக்காகவே தட்டி இருக்கிறார்கள். என் பேச்சுக்கு அது வெற்றி அல்ல; எனக்கு அது வெற்றிதானே. எனக்குக் கொஞ்சம் கர்வமும் இருந்தது. அதாவது என்னை வரவேற்கும் அந்த ஆரவார உலகம், இன்றும் நான் மறக்க முடியவில்லை.

முதலில் ஒரே பயமாக இருக்கும். படபடப்பும் இருக்கும். சொல்வதே வராது. போகப் போகச் சரியாகப் போய் விட்டது. ஒன்றே ஒன்று சில சமயம் எனக்கு வேண்டுமென்றே மதிப்பெண் போட்டு வெற்றி பெறச் செய்துவிடுவார்கள். அதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வது இல்லை.

இரக்கத்தால் நாம் உயர்வு பெறக் கூடாது என்ற எண்ணம் அவ்வப்பொழுது எனக்குத் தோன்றும். வெற்றி உண்மையானதாக இருக்கவேண்டும். மற்றவர்கள் விரும்பித் தரும் வெற்றியை நான் அடைய விரும்பியது இல்லை.

இந்தக் காட்சிகளை எல்லாம் இப்பொழுது பார்க்கிறேன். அதன் அவசியம் எனக்கு இப்பொழுது உணர

முடிகிறது. ரவி அவற்றை வைத்து விளையாடிக் கொண்டு இருப்பான். அவனுக்குச் சொப்புகள் வாங்கித் தரத் தேவை இல்லாமல் போய்விட்டது. அவற்றை வைத்துக் கொண்டு உருட்டுவான். நான் மேடையில் உருட்டிய பேச்சின் விளையாட்டை அவன விளையாட்டில் காண முடிந்தது. என் பேச்சொலியை அவன் தட்டி வீழ்த்தும் அந்தக் கப்புகளின் உருட்டலில் கேட்டேன்.

'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்பது அழகான உருவகமாகப்பட்டது; அரசியல் தலைவர் வேறு எப்படி எதிர்க் கட்சிகளை விமரிசிக்க முடியும். 'காமராசர் ஒரு சகாப்தம்' அது முடிந்துவிட்டது. புதிய சகாப்தம் தோன்றி இருக்கிறது. அதை அவரால் பார்க்க முடியவில்லை. பொதுவாகவே இந்த நாட்டில் பழைய தலைவர்கள் மாறுதது வளர்ச்சிக்குத் தடை என்று எண்ணிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

காந்தியோடு பழகியவர்கள் இன்றும் பலபேர் உயிரோடு இருக்கிறார்கள். காந்தியடிகள் தனிமனிதரின் ஒழுக்க உயர்வில் நம்பிக்கை உள்ளவர். அந்தப் பாரம்பரியத்தில் வந்தவர் காமராசர். மற்றும் அவருக்கு ஏழைகள் உயர வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் எப்படி உயரவேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

அவர்கள் காலமெல்லாம் நேரடி அரசியலில் கழிந்து விட்டது. யார் தலைமைப் பதவிக்கு வருவது; யாரை அமைச்சராக்குவது என்ற நினைப்பில் செயலில் அவர் காலம் சென்றுவிட்டது. பெரியார் பகுத்தறிவு வாதத்தைப் புகுத்தி மடமையைப் போக்கினார். அண்ணா புதிய சிந்தனைகளை இளைஞர்களிடம் புகுத்தினார். ஏழை சிரிக்கவேண்டும் என்று எண்ணினார். குப்பத்து மக்களுக்கு அரசியல் ஞானத்தை ஏற்படுத்தினார்.

காந்தீயம் அவர்களை அணுகியபோது இரக்கத்தின் அடிப்படையில் அந்த அணுகல் ஏற்பட்டது. அவர்கள் மேல் மட்டத்து மக்கள் உதவி செய்யும் நோக்கில் அணுகினர். 'ஆண்டான் அடிமை' மனோபாவம் அதிலே ஊடுருவிக் கிடந்தது. 'தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு' இது கோயில் உபதேசங்களைப் போலச் சாதாரண விஷயங்களாக இருந்தன.

'ஏழையின் சிரிப்பில்' என்ற தொடர் அமைத்துக் கொடுத்ததே அண்ணாதான். அவன் வாழ்வை மலர வைக்க வேண்டும் என்ற எண்ணம் ஊட்டியது அவர் தான். அரசியலில் அவர்களை நேரடியாக இழுத்ததும் அந்த ஆண்டான் அடிமைப் பார்வை அல்ல; தோழமைப் பார்வை. அவர்களும் நேரடியாக அரசியலில் பங்கு கொண்டார்கள். இதை நினைத்துப் பார்க்கிறேன்.

மக்களுக்கு ஒரு நல்ல நேர்மையான அரசாங்கம் அமைந்தால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். அவ்வளவுதான். வளர்ச்சியுள்ள சமுதாயத் திட்டங்கள் உருவாகிவிட்டன என்று கூற முடியாது. பழமையை எப்படி எப்படிக் காப்பாற்ற வேண்டுமோ அப்படிக் காப்பதில் ஒவ்வொரு அரசாங்கமும் முனைகிறது.

காமராசர் கூறிவிட்டதாலேயே மற்றவர்கள் தாழ்ந்து விட்டவர்கள் என்று கூறமுடியாது. மக்கள் யாரைத் தேர்ந்து எடுக்கிறார்களோ அவர்களை முதலில் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் ஜனநாயகம். அவர்கள் தவறு செய்தால் எதிர்க்கட்சி வலுப் பெற்று விடும். இது நாட்டு நிலைமை. இன்றும் இந்த மக்களுக்கு உறுதியான நல்வாழ்வை அளிக்க அரசாங்கங்கள் முன் வரவில்லை; அவர்களால் முடியாது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு வாக்கு கிடைக்கவில்லை. ஜனநாயகம் என்பது முடிவு அல்ல; தொடக்கம்; வழி முடிவு சோஷிய

லிசம். இதுதான் இன்றைய அரசியல்; இன்று எல்லோரும் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏணிப்படியில் நின்று கொண்டிருந்தால் மாடி ஏறிவிட முடியுமா?

இந்த மாதிரி விஷயங்களை அப்பொது மேடை விவாதங்களில் காட்டி இருக்கிறேன். என்னைப் பலபேர் சோஷியலிஸ்டு என்றுதான் சொல்லிக் கொண்டு இருந் தார்கள், மாணவர்களுக்குள் கட்சிகள் பல இருந்தன.

தேர்தலுக்குப் பின் 'ஜனதா' தலையெடுக்க ஆரம்பித் தது. மாணவர்களிடையே காமராசருக்குத் தனி மதிப்பு இருந்தது; இப்பொழுதும் இருந்து கொண்டும் இருக் கிறது. நாங்கள் படிக்கும் நாளில் காமராசர் கட்சி மாண வன் தான் வெற்றி பெற்றான்.

இந்திரா கட்சியா காமராசர் கட்சியா என்பதுதான் அர சியல் பிரச்சனையாக இருந்தது. இந்திரா கட்சி ஆட்சியில் இருந்தது. பதவிகள் காத்துக்கிடந்தபோதும் அவற்றைத் துச்சம் என மதித்துத் தனித்தியங்கிய கட்சிக்காரர்களும் இருந்தார்கள். அவர்கள் துணிவையும் நாட்டுப் பற்றையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. காமராசர் மாபெரும் தலைவர் என்பதை எண்ணிப் பெருமை கொள்கிறேன். 'படிக்காத மேதை' என்று சொல்வார்கள். படிக்கிறவர்கள் பேதைகளாக இருக்கும் நாட்டில் படிக்காத மேதைதான் தோன்ற முடியும் என்று எண்ணியது உண்டு. இன்று படித்த இளைஞர்கள் காமராசர் காட்டிய வழியைத்தான் பின்பற்றுகிறார்கள். அவரை ஒப்பற்ற தலைவராக மதிக் கிறார்கள். அவர்களுள் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கிறேன். பொதுவாகப் பெண்களுக்கு அரசியல் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. நான் அழகாகப் பாடுவேன். நாட்டு வாழ்த்துப் பாடிய வாய்ப்பு தான் அவரிடம் சில சொற்கள் பேசும்படி செய்தது.

என்னைப்போலவே எல்லோரும் இருக்கிறார்கள் என்று கூற முடியாது. என்னோடு படிக்கும் மற்றொரு பெண் 'கலைஞர்' என்றால் உயிர்விட்டுவிடுவாள். அவர் ஒருநாள் கல்லூரியில் பேசினார். கூட்டம் சொல்லிமுடியாது; என் வகுப்பு மாணவி நெருக்கி அடித்துக் கொண்டு உள்ளே போனாள். என்னையும் கூப்பிட்டாள். நானும் போய்க் கேட்டேன். நான் எந்த அரசியல் தலைவருக்கும் மதிப்புத் தருகிறேன், ஆனால் எனக்கு என்று ஒரு கட்சிக் கோட்பாடு இருக்கிறது. அது இன்னது என்று வெளிப்படையாகக் கூறமுடிவதில்லை. இன்னும் நான் நினைக்கும் லட்சியங்களோடு கூடிய கட்சி உருவாகவில்லை. அதுவரை எங்கே நன்மை இருக்கிறதோ அதைப் பாராட்டி ஆதரவு கொடுப்பதுதான் நல்லது என்ற கொள்கை என்னிடம் இருக்கிறது. நல்லவர்கள் வாழ வேண்டும்; நல்ல கொள்கைகள் உருவாக வேண்டும் என்று நினைப்பது உண்டு. எப்படியோ என் பாதை சோஷியலிசம் என்பதைத் தெளிவாக வகுத்துக் கொண்டேன்.

மற்றவர்கள் தனிப்பட்ட மனிதர்களைத் தாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அல்லது புகழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். சில சமயம் 'சாதி மொழி' என்ற அளவுக்கு அரசியல் தாழ்ந்து போய்விடுகிறது. அந்த அரசியல்தான் நாட்டில் தலையோங்கி இருக்கிறது. ஆனால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. நான் ஒதுங்கி விடுவதால் அது இந்த நாட்டிலிருந்து ஒதுங்கிவிட்டது என்று கூற முடியுமா?

நான் என்ன அப்பொழுது கல்லூரி மாணவிதானே எட்டி இருந்து பார்க்க முடியுமே தவிர அதில் நேரிடையாக எப்படிக் கலந்துகொள்ள முடியும். நான் அழுத்தமான சோஷலிசக்காக அரசியல் செய்திகளை அறிவேன். விவாதிப்பேன் கைதட்டல்களைப் பெறுவேன்.

ஒரு சமயம் நாடகமும் நடித்திருக்கிறேன். அதில் நான் குறிப்பிட்டேன். அந்த முதல் டிக்கெட்டு ஹீரோவாக

நடித்தான். நான் அவன் காதல் செய்யும் ஹீரோயினுக நடித்தேன். அவன் என்னிடம் துணிந்து உணர்ச்சிபடக் காதல் மொழி பேசுவான். ரிஹர்சலில் அது ஓவர். நாடகத்தில் அதைக் கேட்டு ஒரே சிரிப்பு. ஆடியன்சு ஒரே ஆரவாரம். எனக்கு ஒரே வெட்கமாய்ப் போய்விட்டது. துணிந்து அவன் நெருங்கிவிட்டான். நான் எப்படி ஓட முடியும். அந்தச் சமயம் என் கண்ணைப் பறித்த ஒளி. அது தான் காமிராவின் ·மின் ஒளி. அந்த நிலையில் அது படத்தில் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

நான் வாழ்க்கையில் யாரையும் காதலித்தது இல்லை' ஆனல் அது காதல் கட்டமாக அமைந்துவிட்டது. அவன் பிறகு என்னைக் காதலித்து இருக்கலாம். ஆனல் அது எனக்குத் தெரியாது. அவன் அந்தப் படத்தைப் பத்திரப் படுத்தினன். நான் அதைப் பத்திரப் படுத்தவில்லை.

நான் பத்திரப்படுத்திய படம் காமராசரோடு நான் நின்றுகொண்டிருந்த படம்; அதை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. அவர் என்னுள் ஊடுருவி நிற்கிருர். என்னைப் பொறுத்தவரை நான் அவரை எனக்குள் நிறுத்திக் கொண்டேன்.

அண்ணு சாலை வழியாகச் செல்லும் வாய்ப்பு ஏற்படும் பொழுது நிமிர்ந்த நெஞ்சரை நினைத்துப் பார்ப்பேன் அவருக்கு நான் மாலையிட வேண்டும் என்று நினைப்பது உண்டு. அந்த வாய்ப்பு எனக்குக் கிடைப்பது இல்லை, என் அவர் எனக்கு மாலையிட்ட பிறகு நான் யாருக்குமே மாலையிடாத வீட்டு வாழ்வு கவ்விக் கொண்டது. அரசியல் வாழ்வு என்னை விட்டு நீங்கிவிட்டது.

என் தனிப்பட்ட வாழ்வில் அக்கறை காட்டிய ஆசிரியர்களும் இருந்தார்கள். இந்த மாதிரி கூட்டங்களுக்கு நான் போவதை அவர்கள் விரும்புவதில்லை.

"அரசியல் உணர்வு எதற்கு?" என்று அறிவுரை சொன்னவர்களும் உண்டு.

மேடைப் பேச்சை நிறுத்திக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்தினர்கள்.

தேர்வுகள் பயம் காட்டி என் பொதுச் சிந்தனைகளைக் குறைக்கப் பார்த்தார்கள்.

எனக்கு ஒரே எரிச்சல். என்ன படிப்பு வேண்டி இருக்கிறது என்று தோன்றும். சுற்றுப்புறத்தைக் கவனிக்காமல் நாம் நம்மைப் பற்றியே கவனித்துக் கொள்வது எனக்குப் பிடிப்பது இல்லை.

ஒருசிலர் பச்சையாகச் சொல்லிக் கொள்வதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். யார் எப்படிப் போனல் நமக்கு என்ன. நாம் படித்து நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்று பேசக் கேட்டு இருக்கிறேன். இது மேல்நிலையில் சொல்லப்படும் சாதாரண உத்தியோகஸ்தர்களின் போக்கைத்தான் நினைவுறுத்துகிறது. "எப்படியாவது நாலு காசு சம்பாதிக்க வேண்டும்" என்று நினைக்கும் போக்குதான் அது. இதைப்போல ஒவ்வொருவரும் நினைத்தால் பொதுப் பிரச்சனைகளைப் பற்றி யார் சிந்திப்பது. எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் இந்த வகையில் அரசியல் கட்சிக்காரர்களை எனக்குப் பிடிக்கிறது. அவர்கள் பொதுப் பிரச்சனைகளில் ஈடுபடுகிருர்கள். அவர்களையும் அறியாமல் சமுதாய உணர்வில் ஈடுபடுகிருர்கள்.

என்னைப் போன்ற சாதாரண மனிதர்கள் என்ன செய்ய முடியும். சிந்திக்க முடியும். அவ்வளவுதான். அரசியலில் நேரிடையாகப் பங்கு கொள்ள முடியாதுதான்; அதற்காக ஆயிரம்பேர் இருக்கிருர்கள். என்னைப்போலச் சில பேர் தூர இருந்து எண்ணிப் பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது. அதுகூடத் தவறு என்று ஒரு சில ஆசிரியர்கள்

கண்டித்து வந்தார்கள். அவர்கள் என் வாழ்வில் அக்கறை காட்டியவர்கள். அவர்கள் உலகம் அமைதியான உலகம்; அவர்களைக் கண்டு சில சமயம் பொறாமை பட்டதும் உண்டு.

வெளியே போராட்டங்கள் நடக்கும். அவர்கள் செய லிழந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பார்கள். துணிந்து அவர்கள் மாணவர்களை அணுகிப் பேச முடி யாது; பேசவும் நினைக்க மாட்டார்கள். அவர்கள் ஏதோ சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கி வாழ்க்கையை அலட் டிக் கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் இந்த நெருப்பில் விழாமல் எச்சரிக்கை செய்வதை மட்டும் பார்க்கிறேன்.

நானும் எதிர்காலத்தில் ஒரு ஆசிரியராகப் பணிசெய்ய வேண்டும் என்ற ஆசை உந்தியது. பல புரட்சி மிக்க மாணவர்கள் ஆசிரியப் பணி ஏற்றதும் இருக்கின்ற இடம் தெரியாமல் மங்கிப் போவதைப் பார்த்திருக்கிறேன். என் வாழ்க்கை மட்டும் என்ன? குடும்பப் பணியை ஏற்ற பிறகு நான் என்ன ஆனேன். ரவி என்னைப் பார்த்துச் சிரிக்கிறான். அதைப் பார்த்து ரசிக்கிறேன். என் உலகம் எவ்வளவு சின்னதாக அமைந்துவிட்டது.

"நான் இங்கே நீ அங்கே
நாம் இருவரும் ஒன்று சேருவோம்
இது ஒரு புதிய உலகம்"

என்ற கருத்துப்பட அந்த மாணவ அன்பன் எனக்கு அம்பு விட்டுத் தெரிவித்தான். அந்த இருவராக நானும் ரவியுமாக இருக்கிறோம். அவனை விட்டு நான் எப்படி நீங்க முடியும். 'அவர்' என் மீது வெறுப்புக் கொள்ளலாம். அவர் என் வாழ்க்கையில் பெரிய ஏமாற்றத்தைக் கண்டு விட்டார். பொதுவாகப் படித்த பெண்கள் படிப்பு முடிந்த தும் அந்தச் சிறிய வட்டத்துக்குள் அடங்கி விடுகிறார்கள்.

பம்பரம் ஆடுவதைப் பார்த்து இருக்கிறேன். நடுவில் ஒரு பெரிய வட்டம் இருக்கும். அதில் இந்தப் பையன்கள் குத்தி விளையாடுவார்கள். அது வெளியே வந்துவிட வேண்டும். அங்கேயே சுற்றி அகப்பட்டுக்கொள்ளும். அதற்குமேல் அது வெளிவராது. அதை உள்ளே வைத்து மற்றவர்கள் குத்துவார்கள். இதுதான் என் நிலைமை. குடும்பம் என்ற வட்டத்தில் வைத்து என்னை அந்தப் பம்பரத்தைப்போல் மடக்கி விட்டார்கள்.

இனி நான் ஆடமுடியாது: வெளியே ஓடமுடியாது; சுற்ற முடியாது; சுற்ற வேண்டியது இல்லை. ஆட்ட விதி அப்படி. ஆனால் வெளியே இருந்துகொண்டு அதைக் குத்தும் பொழுது அது எப்படி சொட்டையாகாமல் இருக்க முடியும். அந்த வட்டத்தை விட்டு பம்பரம் வெளியே வந்தபிறகுதான் அதற்கு விடுதலை கிடைக்கிறது. நான் வெளியே வர நினைக்கிறேன்.

'ரவி' அழுகிறான். அவனுக்கு நான் தேவைப்படுகிறேன். அவன் எனக்குத் தேவைப்படுகிறான். அவருக்கும் நான் ஒரு காலத்தில் தேவைப்பட்டேன். இப்பொழுது புறக்கணிக்கப்பட்டேன்.

அவர் என்னை விரும்பித்தான் மணம் செய்துகொண்டார்; நான் அவரை விரும்பித்தான் மணம் செய்துகொண்டேன். இது மேடைப்பேச்சு அல்ல; தப்பித்துக்கொண்டு வெளிவந்துவிட்ட; என் அறிவு, திறமை, ஆற்றல் அத்தனையும் தோற்றுவிட்ட இடம் இதுதான். மேடையில் சுழற் கோப்பைப் பரிசு பெற்றேன்; இங்கே என் ரவியைப் பரிசாகப் பெற்றேன். அவன் கப்புகளை வைத்து விளையாடுகிறான். நான் அவனை வைத்து விளையாடுகிறேன்.

இப்பொழுது அவர் என்னை மதிக்கவில்லை. நான் அவரை மதிக்க முடியாமல் போய்விட்டது.

'வெறுத்தால் பெண் பேயாவாள்
வழிபட்டால் அவள் தெய்வமாவாள்
மதித்தால் பெண்ணாவாள்'

என்று முதற் கவிதைப் புத்தகமாக வாங்கினேனே அதில் எழுதி இருந்தது. என்னைப் பொறுத்தவரை உண்மையாக இருந்தது. ஆரம்பத்தில் அவர் என்னை வழிபட்டார்: நான் தெய்வமாக இருந்தேன். இப்பொழுது அவர் என்னை வெறுக்கிறார். நான் பேயானேன்; அவர் மதித்தால் பெண்ணாவேன்; நான் பேயாகவும் விரும்பவில்லை; தெய்வமாகவும் ஆக விரும்பவில்லை. பெண்ணாக வாழ்ந்தால் போதும்.

அடிக்கடி என் பழைய ஆசிரியை நண்பர் ஆஷா வந்து ஆறுதல் சொல்வாள். அவள் தமிழ்ப் பேரறிஞர் ஒருவர் எழுதிய நாவல்கள் நன்கு படித்தவள். குடும்பப் பெண் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நன்கு அறிந்தவள். அவள் வீட்டில் அந்த நாவல்களை நன்றாக அட்டைபோட்டு அடுக்கி வைத்திருக்கிறாள். 'நெஞ்சில் ஒரு முள்' அவளுக்குப் பிடித்து இருந்தது. அவள் வாழ்வில் ஒரு முள் தைத்து இருந்தது. அந்த வேதனையை அவள் மறக்க முயன்றும் அவளால் முடியவில்லை. அந்த முள்ளை எடுத்துப்போட முயன்றாள். அதுபோக மறுத்துவிட்டது. ரத்தம் கசிந்துகொண்டே இருந்தது. அவள் மனச்சான்று அவளை உறுத்தவில்லை. அதை அவள் பெரிதாக நினைக்கவில்லை. அவளும் உலகம் அறிந்த பெண்தான். மறுபடியும் அவன் வந்து தொல்லை படுத்தினான். வேறு வழியில்லை.

கணவனிடம் உண்மையைச் சொல்லிவிட்டாள். அதற்கு அப்புறம் அவள் பாரம் குறைந்துவிட்டது என்று நினைத்துவிட்டாள். ஆனால் குறையவில்லை. அவள் கணவன் அவளை மதிக்கவில்லை. தற்காப்புக்காக அந்த உண்மையைச் சொல்லிவிட்டாள். நெஞ்சில் இருந்த முள் நீக்கப்பட்டது. அதுவே ஒரு வேலியாக அமைந்து விட்டது.

அவள் அந்தக் குடும்ப வேலியில் அகப்படுத்தப்பட்டாள். கணவன் அவளை நம்ப மறுத்தான்; அதனால் அவள் தனியாக இங்கு வேலைசெய்ய முடியாமல் போய்விட்டது. "அவர் நம்பமாட்டார்" என்று கூறினாள். அதனால்தான் வேலையை விட்டேன் என்று தெளிவுபடுத்தினாள்.

"ஏன் இரண்டுபேரும் ஒரே இடத்தில் வேலை செய்ய' '

"முடியவில்லை. அதற்கு அவர் தொழில் இடம் கொடுக்கவில்லை. அது கம்பெனி வேலை; அரசாங்க வேலை அல்ல"

''நீ அந்த ஊருக்கு மாற்றிக்கொள்ளலாமே''

''அங்கே அரசாங்கக் கல்லூரி இல்லை'' என்று கூறினாள்.

இது எனக்குப் பரிதாபமாகவே இருந்தது. எனக்கு அவளைப்போல் ஒரு வேலை கிடைத்தால நிச்சயமாக விட்டு இருக்கமாட்டேன். பெண்ணின் உயர்வே தன் உழைப்பில்தான் இருக்கிறது, கணவனுக்கு மனைவியாக மட்டும் வாழும் வாழ்க்கை எனக்குப் பிடிப்பது இல்லை.

நானும் / உண்மையைச் சொல்லி இருக்கலாம். எது உண்மை? நான் அவனைக் காதலிக்கவில்லை. அவன் என்னைக் காதலித்தான். அவன்மட்டும் என்ன? யார் யார் என்னிடம் பழகினார்களோ அவர்கள் எல்லாம் என்னை விரும்பாமல் இல்லை. பெண்ணின் வாழ்க்கையில் இது சாதாரணம். அதுவும் படித்த பெண்ணின் வாழ்வில் இப்படி எந்த அனுபவமும் ஏற்படவில்லை என்றால் அவள் படித்த நாட்கள் வீண்தான்.

நான் பஸ்ஸில் போவேன்; வேறு எப்படி போகமுடியும். சில சமயம் மேல்பிடியைப் பிடித்துக்கொண்டு தொங்கிக்கொண்டு போவேன். எத்தனையோபேர், நான் மென்

மையாக இருக்கிறேனு என்று தொட்டுப் பார்த்து இருக்கிருர்கள். என் நெஞ்சு மட்டும் வன்மையாகத்தான் இருக்கும். அது அவர்களுக்குத் தெரியாது.

நான் அதை வெறுப்பது இல்லே. அவன் ஏதோ அதில் சுகம் காண்கிருன். அவன் கற்பனேயை நாம் ஏன் கெடுக்க வேண்டும் என்று விட்டு விடுவேன். அற்ப சுகத்துக்கு ஆசைப்படும் கற்பனேகளில் அவன் ஈடுபட்டால், நான் என்ன செய்யமுடியும்.

ஆனல் என்னேடு பயணம் செய்யும் என் சிநேகிதிகள் சும்மாவாவது அலட்டிக்கொள்வார்கள். "சே இந்த ஆண்களே மோசம்" என்று தீர்மானம் போட்டு நிறைவேற்றிவிடுவார்கள்.

எங்களுக்காகவே இந்த Foot board-ல் தொங்கிக் கொண்டு வருகிருர்கள். எவ்வளவுபேர். அதாவது அந்த நேரத்தில் ஒரே நெருக்கடி. என்னேவிட அழகான பெண்கள் இருப்பார்கள். அவர்களேச் சுற்றி வட்டமிட மாட்டார்கள். ரெம்பவும் அழகாக இருந்தால் அவர்கள் கிட்டே கூட போக மாட்டார்கள். அவள் யாருக்காகவோ ஒதுக்கி வைக்கப் பட்டவள் போலக் காணப் படுவாள். ரொம்பவும் பெரிய வீட்டுப் பெண்ணுகக் காட்சி அளிப்பாள். அவளேத் தனிப்பட்ட பார்வையில் யாரும் பார்க்க முடியாது. சிலதுகள் இருக்கும் எந்த அனுபவமும் பெருமல் டல்லடித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும்.

அவர்களேப் பற்றி யாருமே கவலேப்படுவதில்லே. எங்களில் ஒருத்தி இருந்தாள் அவள் ரெம்பவும் அழகு என்று கூறமுடியாது அழகு இல்லே என்றும் கூற முடியாது. ஆனல் அந்த முகம் ரொம்பவும் கவர்ச்சியாக இருக்கும். மாநிறம் தான். கண்கள் அழகாக இருக்கும். முகத்தில் அறிவு ஒளிவீசும் அவள் அந்த பஸ்ஸில் இருந்தால் அவள்

தான் வகுப்பில் நடந்தவற்றை எல்லாம் பேசிக் கொண்டு இருப்பாள். அவள் விஞ்ஞானம் படிக்கிருள் என்று நினேக் கிறேன் அந்த பரிசோதனே அறையில் நடந்த சோதனே களேப் பற்றியே பேசுவாள் அவளிடம் நான் பேச வேண்டும் என்று நினேத்தது உண்டு ஆனல் சந்தர்ப்பமே கிடைத்தது இல்லே.

அந்த முதல் டிக்கட்டு நண்பன் அடிக்கடி அதே பஸ்ஸில்தான் ஏறுவான். அவனுக்கு என்னிடம் தனிக் கவர்ச்சி. சும்மா அதே பஸ்ஸில் வருவது, அவனுக்கு ஒரு தனிப்பொழுது போக்கு. 'சோடி சி பாத்' படம் பார்த்திருப் பீர்களே. ரொம்ப தமாஷான படம். அவன் சும்மா இவளேயே பார்த்துக் கொண்டு இருப்பான். அவன் போகிற இடமெல்லாம் பின்னல் தொடருவான்; அவள் நின்ருல்தானும் நிற்பான். படம் எடுத்தால் அப்படி எடுக்க வேண்டும் என்று நினேப்பது உண்டு.

சமீபத்தில் ஒரு படம் வந்தது. அதுதான் உலகப்பட விழா நடந்ததே அப்பொழுது பார்த்தேன். இரண்டு மூன்று நாள் போனேன், என்னமோ எதிர்பார்த்து ஏமாந்து போனர்கள் எவ்வளவோ பேர். படம் ஏதோ சென்சார் இல்லேயாம். அதுக்கு இவ்வளவு கூட்டம் என்று மொத்த மாகக் கேள்விப்பட்டேன். பார்க்கத்கூடாத காட்சிகள் இடம் பெற்றதால் அதைப் பார்க்கத் தவறக் கூடாது என்பது அங்கு வந்த கூட்டத்தின் நினேவுகள்.

பாவம் வந்து உட்காருவார்கள் 'போர்' என்று சொல்லி விட்டு எழுவார்கள் அதில் என்ன தைரியமாகக் கட்டி முத்தம் தருகிருர்கள். சேர்த்து அணேத்துக் கொண்டு ஒரே படுக்கையில் உருள்கிருர்கள்.

நான் சிரித்துக் கொண்டேன். 'Sex starvation' ரொம்ப அதிகம் நம் நாட்டில் என்பதை அப்பொழுது உணரத் தொடங்கினேன். அந்த விழாவிலே மறக்க முடியாத

சம்பவம் ஏதோ ஒரு படமாம் பெயர் நான் கேட்கவில்லை கிரிக்கெட் மாட்சுக்கு முன்னிடம் பிடிப்பது போல் இரவே 'கியூ' நின்றுவிட்டனர். ஒரே 'Crazy' அவ்வளவுதான் சொல்ல முடியும். அன்று பெண்கள் கியூவில் நின்றார்கள். எதற்கு என்று தெரியவில்லை. அவமானப்பட வேண்டிய விஷயம். அன்று அறுபது பேருக்கு மேல் லத்திசார்ஜ் நடந்ததாம். தலையில் கட்டுப் போட்டுக்கொண்டு வந்தனர்.

நம் நாட்டில் 'சென்சார்' இல்லாமல் படம் பிடிக்க உரிமை கொடுத்தால் என்ன ஆகும். பொது மனைக்குப் போகமாட்டார்கள். கீழ்பாக்கத்துக்குத்தான் போவார்கள் என்று நினைத்துக்கொள்வேன். திரைப்பட அனுபவத்தில் இது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். நான் ஏதோ என் கதையைச் சொல்ல வந்தவிடத்தில் என்னையும் மீறி ஊர்க் கதையைப் பேசிவிட்டேன். ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். அந்தப் படத்துக்கு அவர்கள் விற்ற டிக்கட்டு பத்துதான் என்று சொன்னார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது; அந்தப் பத்தும் பிளாக் மார்க்கெட்டில் ஒவ்வொன்றும் அறுநூறு ரூபாய்க்கு விற்கப் பட்டதாம். பிறகுதான் கியூவில் நின்றவர்கள் அடிபட்டவர் கள் யார்? எதற்காக நின்றார்கள் என்பதும் விளங்கியது. மறுநாள் ஒரு பெரிய ஏமாற்றம். அது நூறு ரூபாய்க்கு வாங்கிய டிக்கட்டை அடுத்த ஷோவுக்கு ஐந்து ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். ஆச்சரியமாக இருந்தது. ஏன் நிறைய வெட்டி எடுத்துவிட்டார்களாம்.

சில சமயம் நினைப்பது உண்டு. அந்த முதல் டிக்கட் டோடு நெருங்கிப் பழகினால் என்ன? சே! பழகக்கூடாது. பேரு கெட்டுவிடும். எப்படியோ ஆண்பிள்ளைகளோடு பழகக்கூடாது என்ற உறுத்தல் மட்டும் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. அது நல்லது தானே. இப்படி எல்லாம் என்னை அடக்கிக் கொண்டுதான் வாழ்ந்தேன். ஏன் அப்படித்தான் எல்லாரும் வாழ்கிறார்கள்.

சரி அதுதானே நம்ம நாட்டுக்கும் பெருமையும். பெண்கள் அவ்வளவு எளிமையாக இளைஞர்களுக்குக் கிடைப்பது இல்லை. மாணவர்கள் பொதுவாகத் தன்னடக்கத்தோடு வாழ்கிறார்கள்.

யாரோ சிலர் துணிகரமான செயல்களில் ஈடுபடுகிறார்கள். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் நிறைய உரிமை இருக்கிறது. சில பல்கலைக் கழகங்களில் உடனே குழந்தைகளுக்குத் தாயாகிவிடுகிறார்களாம். அந்தக் குழந்தைகளும் வளர்வதற்கு வேண்டிய வசதிகளும் அமைத்துத் தருகிறார்களாம்.

இங்கே அந்த நிலைக்கு யாரும் போவது இல்லை. இப்படி இருக்கும் போதே எங்களைப் பற்றிச் சில பேர் தவறாகப் பேசுகிறார்கள். அதாவது மொத்தமாக 'இந்தக் கழுதைகள் சரியாக' நடந்து கொள்வதில்லை என்று பேசக் கேட்டிருக்கிறேன்.

அதற்குக் காரணம் என்ன? இந்த பஸ்ஸில் ஏற்படுகிற நெருக்கடிகள்தாம். பாவம் இந்த ஆண்கள் எங்களைச் சுற்றிக் கொண்டு இருப்பதை மற்றவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஒன்றும் ஆகிவிடுவது இல்லை.

அப்பொழுதெல்லாம் கூட அந்த முதல் டிக்கட்டு என்னை நெருங்கியதே இல்லை. அதற்கு அவனுக்கு தைரியம் கிடையாது. சும்மா நினைத்துப் பார்க்கிறேன். அவன் என்னை நெருங்கி இருந்தால் பேசாமல் அவனை காதலித்து இருப்பேன். ஏன் தப்பா? என்ன தப்பு. அதாவது கொஞ்சம் புதுமையாக இருந்திருக்கும்.

அந்தப் படங்களிலே ஒரு படம். ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. கம்மியூனிஸ்டு நாட்டுப் படமாக இருந்தாலும் பரவாயில்லை. ஆங்கில நாட்டுப் படம். இங்கிலாந்திலே எடுத்த படமாம். பிரமாதமான கருத்து. 'ராபின்சன்

குருசேவ்' இந்தப் படம்தான் அது. அவன் ஒரு கொள்ளைக் காரன். கடல் கொந்தளிப்பிலே வழி தவறி ஒரு தீவுக்குள் போய்விடுகிறான். கையிலே ஒரு துப்பாக்கி. அங்கே நீக்ரோ காட்டு மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களைச் சுட்டுத் தள்ளி அச்சுறுத்தி ஒருவனை அடிமைப்படுத்து கிறான். அவனுக்கு மொழி கற்றுத் தருகிறான். அவனைத் துப்பாக்கி காட்டியே அச்சுறுத்தி வேலை வாங்குகிறான். பிறகு பணத்தால் பணிய வைக்கிறான். அதுவும் தீர்ந்த பிறகு கடவுளைக் காட்டி அவனை அடிமைப்படுத்த முயல்கிறான். பாவம் அவன் வெற்றி பெற முடியவில்லை. அந்த அடிமை திரும்பிக் கொள்கிறான். அடிமை முரண் கொள்கிறான். அவன் கையில் துப்பாக்கி ஏந்தியதும் இவன் அடிபணிந்து விடுகிறான்.

என்ன அழகான கருத்து. உருவகம். பணக்கார நாடு கள் தம் அணுசக்தி பலத்தால் சிறு நாடுகளை அடிமைப் படுத்தி விடுகின்றன. இல்லாவிட்டால் உதவிகளைக் காட்டி அடிமைப்படுத்துகிறார்கள். இரண்டும் பலிக்காவிட் டால் தெய்வம், சமயம், பணம், பலம், கடவுள், கொள்கை இவற்றால்தான் அடிமைப்படுத்த முடியும். அடிமைப் பட்டுக் கிடந்தவன் துப்பாக்கி எடுத்துக் கொண்டால் இவன் கதி என்ன ஆகிறது.

'ஓடப்பர் எல்லாம் உதையப்பர்
ஆகிவிட்டால் எல்லாரும்
ஒப்பப்பர் ஆகிவிடுவர்'

என்ற பாரதிதாசனின் கவிதைகள்தான் நினைவுக்கு வருகின்றன.

அந்தப் படத்தை என்னால் மறக்க முடிவதே இல்லை.

அதோடு வானொலி நிலையத்துக்குப் போயிருந்த போது ஒரு நிகழ்ச்சி; அதையும் மறக்க முடியவில்லை.

அங்கே ஒரு எந்திரத்தின் முன்னால் நிற்பது போன்ற உணர்ச்சிதான் இருந்தது. அங்கே பணிசெய்த பெரு மக்கள் அனைவரும் வெறும் இயந்திரம் போல் காணப் பட்டார்கள். சிரிப்பதுகூட அவர்களுக்கு ஒரு சம்பிரதாய மாகக் காணப்பட்டது.

அதாவது 'மது ஒழிப்பு' எப்படி அமுலுக்குக்கொண்டு வருவது என்பதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார் கள். அதில் கலந்துகொள்ளவில்லை. தூர இருந்து கேட்டுக் கொண்டு இருந்தேன். எனக்கு 'யூத் புரோகிராம்' காத்துக் கிடந்தது. அதாவது நாங்கள் எப்படி இந்த உலகத்தைப் பார்க்கிறோம் என்பதுதான் விவாதம். எங்களுக்கு விருப்ப மான நாடகப் பாட்டு ஏதோ தயார் செய்தோம். எல்லாம் ஒரே குழப்பம் தான். ஏதோ சிரித்தோம். பாவம் அந்த டைரக்டர். வறண்ட சிரிப்பு எங்களோடு சிரித்தார். எங்க ளிடத்தில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. நாங்கள் சிரித்தோம் அவர் சிரித்தார்.

அதைவிட டெலிவிஷன் புரோகிராமுக்குப் போனேன். அது பிடித்து இருந்தது. முக்கியமாக அந்த மேக்கப் அறை. அவர்கள் ரொம்பவும் நன்றாகப் பழகுகிறார்கள். ரொம்பநாள் பழகியவாகள் போல் நடந்து கொள்கிறார்கள்' எனக்கு மேக்கப் வேண்டாம் என்று சொல்லிப் பார்த் தேன். அவர்கள் எங்கே கேட்கிறார்கள். 'light touch செய்து அனுப்பிவிடுகிறார்கள். நான் ரொம்பவும் அழகாக இருந்தேன்.

அந்த வானொலி நிலையத்தில் அந்தப் பெரிய மனிதர் கள் விவாதித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருவர் சொன்னார் முதலில் சாராயம் விற்பவர்களைத் தடுக்க வேண்டும் என்றார்.

"சரி அவனுக்குத் தொழில்" என்ற கேள்வியை எழுப்பினார்.

"வாங்குபவர் இருப்பதால் தானே குடிக்கிறுர்கள்" என்ருர் ஒருவர்.

"வாங்குகிறவர்கள் இருப்பதால்தானே வாங்குகிறு கள்" என்ருர் மற்ருெருவர்.

ஒரு டாக்டர் சொன்ஞர், அவர் ஒரு அரசியல்வாதி யாக இருந்து அங்கே ஒட்ட முடியாமல். வெளியே வந்து விட்டார். அவர் சொன்ஞர். "என் நண்பர்கள் சில பேர் இருக்கிறுர்கள், ஐந்து மணி வரை வேலை செய்கிறுர்கள். அதற்குமேல் பொழுது போவது இல்லை. அதனுல்தான் குடிக்கிறுர்கள்" என்று சொன்ஞர்.

"இப்போ புரட்சி நடிகர் நடிப்பது இல்லை. அதனுல் அந்த மாதிரி சண்டைப் படங்கள் வறட்சி" என்ருர் மற் ருெருவர். அவர் புரட்சி நடிகரின் சீடர் என்பது தெரிந்து கொண்டேன்.

"சினிமா ஒன்றுதான் ஏழைகளுக்குப் பொழுது போக்கு" என்ருர். "வேறு என்ன அவர்களுக்குத் தர முடியும்?" என்று கேட்டார்.

மற்ருெருவர் பேசிஞர். "இது கூடாது அது கூடாது என்று எல்லாவற்றையும் தடுத்து விடுகிருேம், பிறகு அவர் கள் எதை வைத்து வாழ்வது" என்று கூறிஞர்.

எனக்கு இந்த உலகமே அப்பொழுதுதான் தெரி கிறது.

"சந்தோஷம் என்பது மக்களிடமிருந்து ரொம்ப தூரம் விலகி விட்டது" என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சினிமா, கடவுள், கோயில், பஜனை, காலட்சேபங்கள் இவைகளும் மனிதனுக்குப் பொழுது போக்கத் தேவை

என்பதைத் தெரிந்து கொண்டேன். ஏதோ கதை டயலாக் பாட்டு சும்மா உட்காருவதற்கு ரசிப்பதற்கு அவர்கள் ஏதோ தயார் செய்து அனுப்பிக் கொண்டே இருக்கிறுர் கள். அந்தப் படங்களுக்கும் குடிபோதைக்கும் அதிக வித்தியாசம் சில சமயங்களில் தெரிவதில்லே. சரி ஏதோ ஒரு போதை வேண்டும். வரட்டுமே என்று தான் நினைப் பேன். முக்கியமாகத் தமிழ் நாட்டுப் படங்கள் பெண் களேயே பிரச்சனேயாக வைத்துப் படங்களே எடுக்கின்றன என்பதை மட்டும் என்னுல் உணர முடிந்தது. அதாவது அவர்களுக்காக இரக்கப்படுகின்ற படங்கள் தான் ஏராளம். ஆனுல் ஒன்றுகூட வழி கூறி நான் பார்க்கவில்லே. முடியாது. சொல்லிவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது.

நானும் தான் இந்த அனுபவங்களே வைத்து எண்ணிப் பார்க்கிறேன். என் பிரச்சனே என்ன? அந்த முதல் டிக்கட்டு நண்பன் நாடகத்தில் எடுத்த போட்டோ அதை அவன் வைத்துக் காப்பாற்றியது. அதை வைத்துக் கொண்டு அவன் கதையைப் பின்னி விட்டான். அவன் பின்னிவிட்டான் என்று எப்படிச் சொல்வது. கதை தாஞக அப்படிப் பின்னிக் கொண்டது.

வாழ்க்கைச் சிக்கல்களேத் தமிழ்ப் படத்தில் எழுப்பி விடுகிருர்கள். ஆனுல் அவர்களால் தீர்த்து வைக்க முடிவ தில்லே. அது உண்மை தான். என் சிக்கல் மட்டும் எப்படி எழுந்தது ஏன் எழுந்தது. அது இன்றைய சமுதாய வாழ் வின் சூழ்நிலே. அதைத் தீர்க்க முடியுமா? முடியாது; முடிந்துவிட்டால் அதற்குச் சிக்கல் என்று கூற முடியாது.

ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள் என்பது பழமொழி; மோகம் முப்பது வருஷம் என்பது திரைப்படம் காட்டும் புது வழி. ரவி பிறந்ததும் அது மாறிவிட்டது அது என் வழி. நானும் 'அவரை'ப் பற்றி அதிகம் கவலேப்படுவ தில்லே.

உதய ஞாயிறு போல் தோன்றி ஒளிவிடும் என் ரவி எனக்கு வாழ்க்கையில் ஒளி தந்தான். மறுபடியும் நினைத்துப் பார்க்கிறேன். அந்த மகாகவியின் வார்த்தைகளை

கன்னிமை என்பது பிச்சைப் பாத்திரம்

தாய்மை என்பது அட்சயப் பாத்திரம்"

நான் என் வாழ்க்கைக்காக அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதைத்தான் காதல் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

நரம்பில் ஓசை எழுப்புவதற்காக அது மீட்டப்படுகிறது. அந்தக் கானம் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஆனால் அதை எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அந்த நரம்புகள் சில சமயம் அறுந்து விடுகின்றன. அறுந்த நரம்புகள் மறுபடியும் கட்டப்பட வேண்டும். அதை யார் கட்டுவது.

ரவியின் விளையாட்டில் நான் என் கவலைகளை மறப்பேன். கவலை என்பது என்ன? முடிவு செய்ய முடியாதது தான். நம் லட்சியப் பாதை எது என்று வகுத்துக் கொள்வதில் தான் போராட்டமே ஏற்படுகிறது. மற்றவர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. அதனால் அவர்கள் நிம்மதியாக எப்படியோ வாழ்கிறார்கள் ஆனால் அவர்களால் சுற்றுப்புறம் சுகப்படுவது இல்லை. அவர்கள் சுகப்படுகிறார்கள்.

கவிதைப் பயித்தியம் என்ற ஆசிரியர் ஒருவரைக் குறிப்பிட்டேனே அவரை நான் மறக்க முடிவதில்லை. கவிஞனுக்கு வேண்டிய லட்சிய வெறி அவர் பார்வையில் கிடந்தது. நான் தவறாகக் கணித்தேன். அவர் வாழ்க்கையில் குறுக்கிடக் கூடாது என்றும் இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்கள் என்று நான் அந்தக் காலத்தில் எண்ணிப் பார்த்ததே இல்லை.

அவர் எப்பொழுதும் சமுதாயத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருந்தார். அவர் எழுதிய கவிதை ஒன்று அதி அற்புதமானது.

'அவன் ஒரு தொழு நோயாளி
அவன் கடவுளைத் தொழுதான்
அவன் ஒரு தொழு நோயாளி'

அவர் நினைத்துப் பார்க்கவே இல்லை. அதற்கு இப்படி ஒரு பொருள் இருக்கும் என்று. கடவுளைத் தொழுபவன் ஒரு நோயாளி; அவன் நோய் தொழுதல் என்ற கருத்துப் பட அந்தக் கவிதையை அமைத்து விட்டார்.

கடவுளைத் தொழுவது மட்டும் நோயல்ல. மனிதர்களைத் தொழுது பிழைப்பதே ஒரு நோய் என்று அதற்கு விளக்கம் தந்தார்.

இந்த நாட்டிலே சமுதாயச் சிந்தனையே குறைந்து விட்டது என்று அவர் அடிக்கடி கூறுவார். இந்த நாட்டில் மிகப் பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் (அப்படி யாரும் இல்லை. அப்படிச் சொல்லிக் கொள்கிறவர்கள் தாம் மிகுதி என்பது அவரது கருத்து) தனி மனிதர் தன்மையையே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அது மாறவே எழுத்தாளனுக்கு ஒரு மகத்தான தொண்டு காத்துக் கிடக்கிறது என்று கூறுவார்.

அதாவது இந்த நாட்டுக்கு அரசியல் சமூகப் பிரச்சனைகளை சோஷயலிச கண்ணோட்டத்தோடு பார்க்கும் எழுத்தாளர்கள் தேவை என்பது அவர் மதிப்பீடு அந்தப் பார்வையைப் புகுத்தினால்தான் மனிதர்கள் தாம் செல்லும் பாதை இன்னது என்பதை உணர்வார்கள்.

பத்திரிகைகள் இந்த நாட்டில் ஒரு வியாபார நிறுவனம் என்று கூறுகிறார். சில அரசியல்வாதிகள் அவற்றிற்கு

முதலீடு செய்கிறார்கள். அவர்கள் கைப்பாவைகளாக பிரபல ஆசிரியர்கள் திகழ்கிறார்கள் என்று விளக்குகிறார்.

மக்கள் எப்படியாவது தாம் மட்டும் வாழ்ந்துவிட்டால் போதும் என்று நினைக்கிறார்கள். பிறரைப் பற்றிக் கவலைப் படுவது இல்லை. இந்த நாட்டில் அமைதியைத் தேடி அலை கிறார்கள். வெளிநாட்டில் வளர்ச்சியைத் தேடி உழைக் கிறார்கள். வாழ்க்கையிலிருந்து தப்பி ஓட முயல்வதுதான் இந்த நாட்டு சித்தாந்தம். வாழ்க்கையை வாழ்ந்து காட்டு வது மேல்நாட்டுப் போக்கு என்று அடிக்கடி சொல்வார்.

நான் அவ்வப்பொழுது அவர் கவிதைகளில் ஈடுபடு வது உண்டு. அவர் கையெழுத்துப் போட்ட அந்த முதல் பிரதியைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அதை மட்டும் யாருக்கும் கொடுக்கமாட்டேன்.

ஒரு நகைச் சுவையை என்னால் மறக்க முடியவில்லை.

அவர் பிறர் மனம் புண்படுகிறதே என்பதற்காகக் கவலைப்பட்டது இல்லை. அதற்கு அவர் கவிதையை அதற் காகப் பயன்படுத்துவார். மேற்போக்கான பொருள் ஒன்றும் உள்ளே ஒரு பொழுதும் அமையப் பேசுவதில் அவர் வல்லவராக இருந்தார். கவிதையில் நகைச்சுவையை அவரால் புகுத்த முடிந்தது. இலக்கியத்தில் அது ஒரு புதுமையாக இருந்தது.

'அவன் ஒரு தொழு நோயாளி
அவன் கடவுளைத் தொழுதான்
அவன் ஒரு தொழுநோயாளி'

என்பதை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

பெரியார் ஆயிரம் வார்த்தைகளில் சொல்வதை மூன்று வார்த்தையில் அவரால் சொல்ல முடிந்தது. கவிதைக்கு

உரிய ஆற்றல். அப்பொழுதுதான் விளங்கியது. கவிதை ஆற்றல் மிக்கது. அது மனிதர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும்; அது மட்டும் அவன் நரம்புகளை நிமிர்த்தி வீறு கொள்ளச் செய்யும் என்று கூறுவார்.

அவர் முற்போக்கான கருத்துகள் எனக்கு ரொம்பவும் பிடித்து இருந்தது. இப்படி ஒருசில ஆசிரியர்கள் வாழ்வதால்தான் மாணவர்கள் நல்லதில் நம்பிக்கை கொள்கிறார்கள். கேவலம் பணம்தான் பெரிது என்று நம்பிக்கொண்டும் பிரச்சாரம் செய்து கொண்டும் வாழும் கீழ்மக்களின் இடையே இப்படி ஒரு சில லட்சியவாதிகளும் வாழும் பொழுது வாழ்க்கையில் நம்பிக்கை பிறக்கிறது. அவருடைய எழுத்து மாறவேண்டும் என்பது என் ஆசை கவிஞர்கள் நேரிடையான பிரச்சனைகளில் ஈடுபட முடிவதில்லை. நாவலாசிரியர்கள் ஈடுபட முடியும் என்பது என் நினைவு. மக்களைத் திசை திருப்பிவிடும் எழுத்துக்கள் மிக்க சூழ்நிலையில் தொடர்ந்து அவர்கள் வளர்ச்சியைக் காட்டும் எழுத்து அடிப்படை என்பதை அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

அவர், "நான் இந்த ஆசிரியர் பணியில் இருக்கும் வரை முழு எழுத்தாளன் ஆக முடியாது. நாங்கள் அரசியல் சமுதாய நேரிடையான பிரச்சனைகளில் ஈடுபட முடியாது; சட்டம் அதற்கு இடம் தராது. மேலும் நாங்கள் பணி செய்யும் நிறுவனங்கள் எங்களை வீட்டுக்கு அனுப்பி விடும் என்று விளக்கினார்'.'

அப்பொழுதுதான் புரிந்தது. அவர் ஏன் நாவல் எழுதுவது இல்லை என்று. நாவல் எழுதுபவர் பெரும்பாலும் பத்திரிகை ஆசிரியர்களாகத்தான் இருக்க முடியும். அவர்களுக்கு அரசியல் சமுதாயச் சிந்தனைகள் இருக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்தேன்.

அதை என்னல் ஏற்றுகொள்ள முடிவதில்லை.எனக்கே நாவல் எழுத வேண்டும் என்ற ஆசை எழுவது உண்டு. ஆனல் அதை மட்டும் செய்ய வேண்டாம் என்று அவர். அறிவுரை சொல்லி இருக்கிருர். அதில் உன் சொந்தவாழ்வு வெளிப்பட்டுவிடும். சிலவற்றை மறைத்து வைத்து வாழ் வதுதான் அறிவுடைமை. அதை வெளிப்படுத்துவதால் மற்றவர்கள் தவருக நினைப்பார்கள். அதிலும் பெண்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறுவார்.

நான் ஒரு சிறு கதை எழுதி இருக்கிறேன். அதில் ஒரு பெண் தன் இதயத்தை ஒருவனுக்கு அர்ப்பணித்து விடு கிருள். என்னமோ தெரியவில்லை. அவன் அவள் இதயத் தில் இடம் பிடித்து விடுகிருன்.

"என் இதயத்தில் நீ முழு இடம் பெற்றுவிட்டாய் உன்னை அகற்ற நான் முயல்கிறேன்."

"நீ பெயர மறுக்கிருய்"

என்று அவள் சொல்லுவதாக ஒரு வாசகம் வருகிறது

"அந்த இடம் எனக்கு இதம் தருகிறது. இதம் தருவ தால்தானே அது இதயம் ஆகிறது. நீ இடம் தர மறுத்தால் நான் எங்கே குடிபோவேன். மணமாகாத எனக்கு யார் குடி இருக்க வீடு தருவார்கள். நான் எங்கே சுற்றினுலும் எனக்கு ஓய்வு கொள்ள ஒரு இடம் வேண்டாமா? அந்த இடம் உன் இதயம்தான்" என்று அவன் பதில் பேசு கிருன்.

"இதயக் கோயிலில் உன்னை நிறுத்துகிறேன். என் கண்ணீரைச் சொரிந்து உன்னைக் குளிப்பாட்டுவேன்; என் சுவாசத்தால் உனக்கு இனிமையான தென்றலைப் படைப்பேன். என் இனிய பேச்சால் உனக்கு இசை எழுப்பிக் காட்டுவேன். என் உணர்வுகளால் உன்னை

வைத்து அசைத்துத் தாலாட்டித் துயில வைப்பேன்'' என்று அவள் பதில் எழுதுகிருள்.

"ஏன் உன் இதயத்தைக் கேட்கிறேன் தெரியுமா? அது மென்மையாக இருந்தாலும் உழைப்பாளியின் உழைப்பைப் போல உன்னதமானது'' உறுதியானது என்று அவன் பதில் எழுதுவான்.

இப்படி ஏதேதோ 'கற்பனைக் காதல்' என்ற ஒரு கதையை எழுதித் தந்தேன். அது கல்லூரி மலரில் வெளி யாகி இருந்தது.

அந்தக் கவிதைப் பயித்திய ஆசிரியருக்கு அது மிக வும் பிடித்திருந்தது,

"உன் எழுத்தில் கவிதை மணம் வீசுகிறது. நீ சிறந்த கவியாவாய்'' என்று பாராட்டினுர்.

அதை மட்டும் நான் விரும்பவில்லை. நான் எழுத்தாள ளுகவோ, கவிஞுகவோ மாற விரும்பவில்லை என்று சொல்லிவிட்டேன்.

"ஏன்'' இது அவன் கேட்ட கேள்வி.

சாதாரண அனுபவங்களை எழுதுவதுதான் இலக்கியப் படைப்பு என்ற கருத்து நிலவி வருகிறது. பெண் எழுத் தாளர்கள் அவர்கள் வீட்டுப் பிரச்சனைகளை எழுதுகிருர் கள். சாதாரண குடும்ப உறவுகளைத் தீட்டுகிருர்கள். அவ் வளவுதான் எழுத முடிகிறது, இவை மலிந்து விட்டன. நானும் அவர்களுள் ஒருத்தியாக விரும்பவில்லை'' என்று சொல்லிவிட்டேன்.

"அப்பொழுது நீ என்னம்மா செய்யப் போகிருய்?''

"என் பாட்டி எனக்கு ஒரு வீடு வைத்திருக்கிருர்கள். அதில் மாதம் ஐந்நூறு ரூபாய் வரும். அதை வைத்துக் கொண்டு வாழ முடியும்'' என்றேன்.

"நீ மட்டுமா?"

நான் சிரித்தேன்.

அவருக்கும் திருமண அழைப்பு அனுப்பி இருந்தேன். அவர் தலைமையில்தான் எங்கள் திருமணமே நடந்தது

"திருமணம் என்பது மிக்க குறுகிய எல்லைக்குச் சென்றுவிட்டது. ஒவ்வொரு வீடும் குறுகிய எல்லைக்குள் இயங்குகிறது. சமுதாய வீதியில் நாம் உலவ வேண்டும் என்ற நினைவு எழுவது இல்லை. அவர்கள் வீட்டு முற்றத்திலேயே காற்று வாங்கினல் போதும் என்று நினைக்கிறார்கள். இது மாறவேண்டும்" என்று கூறினர்.

ரொம்ப பேர் திருமண நாளில் அறிவுரை சொல்லிக் கேட்டு இருக்கிறேன். 'அளவோடு பெற்று வளமாக வாழவேண்டும்' என்று கூறி வருகிறார்கள். இதைக் கேட்கும் போது மணவாழ்வின் அடிப்படையை அவர்கள் விளக்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். இரண்டுபேரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் நேசித்து வாழவேண்டும் என்று கூறி வருகிறார்கள்.

சில பேருக்குப் பேசத் தெரிவது இல்லை. சீர்திருத்த மணம் எவ்வளவு அவசியம் என்பதைப் பேசுவார்கள். சிலபேர் அந்த மேடையையும் அரசியல் மேடையாக மாற்றிவிடுகிறார்கள். என் மணநாள் அப்படி அமையவில்லை. அந்தக் கவிஞர் ஆசிரியரைத் தலைமை தாங்கும் படி நடத்திக்கொண்டேன்.

அந்த மணத்துக்கு அந்தச் சினிமா நண்பனும் வந்திருந்தான். அவன் முகத்தில் அன்று மகிழ்ச்சியே இல்லை. அவன் மனைவிக்கே திருமணம் நடப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு இருந்தது போல் இருந்தது. அவனுக்கு உரிய ஒருத்தியை யாரோ ஒருவன் உரிமை கொண்டாட வருவது போல் அவனுக்கு இருந்தது.

அந்த நிகழ்ச்சியை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். அவன் வாழ்க்கையையே சினிமாப் படம் பார்ப்பது போல இதுவரை எட்டியே பார்த்து வந்தான்: அவன் உள்ளத்து உணர்வுகளை நான் அறிய முயன்றதே கிடையாது; அவன் வெளிப்படுத்தியதும் இல்லை.

பாரசீகக் கவிதையை அம்மொழியில் படிக்காமல் மொழி பெயர்த்துப் படிப்பது போல் அவன் மௌனமாக என்னை ரசித்து வந்தான். பிறகுதான் தெரிந்து கொண் டேன். அவன் முதல் படம் வருவது படத்துக்காக அல்ல; எனக்காகத்தான் என்பதை. நான் முதல் படத்துக்குப் போகிறேன் என்பதை அவன் தெரிந்து கொண்டான்; அதற்காகத்தான் அவனும் வந்தான் என்பதை இப் பொழுது நினைத்துப்பார்க்கிறேன்.

என்னுடைய பிறந்தநாளை நான் விரும்பிக் கொண்டாடு வேன்; பொதுவாக அது அரசியல் தலைவர்கள் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுவதைப் பார்த்திருக்கிறேன். அதாவது personality cult அவர் களுக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது. அண்ணாசாலை வழியாகப் பல்கலைக் கழகத்துக்குச் செல்வது உண்டு. அப் பொழுது எல்லாம் இந்த போஸ்டர்களைப் பார்த்து இருக்கிறேன். ஒரு போஸ்டர் மறைந்தால் உடனே மற்றொரு போஸ்டர் அடுத்த மாதம் இடம் பெறும்.

எப்படியும் ஒரு தலைவர்க்கு மாறி மாறிப் பிறந்த நாள் வருவது உண்டு. ஆக அமைச்சர்கள் என்றால் பிறந்த நாள் கொண்டாட வேண்டும் என்ற நியதி அமைந்து கிடந்தது. இப்பொழுது அது மறைந்து வருகிறது. பொது வாழ்வில் இது ஒரு பெரிய மாற்றம் என்பதைக் காண முடிகிறது.

அந்த நாட்களில் எனக்குச் சில வாழ்த்துகள் வரும்; யார் அனுப்புகிறார்கள் என்பதே தெரியாது. அந்த முகமூடி மனிதர் யார் என்பதே தெரிவது இல்லை.

"உன்னை நான் நினைத்துக்கொண்டே இருக்கிறேன். நீ என் உள்ளத்தில் ஒரு ஓவியமாக நின்று விட்டாய்; நீ மேடையில் பேசும் ஒவ்வொரு பேச்சையும் நான் ரசித்து இருக்கிறேன். நீ உன் பேச்சில் என்னைக் கவர்ந்திருக்கிறாய். உன் நா வன்மையை வியந்து இருக்கிறேன். நீ உன் பிறந்த நாள் வாழ்த்துகள்" என்று கடிதம் வரும்.

மற்றொரு கடிதம் வரும்.

"நீ என்னை ஏமாற்றிவிட்டாய். உன்னை எப்படியாவது மணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதே நினைவில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்று எழுதி அனுப்புவான்.

நடிகைகளுக்கும் பாடகிகளுக்கும் இந்த மாதிரிக் கடிதங்கள் வரும்; பார்த்திருக்கிறேன். எழுத்தாளர்களுக்கும் வரும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சுழற் கோப்பைப் பேச்சாளிக்கும் கடிதங்கள் வருகின்றன என்பது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தன.

யாரும் அழகுச்சுவை கெட எதுவும் எழுத மாட்டார்கள். எல்லாம் கண்ணியமாகவே இருக்கும். அவன் ஊர் பேர் தெரியாமல் வரும் ரசனைக் கடிதங்களை நான் ஸ்டாம்பு சேர்ப்பது போலப் பொழுது போக்காகச் சேர்த்து வைப்பது உண்டு. இதை ஒரு ஆல்பமாகவே பைல் செய்து வைத்திருக்கிறேன்.

யாருக்குமே என் பிறந்த நாளைப் பற்றிச் சொன்னது இல்லை. அது அவர்களுக்கு எப்படியோ தெரிந்து விடுகிறது. ஒன்று என் விடுமுறை விண்ணப்பத்தில் எழுதி இருக்க வேண்டும் அல்லது என் சினேகிதர்களுக்குச் சொல்லி இருக்க வேண்டும். அவர்களிடம் சொன்னாலே அது எப்படியோ பரவி விடுகிறது. அவர்கள் மட்டும் என்

வீட்டுக்கு வருவார்கள். அன்று நான் ஒரு மணப் பெண் போல இருப்பேன். அப்பொழுதெல்லாம் எனக்கு மணமாகவில்லை,

சம்பிரதாயமான பட்டுப் புடவை கட்டிக் கொள்வதில் தனி மகிழ்ச்சி அடைவேன். எனக்குப் பிடித்த 'காப்பிக் கலர்' புடவை இன்னும் பத்திரமாக வைத்து இருக்கிறேன். காதில் 'பல்லி' வடிவம் கம்மல் ஒன்று அதைப் போட்டுக் கொள்வேன். என் சினேகிதிகள் அதையே பார்த்து ரசிப்பார்கள், சே! இது என்ன? பாஷன் என்பார்கள், அது நானே தனியாகச் சொல்லிச் செய்து கொண்டேன் என்று செல்லுவேன்.

அது அப்படிப் பரவிவிட்டது. அவர்களும் இப்பொழுது ஒருவர் இருவர் செய்து போட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

எதுவுமே யாரோ ஒருவர் முதலில் ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. அதை மற்றவர்கள் சுலபமாகப் பின்பற்றி விடுவார்கள். ஆஷா அந்தப் பிறந்த நாள் விழாவுக்கு வருவாள். அவள் குள்ளமாக இருந்தாள் என்பதை ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அவள் என் பக்கத்தில் நிற்க வெட்கப்படுவாள்.

நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு போட்டோ பிடித்துக்கொண்டோம், அந்த ஸ்டுடியோவில் எங்கள் படத்தை மாட்டி வைத்திருக்கிறார்கள். அது அவனுக்கு ஒரு விளம்பரப்பட ாக அமைந்து விட்டது. எதிலும் ஒரு முரண்பாடு இருந்தால் தான் அது ரசிக்கத் தக்கதாக இருக்கிறது.

ஒரு தாய் தன் மகனைப் பிரிந்து வேதனைப்படுகிறாள். அவன் வெளிநாட்டுக்குச் செல்கிறான். அவன் பிரிவைத் தாங்க முடியாமல் வருந்துகிறாள்.

பக்கத்து வீட்டு அம்மையார் அவளுக்கு ஆறுதல் சொல்கிறள்.

“என் மகனே எங்காவது போய்த்தொலே என்று சொல்கிறேன். வீட்டில் இருந்து கொண்டு எதுவும் செய்யாமல் சுற்றிச் சுற்றி வந்து தொலேகிருயே என்று வருந்துகிறேன்” என்று தான்சொல்ல வருவதை எடுத்துக் காட்டுகிருள்.

இது என் வாழ்வில் கண்ட ஒரு அனுபவம்.

எப்பொழுதுமே ஒரு 'காண்ட்ராஸ்ட்' இருந்தால்தான் எதையும் ரசிக்க முடிகிறது என்பது அந்தப் படத்தைக் கொண்டு அறிய முடிந்தது.

அப்பொழுது இருந்தே ஆஷா என்னேடு நெருங்கிப் பழகினள். அவள் அடிக்கடி இப்பொழுது வந்து ஆறுதல் சொல்கிருள். எனக்காகக் கண்ணீர் விடுகிற ஜீவன்கள் யாரும் இல்லே அவளேத் தவிர. என்னே ரசித்தவர்கள் பல பேர். என் பிறந்த நாளேக் கொண்டாடியவர்கள் பலபேர். என்னே வைத்துக் காதல் கவிதைகள் புனேந்தவர்கள் எவ்வளவோ பேர். எனக்காகக் கைதட்டி ஆரவாரித்தவர்கள் எவ்வளவோ பேர். என் சுமையைக் குறைக்க என் கண்ணீரைத் தன் உள்ளத்தில் அழியாச்சித்திரமாக எழுதி வைக்கும் ஒரே தோழி ஆஷாதான். அவள் சென்னேக்கு வரும் பொழுதெல்லாம் என் வீட்டில் தங்காமல் இருக்க மாட்டாள். ரவிக்குக் கூட அவள் வந்தால் ரொம்பவும் பிடிக்கும்.

அவள் இடுப்பை அவன் கரங்கள் சுற்றிக் கொள்ளும். அவள் பால்மாருமல் வெளியே எடுத்துப் போகத் தயங்க மாட்டாள். அவளுக்கு இன்னும் குழந்தையே பிறக்க வில்லே. எனக்குப் பின்னுல் தான் புரிந்து கொள்ள முடிந்தது, அதுவும் ஒரு காரணம். இரண்டு பேர் பிரியாமல் இருப்பதற்கு என்பது.

அந்த நிலையில் அவர்கள் உள்ளம் மலர்ச்சி பெற வில்லை. ஒருவரை ஒருவர் ஆக்கிரமித்துக் கொள்ள விரும்பி னார்கள். "அவள் என் உடைமை" என்ற எண்ணம் ஆடவர்களுக்கு அமைந்து விடுகிறது. அதைவிட பெண்ணுக்குத்தாம் உறவு நெருங்கி அமைகிறது. குழந்தை யால் பிணைப்பும் உண்டாகிறது; பிளவும் ஏற்படுகிறது. இது என் வாழ்வில் கண்ட உண்மை; குழந்தை இன்மையால் வேற்றுமையும் உண்டாகிறது, ஆனால் அதே சமயத்தில் ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவர் ஆகியும் விடுகின்றனர். இது அவள் வாழ்க்கை.

அவளுக்கு ரவி என்றால் உயிர். அவள் என்னைப் பார்க்க வருகிறாள் என்பதை விட அவனைப் பார்க்க விரும்புகிறாள் என்பது தான் உண்மை. அவனை எடுத்துக் கொஞ்சும்போதெல்லாம் அவள் ஏக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

அவள் சேலையைத் திடீர் என்று நனைத்து விடுவான். அதற்காக அவள் கவலைப்பட்டதே இல்லை. அவள் தாயாக வில்லை. அவன் அவளுக்குத் தாய்மையைத் தந்தான். குழந்தை பெற்றுத் தான் தாய், ஆகவேண்டும் என்பது இல்லை. அதை எடுத்து வளர்ப்பதாலேயே தாய்மையைப் பெற முடியும் என்பதை அவளால் தெரிந்து கொள்ள முடிகிறது.

"உனக்குக் குழந்தை இல்லை என்று ஏன் வருந்து வதில்லையா?" என்று வாய் தவறிக் கேட்டு விட்டேன்.

"நான் என் கணவனையும் இழக்கத் தயார். ஆனால் எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் போதும்" என்றாள்.

எப்படி அவள் குழந்தையை மதிக்கிறாள் என்பதை அந்தச் சொற்கள் உணர்த்திவிட்டன். 'பெண்' யார்? அவள் உள்ளம் எது என்பதை அவள் சொற்கள் உணர்த் தின.

ஏன் என் நிலைமை மட்டும் என்ன. என் 'அவர்', என்னைப் புறக்கணிப்பதற்காகக் கவலைப்படவில்லை. என் ரவியின் செந்தளிர்க் கரங்களால் என்னைத் தொட்டால் போதும் என்று தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அந்தக் கவிதைப் பயித்தியத்தோடு சேர்ந்து நானும் ஒரு கவிதைப் பயித்தியம் ஆகிவிட்டேன்.

ஏணிப்படிகள் என்று தலைப்பு இட்டு ஒரு அழகான கவிதையை எழுதினேன்.

## ஏணிப்படிகள்

நீ மிக உயர்கிறாய்; எப்பொழுது?
பொருள் புகழ் இவற்றை மதிக்காத போது.
யார் சொன்னது?
இவை இரண்டும் அடைய முடியாதவர்கள்.
நீ என்ன நினைக்கிறாய்?
பொருளும் புகழும் இருக்கும்போது தான்
உன்னால் உயர முடியும்
இவை உயர்வுக்கு ஏணிப்படிகள்.

இந்தக் கவிதையும் கல்லூரி மலரில் இடப்பட்டது. மாணவர்கள் பாராட்டினார்கள். ஆசிரியர்கள் சிலர் கண்டித்தார்கள். மரபு கெட்டு விட்டது என்று அவர்கள் கண்டிக்கும் பொழுதுதான் எனக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. அது முதல் நிறைய கவிதைகள் எழுதத் தொடங்கினேன்.

## அடிச் சுவடிகள்

இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள்;
அது ஒரு மரணத்தைப்பற்றி.
வாழ்வின் விமரிசனம் அவர்கள் பேசியது.
"போகும் போது எடுத்துப் போவது
ஒன்றும் இல்லை" என்பது அவர்கள் பேசியது.
"விட்டுச் செல்வது புகழ், பொருள், சந்ததிகள்;
இவை மட்டும் அல்ல அடிச் சுவடிகள்;
ஆனால் அவையும் விரைவில் மறைந்து விடுகின்றன.
எப்பொழுது? பலர் அதே வழியில் நடக்கும் பொழுது"

என்ற கவிதையை எழுதிக் கவி அரங்கில் படித்துக் காட்டினேன்.

அன்று எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். பொதுவாகத் தலைப்பைக் கொடுத்து விடுகிறார்கள். அதை வைத்து ஒவ்வொருவரையும் கவிதை பாடச் சொன்னார்கள். பாடத்தொடங்கி விட்டேன். மாணவர்களிடையே கவிதை தான் மிகவும் செல்வாக்குப் பெற்று இருந்தது. இலக்கியம் பயிலும் மாணவர்களுள் பத்துப்பேரில் இரண்டு பேர் கவி இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். ஓவியம் தீட்டுவதை போல அவர்கள் கவிதை புனைந்தார்கள். ஆனால் அவற்றில் ஆழ்ந்த பொருள் இருப்பது இல்லை.

என்னைப்போன்ற மாணவர்களின் எழுத்தில் உணர்வு மேலோங்கி நின்றது. ஆனால் சுவை குறைந்து கிடந்தது. நகைச்சுவையை அதிகம் காண முடிவதில்லை. யாரோ ஒரு சிலர்தான் நகைச்சுவையை வளர்க்கிறார்கள். அழுகைச் சுவையை வளர்க்காமல் இருந்தால் போதும் என்று நினைத்துக் கொள்வது உண்டு.

நான் படிக்கிற காலத்தில் கதை கட்டுகிறவர்களும் இல்லாமல் இல்லை. ஒரு ஆசிரியர் ரொம்பவும் இசையோடு பாடுவார், அவரோடு நெருங்கிப் பழகுவேன். ஏன்? சில இராகங்களைப் பழகிக்கொள்ள. அவர் ஒரு தேர்வாளராக இருந்து விட்டார். அவ்வளவுதான். நான் அவரை மதிப் பெண் பெறத்தான் சுற்றி வருகிறேன் என்று பேசியவர் களும் இருந்தார்கள். ஆசிரியர்களோடு நெருங்கிப் பழக முடிவது இல்லை. ஏன் இந்த மாதிரி ஒரு சிலர் பேச வாய்ப்பு ஏற்படுவதால். அது மட்டும் இல்லை. ஆசிரியர்கள் ஒழுங் காக நடந்து கொள்வது இல்லை என்று ஒரு சிலர் கதை கட்டி விடுகிறார்கள். அதை நான் நம்புவதில்லை.

நான் நம்புகிறேனோ இல்லையோ, சிலரைப் பற்றிப் பேசக் கேட்டிருக்கிறேன். ஒரு பேராசிரியர் தன் மாணவியை வம்புக்கு இழுத்தாராம். அதைப்பற்றயே ரகசியமாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள். பாவம் அவர்களும் அதிகமாகப் பேசுவது இல்லை. இவ்வாறு பிறர் குறைகளை எடுத்துப் பேசுவதே அநாகரிகம் என்பதை உணர்ந்து வந்தார்கள்.

நான் பழகிய ஆசிரியர்கள் அனைவரும் நல்லவர் களாகவே இருந்தார்கள். ஆனால் அவர்களுள் ஒருவர் என்னைப் பார்த்து அடிக்கடி கேள்விகள் கேட்பார். அவர் என்னிடத்தில் பேச வேண்டும் என்ற ஆசையை இப்படிக் கேள்விகள் கேட்டுத் தீர்த்துக் கொண்டார். உட்கார்ந்து கொண்டு இருக்கிற என்னை எழுப்பி என் வாயைக் கிளறுவதில் அவர் ஒரு தனி ரசனையைக் கண்டார். நான் அதிகம் பேச விரும்புவதில்லை. தெரியாது என்று ஒரு சொல்லில் பேசி முடித்து விடுவேன். அதுதான் அவருக்குத் தரும் பதிலாக இருந்தது. அவருக்கு வேறு எப்படி நான் பதில் சொல்லமுடியும்?

நாட்டு வாழ்த்துப் பாட்டுக்கு நான்தான் கிடைத்தேன் மற்ருெருத்தி என் சிநேகிதி. அவளும் என்னேடு சேர்ந்து பாடுவாள். அவளுக்கு சினிமாப்பாட்டு ராகம் தான் வரும். எனக்குக் கொஞ்சம் பழைய ராகம் வரும். இரண்டு பேருக்கும் ஒத்து வருவதே இல்லே. எப்படியோ பாடி முடித்து விடுவோம்.

அந்தக் கூட்டங்களுக்கு நான் அதற்காகவே ஒரு வெள்ளேப் புடவை உடுத்திச் செல்வேன். பின்னல் ஒற்றை ரோஜாப்பூ வைத்துக் கொள்வேன். உண்மையான பூ எங்கே கிடைக்கிறது? சில சமயம் பிளாஸ்டிக் பூவும் வைத்துக் கொள்வது உண்டு.

என்னே 'பிளாஸ்டிக்' பூ என்று தூர இருந்து கிண்டல் செய்வதையும் கேட்டு இருக்கிறேன். 'காகிதப் பூக்கள்' என்ற கவிதை எனக்கு நினேவுக்கு வருகிறது. காமராசன் எழுதிய கவிதை அது. அலிகளேப்பற்றி அவர் எழுதி யிருந்தார். அதைப் படித்த பிறகுதான் இப்படிக் கூடவா மனிதர்கள் இருப்பார்கள் என்று நினேப்பது உண்டு. அவர்களுக்கு உடல் இன்பம் அடைய முடியாத நிலே; பெண்ணுகவும் வாழ முடியாது. ஆண்மையும் கிடையாது. சுகத்தை இழந்த ஒரு கூட்டம் அது. அதைப்போல் அவர் ஒரு கவிதை பாடியிருக்கிருரே என்று நினேக்கும்பொழுது அந்தக் கவிஞரைப் பாராட்டாமல் இருக்க முடிவது இல்லே.

நான் என் உடன் மாணவிகளுக்கு வெறும் 'பிளாஸ்டிக் பூ'வாகத்தான் விளங்கினேன்; கவர்ச்சி இருந்தது. ஆனல் மணம் வீசவில்லே. அவர்களுக்கு என்னேப் பார்க்க இடம் தந்தேன். என்னே மணக்க யாரும் முயலவில்லே. அந்த எண்ணம் எனக்கும் வந்தது இல்லே. யாருக்கும் எழுந்தது இல்லே. அழகுள்ள பொருள் நான்; அப்படி நினேக்கிறேன்; அப்படி மற்றவர்கள் என்னே நினேக்க வைக்கிருர்கள். நினேக்க வைத்தார்கள்.

எனக்கே அழகில் தனி மயக்கம் இருந்தது. அந்தக் கவிதைப் பயித்தியத்துக்கு அதுதான் ஆசிரியருக்கு மணம் நடந்தது. அந்த மணப்பெண் மிக அழகாக இருந்தாள். எனக்குள்ளாகவே இந்த ஆசிரியர்களின் துணைவியர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது உண்டு. ஏதாவது சாக்குக் கிடைத்தால் போய்விடுவேன். அவர்கள் பெரும்பாலும் நல்லவர்களாகத் தான் இருந்தார்கள். அவர்களை நான் ரசிக்கவில்லை; அவர்கள என்னை ரசித்தார்கள். யார் இந்த பெண்?" என்ற கேள்வியைக் கேட்பார்கள். பலரோடு நானும் ஒருத்தியாக இருந்தேன். என்றாலும் என்னைப் பற்றி இந்தக் கேள்வியைக் கேட்கும் போது என் தலை கொஞ்சம் சுற்றும்.

"இவள் எங்கள் கல்லூரியில் படிக்கிறாள்"

"ரொம்ப சுருசுருப்பு"

"கவிதை எழுதுவாள்"

"அடிக்கடி வானொலியிலிருந்து

அழைப்பு வரும்"

"தொலைக்காட்சியில் கூப்பிடுவார்கள்"

"சுழற்கோப்பைப் பேச்சாளி"

என்று இப்படிப் பலவிதமாக என்னைச் சித்திரிப்பார்கள்.

அவர்கள் என்னைப் பற்றி ஒரே ஒரு சொல்லால் முடிவு செய்வார்கள்.

"இவள் ஒரு வாயாடி" என்பது அவர்கள் என்னைப் பற்றிக் கொண்ட முடிவு.

"அந்த வாயாடிப் பெண்" என்றே என்னைச் சுட்டி வந்தார்கள். அது அப்பொழுது தெரியாது.

இப்பொழுது ஒரு முறை அந்தக் கவிதைப் பயித்தியம் வீட்டிற்குச் சென்றபோது அவர் சொன்னார்.

"உன்னைப் பற்றி என் மனைவி அப்படி நினைக்கிறாள்" என்று.

இதைப் பாராட்டு என்று எடுத்துக் கொள்வதா, நகை மொழி என்று எடுத்துக் கொள்வதா என்று தெரியவில்லை.

நான் எப்பொழுதும் கலகலப்பாகப் பேசுவேன். பேசாமல் எப்படி இருக்க முடியும். பேசினால் தானே மற்றவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது.

கவிதைப் பயித்தியம். அவர் மனைவி ஒரு நகைப் பயித்தியமாகவே இருந்தாள். தன் தாய் வீட்டில் செய்து போட்ட நகைகளைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுவாள். அவள் ஏணிப்படிகள் சவரன்களை அடுக்கிப் பார்ப்பதில் இருந்தது. கலியாணம் செய்துகொள்கிற ஒவ்வொரு பெண்ணும் தாய் வீட்டுப் பெருமையைச் சொல்வதில் சளைப்பது இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அவர் எங்காவது கவியரங்குகளுக்குச் சென்று விடுவார். அதற்கு அவருக்குப் பணம் கிடைக்கிறது என்று தெரிந்து கொள்ள முடிந்தது. சிலருக்கு இதுவே பிழைப்பாகவும் ஆகிவிடுகிறது. கூட்டங்களுக்குச் சென்று பேசுவது ஒரு தொழிலாகவே ஆகிவிட்டது. அதில் இவரும் விதிவிலக்கல்ல. அந்த அம்மாவோடு பேசுவதற்கு விஷயம் கிடைப்பது இல்லை.

அவர்களுக்காகவே நான் பெட்டியில் வைத்திருந்த நகைகளை மாட்டிக் கொண்டு போவேன். அப்பொழுது தானே பேசுவதற்கு விஷயம் கிடைக்கும்! என்னோடு

வருமே அந்தப் பாட்டுப் பயித்தியம் ஒன்றும் அதிகம் டிரஸ் பண்ணுவது இல்லே, ரொம்ப சிம்பிள். அது முதல்லே கூட வர அச்சப்படும். அதன் அச்சம் நியாயமானது என்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன். அந்த அம்மையார் இன்னும் அம்மையார் ஆகவில்லே. ஆசிரியர், மனேவி அதனுல் அப்படிக் குறிப்பிட்டேன். அவர்கள் என்னேத்தான் கவனித்தார்கள். அவளே அதிகமாக வரவேற்றுப் பேசவில்லே.

எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்தக் காலத்திலே ரொம்ப படிக்காதவர்களும் பேராசிரியர்களின் மனேவியின் இடத்தைப் பிடித்து இருக்கிருர்கள் என்பதை. அந்தக் கவிதைப் பயித்தியம் தனக்கு அடங்கி இருக்க வேண்டு மானுல் அவள் அதிகம் படிக்காமல் இருக்க வேண்டும் என்று நினேத்து வந்தார். பல பேர் படித்த மனேவியை விரும்புவதில்லே. படிப்பு எதற்கு என்று கேட்கிருர்கள்.

ஒரு சில பேராசிரியர்கள் பார்த்து இருக்கிறேன். மனேவியும் பட்டம் வாங்கி விடுகிருர்கள், இருவரும் சேர்ந்து கூட்டங்களுக்கு வந்து விடுகிருர்கள். ஒருவர் தலேமை; மற்றொருவர் பேச்சாளர். இரண்டு பேரும் சேர்ந்து நூல்கள் வெளியிடுகிருர்கள். படைப்புக்கு இருவர் தேவைப் படலாம். இலக்கியத்துக்கு இருவர் தேவை இல்லே என்று நினேக்கிறேன். ஆராய்ச்சிப் பட்டம் வாங்கி யதும் ஒரு சிலருக்குத் தலேகால் தெரிவதில்லே; அவர்கள் தம்மைப் பிரமாதப் படுத்திக் கொள்கிருர்கள். நான்கூட அவர்களே வியந்தது உண்டு; பிறகு தான் தெரிந்தது அவர்கள் வெறும் போலிகள் என்பது.

இவை எல்லாம் நான் படித்த காலத்தில் கண்டு, கேட்டு, உற்று, அறிந்து கொண்ட அனுபவங்களாக இருந்தன.

# 7

என் தங்கை என்னைவிட உயரமாக வளர்ந்தாள் அவளைப் பார்த்து நான் பூரித்துப் போவேன்; எனக்கும் மணமாகாமல் இருந்தால் நானும் உயரமாகத் தான் வளர்ந்திருப்பேன். எப்படியோ அகலமாகப் பெருக்க வில்லை. அதுவரை சந்தோஷப்பட வேண்டியதுதான். நான் நினைப்பது தவருக இருக்கலாம்; பொதுவாகக் கலியாண மாகாமல் இருந்தால் உயரமாக வளர்ந்திருக்கலாம் என்று நினைப்பது உண்டு. அப்படி நான் ஒன்றும் படு குள்ளம் அல்ல. என் தங்கையை விடக் கொஞ்சம் குறைவு. ஆனல் சராசரி பெண்களுள் ஒருத்தியாகத் தான் இருந்துவந்தேன். அவள் மட்டும் வெட வெடவென்று உயர்ந்துவிட்டாள்.

அம்மா சொல்லுகிருள். அவள் படிக்கத் தேவை இல்லை. படிப்புச் சில சமயம் குடும்ப வாழ்க்கைக்கு உதவு வதில்லை என்பது அவள் என்னைக் கொண்டு கற்றுக் கொண்ட பாடமாக இருந்தது.

"அவள் படிக்கட்டும்மா"

"ஆமாம் நீ படித்துக் கிழித்தே

அவள் படிக்க வேண்டியது ஒன்றுதான் குறைவு"

என்று அவள் வெறுப்புக் கலந்த குரலில் பொறுப் போடு பேசுவது போலப் பேசுவாள். அவள் பேசுவது ஒரு தனி ரகமாக இருக்கும்.

தங்கை அவள்தான் வீட்டு வேலைகளை எல்லாம் செய்வாள். அது அவளுக்கு வாழ்க்கையில் பிடிப்பைத் தந்தது. அவள் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருந்தாள். ரொம்ப பேர் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிருர்கள். சில பேர் எப்பொழுதும் அழுது கொண்டு இருக்கிருர்கள்.

எங்கள் வீட்டுக்குப் பழைய உறவினர் ஒருவர் வருவார். அவர் ஏதோ பெரிய உத்தியோகமாம். அவர் மெதுவாகப் பேசுவார். அதாவது சொற்கள் வேகமாக வருவது இல்லை. அவ்வளவு பொறுமைசாலியை என் அனுபவத்தில் நான் கண்டதே இல்லை. ஆனால் அவரோடு பேசுவது எனக்குப் பிடிப்பது இல்லை. வேகமாக 'வளரும் இந்த உலகத்தில் மெதுவாக ஆர அமரப் 'பேசுபவர்களைப் பார்த்தாலே பிடிப்பது இல்லை.

சிலருக்குப் பதிலே பேசத் தெரிவது இல்லை. எல்லாம் கேள்விகளாகவே இருக்கும். அவர்களுக்கு எப்பொழுதும் எதிலும் எரிச்சல். அவர்கள் இவருக்கு நேரிடையானவர் என்று நினைக்கிறேன்.

அந்தப் பெரிய மனிதர் என்று சொன்னேனே அவர் மனைவிதான் எனக்கு ஒரு அதிசயமான பிறவியாக இருந்தாள். கிராமத்திலே இருந்து சென்னைக்கு வந்து வாழ்க்கைப் பட்டவள். அவள் அப்படி ஒன்றும் பெரிய இடத்துப்பெண் அல்ல அவருக்கு வாழ்க்கைப்பட. அவரும் சேற்றில் முளைத்த செந்தாமரை என்று தான் தன்னைச் சொல்லிக் கொள்வார். அதாவது கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்ததாகச் சொல்லிக் கொள்வார். அதையும் அவர் ரொம்ப நிதானமாகவே சொல்லுவார், நாங்கள் எல்லாம் அந்தக் காலத்திலே ரொம்பவும் கஷ்டப்பட்டவர்கள். இரண்டு சட்டை, இரண்டு வேட்டி இதுதான் எங்கள் தொடக்கம் என்பார். அதையே மாற்றி மாற்றிப் போட்டுக் கட்டிக் கொள்வாராம். அதை ஒரு பெருமையாகச் சொல்லிக் கொள்வார்.

அந்த வறுமைக் காலத்திலேதான் அந்தப் பெருமைக்கு உரிய அவர் மனைவி அவர் வாழ்க்கைத் துணையானாள். அன்று அவள் எந்த ஓலக்குரலை எழுப்பினாளோ அதே ஓலக்குரலைத்தான் இன்றும் எழுப்புகிறாள். அவள் குரலில் அழுகையைத் தவிர நான் வேறு எதையும் கண்டதில்லை.

"தேவரே நீ எப்பொழுது வருவாய்?
நான் பாவம் செய்தேன்;
தேவரே நீ எப்பொழுது வருவாய்?
நான் பாவம் செய்தேன்: ஆனால்
எப்பொழுது செய்தேன்? தெரியவில்லை."

என்ற கவிதையை எங்கோ கேட்டு இருக்கிறேன். அந்த ஓலக்குரலைத்தான் அவர்கள் பேச்சில் கேட்பேன்.

"என்னங்க செய்வது?" என்று அடிக்கடி அவர்கள் பேசக் கேட்டிருக்கிறேன்.

"நாம் எல்லாம் பழம் வாங்கிச் சாப்பிட கட்டுப்படியாகுமா என்று பேசும் பெரிய மனிதர்களின் குரலைப் போல் அது இருக்கும். இப்படி ஒருவர் பேசக் கேட்டிருக்கிறேன். அவரோடு நானும் என் உறவினர் ஒருவரும் காரில் போய்க் கொண்டிருந்தோம். அவர் மிகப் பெரிய பணக்காரர். மற்றவர்கள் தம்மைக் கண்டு பொறாமைப் படக் கூடாது என்பதற்காக அவர் இந்த மாதிரி சொன்னார். எவ்வளவு முரண்பாடு; எவ்வளவு கயமை இது என்று எண்ணிப் பார்த்தேன். அவர் வீட்டுக்குச் சென்றபோது பழங்களை நிறைய சாப்பிட்டுத் துப்பிக் கிடந்தது. அவர் அறையில் ஒரே குப்பை. இப்படியும் பேசுவது அவருக்கு நாகரிகமாக அவருக்குப் பட்டது. அவர் இப்பொழுது இங்கு இல்லை. வெளியூருக்கு மாற்றலாகிச் சென்று விட்டார். என்னமோ திடீர் என்று அந்தத் தம்பதிகள் எனக்கு நினைவுக்கு வந்தனர்.

அதாவது பதில் பேசுவதில் மூன்று ரகம் இருக்கின்றன என்று சொல்ல வந்தேன். ஒன்று என் உறவினர் அவரைப் போல; மற்றொன்று கேள்வி கேட்டே பதில் சொல்வது மூன்றாவது அழுகையைத் தவிர வேறு தெரியாத

ஜன்மங்கள். இதில் என் அம்மாவின் பதிலே பிடித்து இருந்தது. விரக்தியில் வேகமாகத்தான் பேசுவார்கள்.

அதாவது நான் படித்துக் கணவனோடு வெற்றிகரமாக வாழ்க்கை நடத்தவில்லை என்பது அம்மா சாற்றும் குற்றச் சாட்டு. நான் எப்படி அதற்குப் பொறுப்பு? அவர் திடீர் என்று முறித்துக் கொண்டு போனால் நான் என்ன செய்ய முடியும்? மாடா என்ன கயிறு மாட்டி இழுத்துக் கொண்டு வந்து பிடிக்க. அப்படி என்ன அவரோடு இனிமையாக வாழவில்லை. வாழ்ந்த நாட்கள் மிக இனிமையாகச் சென்றன.

இந்த 'உடல் பொருள் ஆவி' மூன்றையும் எனக்கே தந்துவிட்டதாகத் தான் சொன்னார். எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது. அதுவும் நான் கிறுக்கிய கிறுக்கல் தான்.

அவள் அவன் ஆருயிர்க் காதலி;
அது எப்படித் தெரிந்தது?
அவன் சொன்னான், "என் உடல் பொருள் ஆவி
மூன்றையும் உனக்கே தருவேன்" என்றான்.
இது அவன் அவளைப் பார்த்துச் சொன்னது;
அதனால் அவள் அவன் ஆருயிர்க் காதலி ஆனாள்;
அவள் அதற்கு என்ன சொன்னாள் தெரியுமா?
உன் உடல் இயங்க உன் உயிர் தேவை;
எனக்கு வேண்டியது வெறும் பொருள்தான்"
என்றாள்.

அந்தக் கவிதைதான் அவள் பேசும்போது எனக்குக் கவனம் வரும். இவர் உடல் உயிர் யாருக்கு வேண்டும். அர்த்தமற்ற சொற்கள்! அன்பு வேண்டும். முக்கியமாக என்னை ரசிக்கத் தெரிந்து கொண்டால் போதும். என் நடை,

இடை, உடைநிதிலே அவன் நெஞ்சு பறிகொடுக்க வேண்டும். நான் செய்யும் சிறு தொழில்களில் அவன் சித்திரம் காணவேண்டும். என் தனிப்பட்ட வாழ்க்கையில் குறை கண்டதுதான் எங்கள் முறிவுக்குக் காரணம்.

நான் மறந்து விட்டேன். எனக்கு ஒரு கவிதை நண்பன் இருந்தான். அவன், "நான் ஒரு கவிஞன் ஆனேன்" என்று கவிதை எழுதி இருந்தான். அதை எனக்கு அனுப்பி வைத்தான். அவன் யார் என்று தெரியாது; ஆனல் அவன் கவிதை மட்டும் எனக்குக் கிடைத்தது.

பேனு நண்பர்களைப் பற்றிக் கேள்விப்பட்டு இருப்பீர் கள். அது போல அவன் கவிதை நண்பன். கவிதைகள் எழுதி எனக்கு அவ்வப்பொழுது அனுப்பி வந்தான். அதில் இது மிக்க துடிப்புடன் கூடிய கவிதையாக இருந்தது.

அவளை அடிக்கடி பார்ப்பேன். ஏன் ?
அவள் அழகாக இருந்தாள்; அது மட்டும் அல்ல,
என் உள்ளத்தைக் கவர்ந்தாள் எப்படி?
நல்ல உயரம் ஒல்லியான உடம்பு
விழுவது போல இருப்பாள் விழமாட்டாள்
சிரிப்பது போல இருப்பாள் சிரிக்கமாட்டாள்
தினம் ஒரு ஸ்டைல் தினம் ஒரு கொண்டை
அவள் நெற்றியில் விழும் சில சுருள்
அதுவே ஒரு தனி அழகு.
பொட்டுகள் மாற்றுவாள்; ஒருநாள் நீலம்;
ஒரு நாள் சிவப்பு; ஒரு நாள் பச்சை.
இன்னெரு காரணம் அதுவும் சொல்கிறேன்.
அவள் சேலை நெகிழும்; இடுப்புத் தெரியும்:
அங்கேயும் ஒரு பொட்டு; அதுதான் கொப்பூழ்.
இது ஒரு பியூட்டி. அது கூட அவள்தான் காட்டி
என்னை மயக்கினள்; அதனல் கவிஞன் ஆனேன்.

இந்தப் பாட்டையும் நான் என் டைரியோடு ஒட்டி வதைிருந்தேன்.த் அவன் .நிச்சயமாக என்னைப் பார்த்து

எழுதி இருக்க முடியாது. அப்படி நான் அவனைக் கவர்ந்திருந்தால் அதற்காக நான் பெருமைப்பட வேண்டியது தான்.

எனக்கு உண்மையிலேயே அந்தப் பெண் எப்படி இருப்பாள் என்று பார்க்கத் தோன்றும். அவள் நிச்சயமாக எங்காவது உலவிக் கொண்டுதான் இருப்பாள். அது அந்தக் கவிஞன் எழுத்தில் வெளிப்பட்டது.

இந்தப் பாட்டு எல்லாம் நான் எடுத்து வைத்திருக்கக் கூடாது. இலக்கியத் தரம் வாய்ந்தது அல்ல என்று தெரிந்திருந்தும் ஏன் அதை வைத்திருக்க வேண்டும். பெண்கள் அதை ரசிக்கமாட்டார்கள். ஆண்கள்தாம் ரசிப்பார்கள். என் கல்லூரி அனுபவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆசை. அதற்காகத்தான் அதையும் எடுத்து வைத்திருக்கிறேன்.

மற்றொரு கவிதை எனக்கு வந்தது. 'துடிப்பு' என்ற தலைப்பு இடப்பட்டு இருந்தது.

"உன்னைக் காணத் துடித்தேன்;
ஆனால் சந்திக்க விரும்பவில்லை.
உனக்காக ஓராயிரம் கவிகள்
எழுதுவேன்; ஆனால் வெளியிட விரும்பவில்லை."

இந்தக் கடிதங்கள் எல்லாம் என் வாழ்க்கையைக் கெடுக்கும் என்று நான் நினைத்துப் பார்த்ததே இல்லை.

அந்தக் கவிதைப் பயித்தியம் ஆசிரியரோடு பழகி நானும் கவிதைப் பயித்தியம் ஆகிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

அப்பொழுது ஒரு கவிதைப் போட்டி வைத்திருந்தார்கள். அதில் பரிசு பெற்ற கவிதையை இன்றும் நினைக்

கிறேன். அதற்குப் பிறகு நான் கவிதை எழுதுவதை விட்டுவிட்டேன், 'கதைக்கும் கவிதைக்கும் என்ன வித்தியாசம். கதைக்குக் கால்கை உண்டு. கவிதைக்கு இவை இல்லை. ஆனால் விதை உண்டு.'

இது எனக்கு மிகவும் பிடித்து இருந்தது. இப்படிப் பல. கவிதைகள் கேட்டேன்; படித்தேன்; படைத்தேன். அந்த நாட்கள் இனிமையாகவே கழிந்தன.

அந்த ஆசிரியர் நாவல் மட்டும் எழுதவேண்டாம் என்று கூறினார். அதை நான் கேட்கவில்லை. அங்கேயும் ஒரு தவறு செய்துவிட்டேன்.

நான் எழுதும்போது பரிசு பெறும் என்று நினைப்பேன். ஆனால் எழுதி முடித்த பிறகு அந்த இழிநிலைக்கு என் எழுத்துப் போகக் கூடாது என்று முடிவுக்கு வருவேன். ஏன் ஒருவர் பரிசு பெற்றுவிட்டால் விடாமல் அவரையே பாராட்டிக் கொண்டு இருப்பார்கள். விளம்பரம் கலையை மறைத்து விடுகிறது. உண்மைக்கு விளம்பரம் தேவை இல்லை; தானாக அது பரவிவிடும் என்ற நம்பிக்கை எனக்கு எப்பொழுதும் உண்டு.

நான் கலையை நம்பி வாழ விரும்பவில்லை. கதை எழுதுவது எனக்குச் சித்திரம் வரைவதைப் போன்ற ஒரு பழக்கம். வாழ்க்கையின் ரசனைதான் கவிதை, கதை என்று நினைப்பது உண்டு.

ஏன், என் மணவாழ்வையே ஏன் ஒரு சித்திரமாக எழுதக் கூடாது. இப்படி ஒரு தூண்டுதல் எழுந்தது. அதில் சில வரிகள் இவை,

"அவர் என்னைப் பார்க்க வந்தார்;எனக்கு ஒரே பயம். அவர் என்னை மணக்கமாட்டார் என்பதற்காக அல்ல. மணந்து கொண்டால் நான் கவிதை வானில் வண்ணச் சிறகு அடித்துப் பறக்க முடியாது. அவர் என்னைக் கையில் ஏந்திச் சின்னக் கதை சொல்வார். சிங்கார வாழ்வு தரு வேன் என்பார். பிறகு நான் கவிதை பாடமாட்டேன்;"

இந்தக் கற்பனையில் ஆழ்ந்துகிடந்தேன். இது அந்தக் கவிதையில் சில வரிகள்.

நான் எப்படியோ இங்கும் அங்கும் தாவுகிறேன். என் வாழ்க்கை என்ன சங்கிலித் தொடரா? இல்லையே, இல்லை தெளிந்த நீர் ஓட்டமா? இல்லை. பின் என்ன? அதுதான் இது 'சிதறல்'. ஏன் அதைச் சிதைவு என்றே கூறலாம்.

அந்தக் கதையில் என் அனுபவத்தை எழுதி இருந்தேன். அந்த முதலிரவை மிக அழகாக எழுதி இருந்தேன்.

"தென்றல் வீசியது; நீல வானம் நட்சத்திரங்களைக் கொண்டு மீன்களை மின்ன வைத்தது. நிலா அழகாக இருந்தது. அது நெடு நிலா முற்றம் அல்ல; எங்கள் வீட்டுத் தனி அறை. சுவர்கள் எங்கள் மானத்தைக் காத்தது; அவர் ஒரு அரை மனிதராக இருந்தார். அவரை நான் முழு மனிதராக ஆக்கினேன். எங்கள் போர்வை எங்களை மறைத்தது. எங்களுக்கும் பஞ்சு மெத்தை போட்டு இருந்தார்கள். அது எங்களுக்குச் சுகம் தரவில்லை. ஏன் நாங்களே சுகத்தைப் பறிமாறிக் கொண்டோம். அவர் என்னிடத்தில்தான் சுகம் இருப்பதாகச் சொன்னார். அவரைத் தவிர வேறு இடத்தில் சுகம் இருப்பதை நான நினைத்துப் பார்க்கவில்லை."

இப்படி என் வருணனை அந்த நாவலில் இடம் பெற்றது.

ஒன்றே ஒன்று. அந்தக் கதாநாயகி கொஞ்சம் கர்வம் பிடித்தவளாகத் தீட்டப்பட்டாள்.

"சந்திர மண்டலத்துக்குப் போகலாமா" என்று அவள் கேட்டாள்.

"வேண்டாம் தேன் நிலவு இங்கே இருக்கும் பொழுது ஏன் வேறு நிலவு" என்றான் அவன்.

எத்தனையோ இரவுகள் அவர்களுக்குப் பகலாகக் கழிந்தது என்று அந்த நாவலை முடித்தேன். அதை அச்சிடவில்லை. ஏன் அதற்குப் பிறகு நான் தொடரவில்லை. 'நான் முதல் இரவு கதாநாயகியைப் படைத்தேன். அவ்வளவு தான். அதற்குப் பிறகு அவளைக் கொண்டுபோக நினைக்கவில்லை. போகமுடியவில்லை. என் அனுபவமும் அதோடு நின்று விட்டது. பிறகு தொடரவில்லை.

அதற்குப் பிறகுதான் இந்தக் கதாநாயகன் பிறந்தான். அவன்தான் முதன்முதலில் அறிமுகப் படுத்தினேனே என் 'முதற்குட்டி' ரவி. அவன்தான் என் கடைக்குட்டியும் என்று நினைக்கிறேன். அவன் பிறந்ததும்தான் அவர் என்னை விட்டுப் பிரிந்தார். அதற்குக் காரணம் என்ன?

அதுதான் என் கல்லூரி அனுபவங்கள். இவை எல்லாம் என் நினைவுகளோடு இருக்கவேண்டியவை. அவற்றை எல்லாம் என் நாட்குறிப்பில் எழுதி வைத்திருந்தேன். என்னைப்பற்றி எழுதிய கடிதங்கள், பாராட்டுகள், கவிதைகள், கதைகள் இவற்றை எல்லாம் சேர்த்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன்.

யாருக்காக இவற்றை எடுத்து வைத்தேன் என்று எனக்கே தெரியாது.

என்னுடைய வாழ்க்கையையே ஓர் இலக்கியமாக ரசித்தேன். அந்த ரசனைதான் அந்த நாட்குறிப்பும், கடிதப் பாராட்டுகளும். அதற்கு முன்னால் தெளிவாக எழுதியிருந்தேன்.

> "ஒவ்வொருவருக்கும் சில தனிமைகள் உண்டு;
> அனுபவங்களும் உண்டு. அவை அவர்களுக்கே
> சொந்தம்; தயவு செய்து என் ஏடுகளைப் புரட்டிப்
> பார்க்காதீர்கள்"

என்று எழுதி இருந்தேன்.

கவிதை ஆசிரியர் ஒருமுறை சொல்லி இருந்தார். நாவலோ கவிதையோ எழுதுவதில் ஒரு சிரமம் இருக்கிறது. பிறர் வாழ்வை வைத்து எழுதினாலும் உலகம் நம்பாது; அது சொந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்று தான் நினைக்கும். எழுத்தாளனின் குடும்பமே அதில் இடம் பெறுவதாக நினைப்பார்கள். அவர்களுடைய அந்தரங்க வாழ்க்கை அதில் இடம் பெறுகிறதா என்று கவனிப்பார்கள்.

அப்படி நினைத்துக் கொள்ளட்டுமே என்று துணிகிறவர்கள்தான் எழுத முடியும். அது மட்டும் அல்ல அப்படிப்பட்ட அனுபவங்களை எழுதும் பொழுதுதான் அது உணர்வு மிக்க படைப்பாகிறது என்று சொல்லுவார்.

ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் கவிஞனுக்கும் ஒரு 'கவிதைப் பெண்' உள்ளத்தில் உருவாகி விடுகிறாள். அதை வைத்துத்தான் அவன் படைக்கிறான் என்று கூறுவார்.

நானே அவரைக் கேட்டு விட வேண்டும் என்று நினைப்பது உண்டு. அவர் கவிதையில் வரும் 'பாவை' யார் என்று கேட்க வேண்டும் என்ற ஆசை. இப்பொழுது நினைவுக்கு வருகிறது. ஒரு சிறந்த எழுத்தாளன் படைப்பு. 'பாவை விளக்கு' 'சித்திரப் பாவை' அந்தக் கலைஞனும் அந்தப் பாவையை மறக்கவில்லை என்பதை நினைத்துப் பார்க்கிறேன். யாரோ சில பாவைகள் இந்தப் பேனாவுக்கு எழுதும் மையாக அமைந்து விடுகிறார்கள். அவர் நிச்சயமாகத் தன் மனைவியை வைத்து எழுதி இருக்கமாட்டார். அவர் மணமாவதற்கு முன்னாலேயே கவிதைகள் எழுதத் தொடங்கியிருக்கிறார். அவர் ஏதோ வாழ்க்கையில் யாரையோ சந்தித்து இருக்கிறார். பழகி இருக்கிறார். அவள் அவருக்குக் கிடைக்காமல் போயிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

"நான் ஒரு புலன் உணர்வு மிக்க எழுத்தாளன் என்று தன்னைக் கூறிக் கொள்வார். நான் என்ன செய்வது அழகு

என்னைக் கவர்ந்து விடுகிறது. அதில் நான் என்னை இழந்து விடுகிறேன்."

"பலருக்குப் பல போதைகள் இருக்கின்றன. அதிலே இந்த அழகு உணர்ச்சி என்பது ஒரு போதை. அது என்னிடம் மிகுதியாக இருக்கிறது. இந்த வகையில் கலைஞர் களுக்கு உரிமை கொடுத்துத்தான் தீர வேண்டும். இல்லா விட்டால் இராமகிருஷ்ண விஜயத்துக்குக் கட்டுரைகள் எழுதுவதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது" என்பார்.

என் வகுப்பில் ஒரு அழகி இருந்தாள். நிச்சயமாக அவள்தான் அவர் உள்ளத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும். அவர் கண்கள் எப்பொழுதும் அவளை மவுன மாக ரசித்துக் கொண்டிருக்கும். அவளுடைய ஒவ்வொரு அசைவும் அவர் நெஞ்சை அசைத்து இருக்க வேண்டும்.

எனக்கு ஒரு சந்தேகம் அவரிடம் நான் அடிக்கடிப் பழகியது உண்டு. அந்தப் 'பாவை' நானாக இருக்க முடியுமா என்று நினைத்துப் பார்ப்பேன். அதற்காக நான் வருந்தியது இல்லை. அப்படி ஒரு கலைஞனின் பேனாவால் நான் தீட்டப்படுகிறேன் என்றால் அதற்கு நான் ஏன் கவலைப்பட வேண்டும்.

"பெண் மகிழ்விக்கலாம்; ஆனால்
மயக்கக் கூடாது"

என்று கூறுவார்.

இந்த நுட்பத்தைப் பின்னால் தான் என்னால் நினைத்துப் பார்க்க முடிந்தது. நான் பலரை மகிழ்வித்து இருப்பேன் ஆனால் மயக்கியது இல்லை. அவர்கள் மயங்கி இருக்கலாம்; ஆனால் நான் மயங்கியது இல்லை.

அந்த மயக்கங்களைத்தான் எழுத்து வடிவில் வைத்துக் காத்தேன், அதன் முன்னுரையில் எழுதி இருந்தேன்.

"என்னைப் பிரித்துப் பார்க்காதே
இது என் நாட்குறிப்பு
இது எனக்கு மட்டும் தான் சொந்தம்"
மற்றோர் இடத்தில் எழுதியிருந்தேன்.
"நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்.
அந்த அவசியம் ஏற்படாது;
அப்பொழுதுதான் என்னைப் போஸ்ட் மார்ட்டம்
செய்யலாம், டைரியைப் பார்ப்பது
போஸட் மார்ட்டம் செய்வதற்குத்தான்"

என்றும் எழுதி இருந்தேன்.

"நான் உனக்கு எப்படிக் காணப்படுகிறேனோ
அப்படியே பார்; பழகு; அதற்குமேல்
என்னை அறிந்து கொள்ள முயற்சி செய்யாதே"

என்றும் எழுதி வைத்திருந்தேன்.

நான் மருத்துவ மனையில் இருந்த நாட்கள் ரவி என்னுள் இருந்தவன்; நான்தான் உன்னைத் தாயாக்கிய தனையன் என்று வெளிப்படுத்திக் கொண்ட நாட்கள். நான் அமைதியாக இந்த உலகத்திலிருந்து விடுதலை பெற்று இருந்த நாட்கள். கன்றைப் பற்றி நினைத்து அதற்குச் சூடு உண்டாக்கிக் கொண்டிருந்த பசு நான்; என் 'மார்பு' எனக்கு வடிவம் தந்தது. அதைக் கண்டு என் பெண்மையை வியந்தவர் 'அவர்'; அதைக் கொண்டு என் தாய்மையை உணர்த்தியவன் என் ரவி. அவன் வாய் வைத்துச் சுவைக்கும் பொழுது என் தாய்மை பாலாகச் சுரந்து வடிந்தது. அவனை அணைத்துக் கொண்டு என் சேலைத்திரை

யால் அவனை மறைத்து வைப்பேன். அவன் என் மானத்தை அடிக்கடி வாங்கிவிடுவான்.

நானும் 'அவரிடம்' ஒரு புதுவகையான அன்பைக் காட்டினேன். அவர் என் தலைவன் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. அவரும் தகப்பனாகி விட்டதாகப் பெருமை கொண்டார். அவர் தொழிலகத்தில் இனிப்பு வழங்கினார். அவர் தந்தை யாகிவிட்டதைக் கேட்டு அவரைப் பாராட்டினார்கள். நான் என் ரவியின் தாய் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டேன். அவர் பொறுப்பு மிக்க தந்தையாகக் காட்சி அளித்தார்.

"இவர் தாண்டா உங்க அப்பா" என்று சொல்லாமல் அவனிடம் சொல்லி வைப்பேன். அவன் திருட்டு முழியோடு அவரை வெட்கத்தோடு பார்ப்பான். அவரிடம் போக மறுத்தான். அவனுக்கு பயம் நான் அவனைவிட்டு விலகி விடுவேனோ என்று.

ஆஷா சொல்லுவாளே என் கணவனையும் இழக்கத் தயார். எனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று சொல்லு வாளே அது எனக்கு உண்மையாக இல்லை. அவரைத்தான் நான் விரும்பினேன்; இவன் மெல்ல என்னிடம் இடம் கேட்டுப் பிடித்துக் கொண்டான்.

இப்பொழுது அவனே என்னைச் சுற்றிக் கொண்டான் அவர் என்னை விட்டு விலகி விட்டார். 'இவர்தானா அவர்' என்று பல நாட்கள் எண்ணியது உண்டு.

அன்று நடந்த விபத்து இதுதான். என் முதல் டிக்கட்டு நண்பன் என்னைப்பார்க்க வந்தான். அவன் அந்தக் குழந்தையை அன்பாக எடுத்துக்கொண்டான்.

அங்கே வந்த நர்சு சும்மா இருக்கக்கூடாதா?

"இவர்தான் பேபியின் அப்பாவா?" என்று கேட்டு விட்டாள்.

"அந்த பாக்கியத்தை நான் பெறவில்லை" என்று அவசரப்பட்டுச் சொல்லிவிட்டான்,

அதைக் கேட்டுக்கொண்டே என் 'அவர்' அங்கு வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

அவன் மவுனமாகி விட்டான்.

மவுனம் அங்கு நிலவியது.

"நான் அவளோடு படித்தவன்."

என்று அறிமுகம் செய்து கொண்டான்.

"படிப்புத் தொடர் கதையாகக் கூடாது"

என்று அவர் சொல்லவில்லை. அந்த மவுனத்தின் அர்த் தத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன் மணந்தால் என்னை மணப்பது இல்லா விட்டால் வாழ்நாள் எல்லாம் வெறும் திரைப்படங்களைப் பார்த்துப் பொழுது போக்குவது என்ற உறுதி கொண்டிருந் தான். இதை நான் எதிர்பார்க்கவில்லை. இப்படி ஒருவனைப் பைத்தியம் கொள்ளும்படி செய்ய முடியும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

அவன் கவிதைப் பைத்தியம் போல இருந்தான். 'ஓராயிரம் கவிதைகள் எழுதி இருப்பான். ஆனால் அவன் இதுவரை வெளியிட வில்லை. சில சமயம் கலைப் படைப்பு கள் மனித உணர்ச்சிகளுக்கு வெளியீடாக அமைகின்றன

அவன் வெறும் திரைச் சீலைகளைக் கண்டவன்; வேறு எந்தப் பெண்ணின் சேலையையும் காணாதவன்; எட்டி

இருந்து வியந்து இருக்கிறன். கட்டி அணைத்து மகிழ்ந்தவன் அல்ல; என்னை அவன் தன் இதயத்தில் வைத்து பூஜை செய்தான். அது எனக்குத் தெரியாது. இப்பொழுது அவன் இதயம் பூஜ்யமாக இருக்கிறது.

அம்பு எய்து வம்பு செய்தவன் இதுவரை யார் என்று கண்டது இல்லை; வாழ்த்துச் செய்தியைக் கவிதை வடிவில் தந்தவன் வாழும் இடம் எது என்பதும் தெரியாது.

நாங்கள் பிரிந்தபோது சுயசரித்திர ஏடு ஒன்று வெளியிட்டிருந்தோம். அழகான அச்சில் எங்கள் பெயர்கள் பொறிக்கப் பட்டு இருந்தன. எங்கள் ஆசிரியர்களை அதில் முகவரியோடு அறிமுகப் படுத்தினோம். அந்தப் பெயர்களைச் சில சமயம் புரட்டிப் பார்ப்பேன்.

அவர்களுள் ஒருத்தியை நான் மறக்கவே முடியாது. சாத்தனூர் அணைக்கட்டுக்குச் சென்ற போது சாதம் கட்டி வந்தவர்கள் சில பேர். அவளே வீட்டில் சமைத்து வந்த புளிச்சோறு, அதற்குத் துணையாக உதவிய கறிவகைகள், தின்று மாளாத கட்டுச் சோறு இவை மறக்க முடியாதவை. எங்கள் ஆசிரியர்களும் சிலர் வந்திருந்தார்கள். அங்கே ஒரு காட்சி எங்களை இழுத்தது. அவன் அங்கே செத்துக் கிடந்தான். அவனைச் சுற்றிப் போலீசார் அவன் உடலைக் காவல் செய்தனர். அந்தக் காட்சி என்னுள் ஒரு கவிதையை எழுப்பியது. வீடு திரும்பியதும் அதை முதல் வேலையாக எழுதி வைத்தேன்.

அவன் எழுத்து—இது அதன் தலைப்பு.
"நண்பர் சிலருடன் அணைக்கட்டு சென்றேன்
நடந்து சென்றேன் கால்செருப்பு அறுந்து விட்டது.
அதனல் என்ன? நடக்கமுடியாதா என்ன?
எங்கும் தண்ணீர்! எங்கும் பசுமை!

மனம் குளிர்ந்தது; மகிழ்ச்சி நிறைந்தது.
ஏதேதோ பேசினோம்; வாழ்க்கைப் பிரச்சனை;
பரிட்சைப் பிரச்சனை; திரைப்பட விமரிசனம்;
இன்னும் எத்தனையோ செய்திகள் பேசிமுடித்தோம்.
கீழே வந்தோம்; அங்கே ஒரு பிணம்.
அந்தத் தண்ணீரில் அடித்து வந்ததாம்.
அவன் யார்? ஏன் செத்தான்? எப்படித் தெரியும்?
அதைப் பற்றிப் போலீசார் புலன் விசாரித்தனர்.
அவன் டையரி குறிப்பு சில்லரைக் காசுகள்
அழகிய பெண்ணின் வண்ணப் படம்
இவை அவன் விட்டுச் சென்றவை.
அவன் செத்தான் அதனால் சிரிக்க முடியவில்லை.
அவள் சாகவில்லை சிரித்துக் கொண்டே இருந்தாள்.
ஏன் செத்தான்? நிதானித்துப் பார்த்தேன்.
அந்தச் சிரிப்புக்குத்தான் அவன் செத்து மடிந்தான்.
யார் சொன்னது? எப்படித் தெரியும்?
அதையும் அவனே எழுதி வைத்தான்."

அந்தக் கவிதை தான் இவனைப் பற்றி நினைக்கும் பொழுது நினைவுக்கு வருகிறது. இவன் செத்து மடிய வில்லை. வாழ்ந்து செத்துக் கொண்டிருந்தான்.

இவனுக்கு இந்த நடைமுறை உலகில் ஒரே வெறுப்பு அதை மறக்க அந்தப் படங்களில் தன் முக்கியமான நேரத்தைக் கழித்தான், ஏன் திரைப் படங்களுக்கு இவ்வளவு கூட்டம்? இங்கே வாழ்வதற்கு, நினைப்பதற்கு. சிந்திப்பதற்கு, ரசிப்பதற்கு, பேசுவதற்கு விஷயங்கள் கிடைப்பது இல்லை. அவ்வளவு தூரம் நம் குடும்பச் சூழ்நிலைகள் அமைந்து விட்டன.

நானும் படித்த நாட்களில் படம் பார்த்தது குறைவு; என் கணவனோடு வாழ்ந்த நாட்களிலும் குறைவாகவே படம் பார்த்தேன். ஆனால் இந்த முறிவு ஏற்பட்ட பிறகு படத்தைத் தவிர வேறு எதுவும் பார்ப்பதில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

என் அம்மாவுக்கும் எனக்கும் எப்பொழுதும் ஒரே சண்டை; நான் எப்படியாவது, அவருக்கு அடிபணிந்து மன்னிப்புக் கேட்டு வாழ வேண்டும் என்பது.

வாழாத பெண்கள் வாழ்க்கையில் தாழ்ந்து போவதை அவள் அனுபவத்தில் கண்டு இருக்கிறாள். தனிமையை அனுபவிக்கும் பெண்கள் இனிமையை இழக்கிறார்கள். வாய்ப்பு நேரும் பொழுது தற்காப்பை இழந்து விடுவார்கள் என்பது அவள் நினைவு.

என்னைத் தேடிக்கொண்டு பிறகுகூட கல்லூரிகளிலிருந்து வருவார்கள். என் அம்மாவுக்கு அவர்களைப் பார்த்தால் பிடிக்காது. மழைவிட்டும் தூவானம் விடவில்லையே என்று வருந்துவாள்.

"அம்மா! அவர்கள் கவிதையை
விரும்புகிறார்கள்" என்பேன்.
"உன்னை விரும்பவில்லை என்று சொல்ல
முடியுமா" என்ற வழக்கம்போல

வழக்கமான சொற்களைக் கொண்டு பேசுவாள்;

"என்னை விரும்புகிறார்கள் என் கவிதைக்காக" என்று விளக்குவேன்.

" அவர்களுக்கு எழுதிக்கொடு; அவர்கள் விரும்பினால் படித்துக் கொள்ளட்டும்."

"நான் தலைமை ஏற்க அழைக்கிறார்கள்" என்பேன். மாணவியாக இருந்தபோது பங்கு ஏற்றேன். எனக்கு இப்பொழுது தலைமைப் பதவி வந்து சேர்ந்துவிட்டது.

கவியரங்கத்துக்கு ஒரு கவிமணி வேண்டும் என்பது அவர்கள் ஆசை. அதற்காகத்தான் அவர்கள் என்னை அழைத்தார்கள் என்பேன். அதை அம்மா ஏற்க மறுத்தாள்.

நீ 'பெண்மணி' அதனால்தான் உன்னை விரும்புகிறார் கள் என்பாள். உன்னைக் காக்க வேண்டுவது எங்கள் கடமை ஆகிறது. "நீ கணவன் வீட்டுக்குச் செல்; பிறகு கவியரங்கு ஏறு" என்று கட்டளையிடுவாள்.

எனக்கு வீடு நரகமாகப்பட்டது. நல்ல காலம். வீடு களுக்கு நான்கு சுவர்கள் இருக்கின்றன. எல்லாமே சுவ ராக இருந்தால் எப்படி வெளிவர முடியும். வாசல், சன்னல் கள் இருப்பதால் காற்றோட்டமும் வெளிச்சமும் வரத்தான் செய்கின்றன.

என் சினிமா நண்பன் எனக்காகத் தவம் கிடந்தான். அவன் தாடிவேறு வளர்த்துவிட்டான். அவன் தாடி சில சாதாரண மனிதர்களை நினைவு ஊட்டியது. நான் சந்தித்த மனிதர்களுள் ஒருவர் தாடி வளர்த்து இருந்தார். பின்னர் எடுத்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அதை நினைத்து ஒரு கவிதையை எழுதியிருக்கிறேன். கவிதையில் நகைச் சுவையைப் புகுத்தி ரசித்து இருக்கிறேன். அதை என் கவி தைப் பயித்தியம் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தேன். அதைப் படித்துவிட்டு அவரும் புது மணப் பெண்ணாக வந்த அவள் வீட்டுப் 'பார்ட்னரும்' (அப்படித்தான் அவளை வருணிப்பது எனக்கு வழக்கமாகிவிட்டது) விழுந்து விழுந்து சிரித்தார்களாம். அந்தச் சிரிப்பையே

அவர் ஒரு கவிதையாக எழுதி எனக்கு அனுப்பி வைத்தார்.

"சிரித்துச் சிரித்து வயிறு புண் ஆயிற்று;
நினைத்து நினைத்து நெஞ்சு புண் ஆயிற்று;
மகிழ்ச்சியால் வயிறு புண் ஆகிறது;
வேதனையால் நெஞ்சு புண் ஆகிறது
இவை வைத்தியருக்குத் தெரியுமா?"

என்று கேட்டு எழுதி இருந்தார். அதற்குத் 'தெரியாது' என்பது சரியான தலைப்பாக நினைத்தேன். அவரும் அதை ஒப்புக்கொண்டார். அந்தத் தாடிக்காரப் பெரியவரைப்பற்றி எழுதிய கவிதை இதுதான்.

மாமியார் மெச்சினாள்—இது அதன் தலைப்பு.
காலையில் எழுகிறேன் பேப்பர் படிக்கிறேன்;
இன்னும் ஏதேதோ பரபரப்பாக இயங்குகிறேன்;
ஒன்று மட்டும் முடிவது இல்லை;
தினம் தினம் ஷேவ் பண்ணுவது;
என்ன செய்யலாம் யோசனை செய்தேன்.
தாடியை வளர்த்தேன்; அதைத் தடவிக் கொடுத்தேன்;
மெத்த வளர்ந்தது; ஆளே மாறினேன்.
மாமியார் வந்தாள்; யார் இந்தச்
சாமியார் என்று கேட்டாள்.
'அம்மா அவர்தான்' என்றாள்
அவள் என் மனைவி.
"அவரா இவர் அடியோடு மாறிவிட்டாரே"
"இவர் அடியோடு மாறவில்லை.
முடி மட்டும்தான் மாறினார்" என்றாள்.
சின்னாள் சென்றன; முடியும் சேர்ந்தன.
காய்த்துப் பின்னிக் காய்கள் தொங்கின.
அப்புறம்தான் புத்தி வந்தது;
அறுவடை செய்தேன்; அழகான முகம்.
நான்தானா அது எனக்கே தெரியவில்லை;
மறுபடியும் சொன்னாள் வேறு யாரும் இல்லை;

அவளேதான்; அதுதான் என் மாமி.
"ஆளே மாறிவிட்டாரே மாப்பிள்ளை இவர்தான்"
என்றாள்

அவன் தாடியைப் பார்க்கும்பொழுது எல்லாம் அந்தப் பெரியவர் நினைவுக்கு வருகிறார். என் கவிதை நினைவுக்கு வருகிறது. நிச்சயமாக என் கவிதையை இவனும் படிக்க வேண்டும் என்று நினைப்பேன். அவன் என்னையே விரும்புகிறான் என்பது அவனை வெறுக்கச் செய்தது.

நான் மணமாகாத நிலையில் என்னை வழிபட்டான். நானும் அவன் விழிபட்டேன். அவன் அப்பொழுது ஒரு சொல் கேட்டிருந்தால் மறு சொல் பேசி இருக்க மாட்டேன்.

எனக்கு ரொம்ப நாளாகக் காதலித்துக் கலியாணம் செய்திருக்க வேண்டும் என்ற குறை இருந்தது. அந்தக் குறை தீர்ந்திருக்கும். கலியாணம் ஆன பிறகு அதுவும் நான் ஒரு குழந்தைக்குத்தாய் என்று பட்டம் சூட்டிக் கொண்ட பிறகும் அவன் என்னைச்சுற்றி வட்டம் இடுகிறான் என்றால் அவனிடமிருந்து விடுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

அவனுக்கும் என்னைவிட என் மகன்மேல் ஆசை மிகுந்துவிட்டது. அவனும் அவன் மீது உயிர் விடுகிறான். அப்பா கிடைக்காத வாழ்வில் அவனை அவன் தப்பாகக் கொண்டுவிட்டான் அப்பாவாக.

அவனுக்கு அவன் தாடி ஒரு விளையாட்டுப்பொருளாகிவிட்டது. விளையாடுவதற்கு அவனுக்குப் பிரியமான பொருள் தாடிதான். அதை இழுப்பான். அவன் நோய் பொறுக்காமல் வளைந்து கொடுப்பான்.

"மெல்லிய கூந்தலைத் தடவ வேண்டி
அவன் கரங்கள் நீளமான
தாடியை இழுத்துப் பிடித்தான்"

என்ற கவிதையை என் நாளேட்டில் எழுதி வைத்தேன்.

இந்தப் புது உறவு எங்கள் வீட்டில் புகுந்தது. எனக்கும் பொழுது போவது அரிதாகிவிட்டது. என் தங்கையைப்போல எனக்கு வீட்டு வேலைகளில் மனம் செல்வதில்லை. அப்படிச் சென்றால் என் கற்பனைக்கு வேலை இல்லாமல் போய்விட்டு இருக்கும். நான் எதிர்காலத்தைப் பற்றிச் சில சிந்திப்பேன், அதை நினைத்தால்தான் எனக்கு ஒரே வேதனையாக இருக்கும்.

பெண்ணுரிமை பற்றிப் பேசிய நான் என்னுரிமையைக் காக்கமுடியாமல் போய்விட்டது. பள்ளி நாட்களில் துள்ளி விளையாடினேன்; மேற்படிப்பில் என் மேல் மாசுகள் படிந்தன, சின்னச் சின்ன அனுபவங்களை அழகு படுத்தி அவற்றிற்குச் சாகாவரம் தந்தேன். அவைதாம் என் கவிதைகள். பிறர் எழுதிய கவிதைகள்.

மேடைப் பேச்சுப் பேசிய நான் சாதாரண வீட்டுப் பெண்ணாக அடங்கிக் கிடக்க வேண்டும் என்று என் தாய் எதிர்பார்க்கிறாள். 'வீட்டு வாழ்க்கை' இன்னது என்பதைக் கண்டுவிட்ட நான் நாட்டு வாழ்க்கையில் ஆர்வம் காட்டினேன். பாட்டுப் பறவையாக வாழ்ந்த நான் கூட்டுக் கிளியாக எப்படி அடங்கி வாழமுடியும்?

நிச்சயம் எனக்கு ஒரு வேலை தேவைப்பட்டது. பாட்டி எழுதி வைத்த சொத்து எனக்கு முதல் தேவையைப் பூர்த்தி செய்தது. வறுமையின் பிடியில் என் பெருமை அழியத் தேவை இல்லை. ஆனால் அதுவே என் வெளியுலக முயற்சியைக் குறைத்தது.

என்னுடன் படித்த பெண் ஒருத்தி அவளுக்குக் கிடைத்த உரிமை எனக்குக் கிடைக்கவில்லை. மாதம் முன்னூறுதான் ஈட்டினாள். அவள் ஒரு ஸ்டெனோ. அதாவது

ஆபிசர் டிக்டேட் பண்ணுவதை நோட் எடுத்து டைப் செய்வது. அவள் ஆடவர்களோடு பழகினாள்.

அவள் அவ்வப்பொழுது புதிய அனுபவங்களைச் சொல்வாள். கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

ஒரு ஆபீசர் அவரைத் திரைப்படத்துக்கு அழைத்தாராம்.

அவள், "அதற்குச் சம்பளம் தரவில்லை. எழுதுவதற்குத் தான் சம்பளம்" என்று பதில் சொன்னாளாம்.

பிறகு அந்த வேலையை விட்டு விட்டாளாம். அவளுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அவள் கெடுவதற்குத் துணியவில்லை. அதை ஒரு பாவமாகக் கருதுகிறாள்.

"அவர்கள் விரும்புவதால் நாம் விரும்ப
வேண்டும் என்பது இல்லை.
நாம் விரும்பும் காலம் வரும்; அப்
பொழுது பார்த்துக் கொள்ளலாம்"

என்று சொல்லுவாள்.

அவள் விருப்பம் நிறைவேறவில்லை. இன்னும் அவள் கன்னிப் பெண்ணாகவே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். அவளிடம் அந்தப் பழைய அழகு இப்பொழுது இல்லை. கவர்ச்சி அவளை விட்டு நீங்கி விட்டது.

"அம்மா! அந்தப் பெண் நீலாவுக்குக்
கிடைக்கும் உரிமை"

"அவள் மணமாகாதவள்"

அப்பொழுதுதான் தெரிந்தது; மணமாகாத கன்னிப் பெண்ணுக்கு இருக்கும் உரிமை கூட எனக்கு இல்லை

என்பதை. என்னைக் கணவனைப்போல அவர்கள் காத்து வந்தனர்.

இந்த சினிமா நண்பன் ஒரு வாழ்க்கைப் பிரச்சனையாக வந்து அமைவான் என்று எதிர்பார்க்கவில்லை. அவனைப் 'போ' என்றும் சொல்ல முடியவில்லை. 'வா' என்றும் வரவேற்க முடியவில்லை.

அவன் என்னைப் பார்க்கத் துடித்தான்; வந்தால் ஒன்றும் பேச மாட்டான். சும்மா நான் பேசுவதைக் கேட்பான். அவ்வளவுதான். அவன் பசி ஆறிவிடும்.

"என்னடி! அவனுக்கு உன்னோடு பேச்சு?" என்று அம்மா அடிக்கடி கண்டித்து வந்தாள்.

"அவனோடு படங்களைப் பற்றி விமரிசிப்பேன்" என்றேன்.

"இந்த விட்டில் உன்னோடு பேசினால், நீ அவரைப் பற்றித்தான் பேசுவாய்; வேறு என்ன பேசத்தெரியும்" என்று கேட்பேன்.

"திரும்பத் திரும்ப சுட்ட இட்டிலியைத் தான் சுட முடியும். வேறு என்ன இந்த வீட்டில் படைக்க முடியும்" என்று கேட்பேன். இந்தத் 'தாடி' எங்கள் வீட்டில் ஒரு புதுப் பிரச்சனையாக அமைந்து விட்டான்.

என் காதலன் அவன் என்பது உறுதிப்பட்டு விட்டது. சுற்றுப்புறம் அவ்வாறு பேசிப்பேசி அவனை எனக்குக் காதலன் என்ற பட்டத்தைச்சூட்டி விட்டார்கள். நான் அதிலிருந்து தப்ப முடியாமல் போய்விட்டது.

# 10

என் வாழ்க்கையில் ஒரு அத்தியாயம் புதிதாகப் பிறந்தது. அதாவது சுற்றுப்புறம் நம்பத்தொடங்கியது. நான் உண்மையில் காதலிக்கிறேன் என்று. என் அம்மா நம்பினுள்; என் பாட்டி நம்பினுள்; உலக வாழ்க்கை இன்னது என்று தெரியாமல் வெறும் ஊமைக் கனவுகளைக் கண்டு கொண்டிருந்த என் தங்கையும் நினைத்தாள்; அதற்கப்புறம் நானும் நினைத்தேன் அவன் என் காதலன் என்பதை. நான் அவன் காதலியாக அவன் நினைத்தான். அதற்கு என் நெஞ்சு இடம் கொடுக்கவில்லை. அவன் என் காதலன் ஆகிருன். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

அவன் என்னைக் காதலிக்கிருன்;
அதனுல் நான் அவன் காதலி.
நான் அவனைக் காதலிக்கவில்லை;
அதனுல் அவன் என் காதலன் அல்ல.
அதாவது 'ஒருதலைக் காதல்' என்று

நான் படித்த அந்தப் பழைய இலக்கியம் இதற்கு விளக்கம் தரும்.

எனக்கு என் மகன் உறவு இருந்தால் போதும் என்று நினைத்து வாழ்ந்தேன். அவன் என்னை விரும்பினுன் நான் அவனை விரும்பினேன். இந்தச் சின்ன உலகம் அழகாக இருந்தது; அமைதியாக இருந்தது. ஆனுல் மற்றவர்கள் இந்தப் பழியைச் சுமத்திய உடன் அந்தச் சுமையைத் தாங்குவதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். அந்த உணர்வோடு நான் வாழ்வது நியாயம்தான் என்று பட்டது வேண்டுமென்றே அவனிடம் நீண்ட நேரம் பேசுவேன்;

சிரிப்பேன் சிந்திப்பேன்; சிந்திப்பேன் சிரிப்பேன், அந்த அனுபவத்தை ஒரு கவிதையில் எழுதியும் வைத்தேன்.

"நாங்கள் சிரித்துக் கொண்டே இருந்தோம்
அப்பொழுது எதையும் சிந்திக்கவில்லை.
நாங்கள் சிந்திக்கத் தொடங்கினோம்
பிறகு சிரிக்கவே முடியவில்லை
சிந்தித்துச் சிரித்தோம் அதை
மறக்கவே முடியவில்லை."

பேசுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் கிடைத்தன. நாங்கள் படித்த கல்லூரி அனுபவங்கள் எங்களுக்கு ஒரு காவியமாக நின்று நிலைத்துச் சுவைத்தன.

"தமிழில் சமுதாய நாவல்களே எழவில்லை" என்று ஒரு திறனாய்வு ஆசிரியர் பேசுவார். வெறும் குடும்பங்களைப் பற்றித்தான் எழுதி இருக்கிறார்கள்" என்று பேசுவார் ஒரு ஆசிரியர்.

இந்த ஆராய்ச்சி மாணவர்கள் சிலர் நாவலைப்பற்றி ஆய்வு செய்து வந்தார்கள். திரும்பத் திரும்ப ஒரு சில நாவலாசிரியர்களையே விமரிசித்து வந்தார்கள். பிற மாநிலங்களின் போக்குகளை யாரும் எட்டிக் கூடப் பார்த்தது இல்லை. அது மட்டும் இல்லை, தமிழில் புதிய எழுத்தாளர்களே உண்டாக முடியாது என்று நம்பி விடுகிறார்கள்.

திரைப்படம் தேங்கி விட்டது என்று தெளிவாகச் சொன்னேன். மக்களைப் புராண காலத்துக்கு இழுத்துச் செல்லும் கதைகளே எடுக்கப்படுகின்றன. அழுகை சிரிப்பு இந்த இரண்டைத் தவிரப் படங்கள் புதிய போக்கில் செல்வது இல்லை என்று பேசினேன்.

"வேறு என்ன இருக்க முடியும்?" என்று அவன் கேட்பான்.

"சிந்தனைகள் இடம் பெற வேண்டும். அதற்குப் படாதிபதிகள் முயற்சி செய்ய வேண்டும்."

"அப்படிக் கூடவா கதை எடுக்க முடியும்?"

'வெறுந்தாள்' என்ற நாவலைப் பற்றி விமரிசித்தோம்.

அதை யாரோ படம் எடுக்கப் போவதாக அவன் குறிப்பிட்டான்.

"நாம் தமிழ் நாட்டில் இருக்கிறோம்" என்று பதில் சொன்னேன்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"தமிழ் நாடு பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது புது முயற்சிகள் செய்வது இல்லை" என்றேன் நான்.

ஒரு கலைஞர் 'வெறுந்தாள்' நாடகமாக்கிக் கொண்டிருக்கிறார். அது முதல் முயற்சி. அது திரைப்படமாகி வரப் போகிறது. அது அடுத்த முயற்சி.

'சிந்தனைகளே பாத்திரங்களாக இயங்க முடியும் என்பதற்கு அது அருமையான கதை' என்று எடுத்துக் காட்டினேன்.

சிந்தனைகளை உண்டாக்கக் கூடிய கதைகள் வரவேற்கப்பட வேண்டும் என்று கூறினேன்.

'சித்தார்த்தா' படம்—அதைப் பற்றி விமரிசித்தோம். அது செக்ஸ் படம் போல் விளம்பரம் செய்தார்கள்.

உண்மையில் அது செக்ஸ் படம் அல்ல, வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்தும் படம் அது.

"இரண்டு பேர் வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள்.
ஒருவன் துறவியானான் மற்றொருவன்
உறவைத் தேடினான்; அவள் ஒரு பொது மகள்;
அழகை விலைக்கு விற்றாள்.
விலையில்லாத அழகு அதற்கு விலை கொடுத்தார்கள்;
அவன் தன் அன்பைத் தந்தான்
அவளும் அவனுக்கு அன்பைக் கற்றுத் தந்தாள்.
சின்ன உலகம் அழகாக இருந்தது;
பாம்பு கடித்தது அவளும் இறந்தாள்,
அவள் மகன் அவனைக் கல்லால் அடித்தான்.
இருவரும் சந்திக்கிறார்கள் படகின்
துடுப்பு அவர்களைப் பிடிக்கிறது;
படகு ஓட்டிப் பிறரைக் கரை சேர்க்கிறார்கள்.
தொண்டுதான் வாழ்வின் பயன்; பண்பு.
அதுதான் வாழ்வின் பயணம்"
என்பதை அழகாகக் காட்டுகிறார்கள்.

என்ன அழகான சிந்தனை, மனிதன் இல்லறம் துறவறம் என்று வகுத்துக் கொள்கிறான். அவன் பயணம் எங்கே முடிகிறது? சமுதாய அறத்தில்தான். தொடக்கம் இல்லறம். முடிவு சமுதாயத் தொண்டு; தொடக்கம் துறவறம் முடிவு சமுதாயத் தொண்டு. இக்கருத்தை அந்தப்படம் மிக அழகாக விளக்குகிறது.

இந்தப் படங்களைப் பற்றி விமரிசித்தோம். வேறு என்ன பேச முடியும். என் சொந்த வாழ்க்கையைப் பற்றி அவனிடம் பேசமாட்டேன். அவனும் தான் வந்த விவரத்தை எடுத்துப் பேச மாட்டான். எனக்கும் பேச ஆள் தேவைப் பட்டது. குடும்பம் ஒரு சிறையாகப்பட்டது

உண்பது, உறங்குவது, உடுப்பது, அணிவது இவற்றைத் தவிர வேறு எதுவும் என் வீட்டு வாழ்க்கையில் காண முடியவில்லை.

என் 'அவர்' அவர் பழகிய சூழல் விசித்திரமானது. அதாவது தமிழ் இலக்கியம் படித்தவர்கள் பெறும் மன நிலையை அவர் பெற்றிருந்தார். 'கற்பு' என்பதற்குப் பயங்கரமான பொருளைக் கொண்டவர். 'தூய்மை' என்ற அர்த்தமில்லாத சொல்லிலே அவர் பழகியவர்.

என்னை மணக்கும் பொழுது அவர் பெரிய மனப் போராட்டம் நடத்தி இருக்கிறார். எதற்காக? தன் பிரம்ம சரியம் கெட்டுவிடுகிறதே என்று. பெண் கூட தன் கற்பு கெடுவதற்குக் கவலைப்படமாட்டாள். அவர் தன் பிரம்மச் சரியம் கெடுகிறதே என்று கவலைப்பட்டவர். அவர் மேல்' தவறு சொல்லிப் பயன் இல்லை. 'பிரம்மச்சரியம் காப்பது எப்படி என்பது போன்ற அர்த்தமற்ற நூல்களைப் படித்து மனக் குழப்பம் பெற்றவர்.

அவர் படித்த கல்வி நிலையம் இராமகிருஷ்ண மடத்தார் நடத்திய நிறுவனம். அங்கே விவேகானந்தர், இராம கிருஷ்ணர், சாரதாமணி இந்தமாதிரிப் படங்களைப் பார்த்துப் பழகியவர். எனக்கு இந்தப் படங்களில் இந்தப் பிரச்சாரங்களில் நம்பிக்கை போய் விட்டது.

நான் ரமணரிஷியை மதிப்பதைவிட எங்கள் வீட்டுக்குக் கடிதம் கொண்டு வரும் தபால்காரரை மதிக் கிறேன்; வீடு கட்டும் தொழிலாளியை மதிக்கிறேன்; வண்டியோட்டும் காரோட்டியை மதிக்கிறேன் உழைப்புக்கு மதிப்புத் தரும் காலம் வந்து விட்டது இவர்கள் எல்லாம் வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடியவர்கள் அவர்களைக் கண்டு என்றால் மதிக்க முடியவில்லை. பாராட்ட முடியவில்லை.

எனக்கு ஏன் இவ்வளவு சிந்தனைகள் வந்தன. என் கல்லூரி அனுபவம் தான். பல பிரச்சனைகளைப் பற்றிப் பேசி விவாதித்து இருக்கிறேன். சமுதாயச் சிந்தனைகள் என்னிடம் கால் கொண்டு விட்டன.

ஒரு பக்கத்தில் உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புத் தருவதாகப் பேசுகிறோம். மறுபக்கம் உழைக்காமல் வேதாந்தம் பேசும் விநோதங்களைப் பாராட்டுகிறோம். இந்த எல்லைகளைக் கடந்து மனிதன் சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நினைவுகள் தோன்றும்.

இவ்வளவும் அந்த சினிமா விசிறியோடு பேசி முடிவு செய்தவை அல்ல; அவன் திரைப்படத்து விமரிசனம் ஒன்றை மட்டும் தான் அறிந்திருக்கிறான், அவனுக்கு நடிகை நடிகர் பற்றிய விமரிசனம்தான் தெரியும்.

சிறப்பாக கமலஹாசனையும் ரஜனிகாந்தையும் பாராட்டிப் பேசுவான். அதாவது திரை உலகம் திருந்தி இருக்கிறது என்பது பொருள். திரைக்காகக் கதை என்ற நிலை மாறிக் கதைக்காகத் திரை என்ற நிலை இடம் பெறு கிறது, புதிய பாத்திரப் படைப்புகள் திரைப் படங்களில் இடம் பெற வேண்டும் என்பது எங்கள் பேச்சில் இடம் பெற்றது.

ஒரு முறை பனகல் பார்க் பக்கம் நான் போய்த் திரும்பி வருகிறேன். பாட்டியோடுதான் வீடுதிரும்புகிறேன். சாலை எல்லாம் கார்கள் நின்று கொண்டு இருந்தன. யாரோ ஒரு ஆனந்தர் ஆத்மீக விசாரணை பற்றி பேசிக் கொண் டிருந்தார். இதைக் கேட்க இவ்வளவு கார்களா என்று வியந்தேன்.

இன்னும் இந்த நாடு அறிவு தெளிவு பெற ஓராயிரம் ஆண்டுகள் ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க முடிந்தது. சமுதாயச் சிந்தனை அற்று ஆத்மவிசாரணைகளைப்

பெருக்கும் கூட்டம் மிக்கது இந்த நாடு என்ற எண்ணம் தான் தோன்றியது.

நிச்சயமாக என்னை இந்தக் குடும்ப எல்லைக்குள் போட முடியாது என்பதை மட்டும் உணர்ந்து வந்தேன். மறுபடியும் அந்தப் பழைய கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

"வழிபட்டால் பெண் தெய்வம் ஆவாள்
வெறுத்தால் அவள் பேய் ஆவாள்
மதித்தால் அவள் பெண் ஆவாள்."

அவர் என்னை மதிக்கிறார் என்றால் என் உணர்வுகளை மதிக்க வேண்டும்; என் அனுபவங்களை மதிக்க வேண்டும், என் சிந்தனைகளை மதிக்கவேண்டும்; என் உறவுகளையும் மதிக்க வேண்டும்.

அவர் என் நண்பனை வெறுக்கத் தொடங்கினார்; அவன் என் காதலன் என்று தவறாக எண்ணினார். என் சொந்தக் கடிதங்களை; பாராட்டுகளை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் உடலை அவர் அறிந்தான்; என் உள்ளத்தை அவரால் அறிய முடியவில்லை என் அழகை அவர் வியந்தார் ஆனால் என் அறிவை அவரால் மதிப்பிட முடியவில்லை.

இந்த உடல் உறவு தான் அவர் நினைத்தது. எனக்கு உணர்வு இருக்கிறது. அறிவு இருக்கிறது ரசனை இருக்கிறது என்னைச் சுற்றி இந்தப் பரந்த உலகம் இருக்கிறது. இது எனக்குச் சொந்தம்.

அவர் ரசனைகளில் உறவுகளில் நான் என்றும் தலையிட்டதில்லை; அவற்றை அறிய முயன்றதும் இல்லை இவர் என் குறிப்பேடுகளைப் புரட்டிப் பார்த்து இருக்கக் கூடாது. அதைப் பார்த்தாலும் கவலை இல்லை. அதைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆடவன் ஒருவன் பெண்ணுக்குக் கடிதம் எழுதினாலே என்னமோ

இல்லாமல் எழுதமாட்டார்கள் என்று நினைக்கும் சாதாரண மனிதர்களைப் போலத்தானே அவர் நினைத்து விட்டார். அவர் என்னை மதிக்கும் பொழுது தான் அவரோடு வாழ்வது என்று உறுதி கொண்டு விட்டேன்.

ஆஷாவின் வாழ்க்கையில் விரக்தியைத் தவிர அவள் வேறு எதையும் காணவில்லை. அடிக்கடி தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அவளுக்கு உண்டாகிக் கொண்டிருந்தது. மொத்தத்தில் அவள் வாழ்வில் சுகம்காணவில்லை.

அவளுக்கு ஏன் ரவி மீது இவ்வளவு உயிர் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவனைப் பார்க்கவே அடிக்கடி கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டு என் வீட்டுக்கு வந்து விடுகிறாள்.

வேலையை விட்டது பெருந்தவறு என்று அடிக்கடி சொல்கிறாள். என் அறிவிலே ஒரு சூனியம் குடி கொண்டு விட்டது என்று சொல்கிறாள்,

அவர் இல்லாமல் நான் வாழ முடியாது என்று நினைத்தேன். இப்பொழுது ஏன் வாழ வேண்டும் என்ற எண்ணம் தான் உண்டாகிறது.

அவள் வீட்டுக்கு வருவது எனக்கு ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. அவளிடம் இந்த முதல் டிக்கட்டைப் பற்றிப் பேச வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தேன்.

என் அவர் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டதை அறிந்தேன். அவர் பெரிய பக்திமானாக மாறிவிட்டார் என்று கேள்விப்பட்டேன். அவர் சதா கோயில்களுக்குச் செல்லத்தொடங்கினார். சாமியார் காலட்சேபங்களை விடாமல் கேட்கத் தொடங்கினாராம்.

'இந்த உலகம் மாயை' என்ற அறிவு அவரை நன்ருகப் பிடித்துக்கொண்டது.

'பெண் ஒரு மாயப் பிசாசு' என்பது அவர் அபிப்பிராயமாக ஆகிவிட்டது.

என் காதல் கடிதங்கள் ஒவ்வொன்றும் அவரைத் தட்டி எழுப்பின. "போ உன் மனேவியைக் கொலேசெய். அவள் வாழ்க்கை மாசுபட்டுவிட்டது. 'தாடிதான் அவள் காதலன்" என்று அவன் மனச்சான்று உறுத்தியது.

என்னேக் கொலேசெய்ய அவருக்குத் துணிவு பிறக்கவில்லே. அதற்கு நான் வாய்ப்பும் தரவில்லே. அவர் மனநிலேயை உணர்ந்துகொண்டேன்.

என் கணவனேத் திருத்துவதைவிட இந்தத் தாடியை மாற்றவேண்டுவது என் கடமையாகப் பட்டது. அவன் மணம் செய்துகொண்டால் அல்லது மனம் மாறமாட்டான்என்பது தெரியும். அதற்கு வழி என்ன என்று எனக்குத் தெரியவில்லே.

நான் என் குடும்பத்திலேயே மதிக்கப்படவேண்டுமென்ருல் என் கணவனேடு வாழ்ந்து தீரவேண்டும். அவனுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும்; எது உண்மை? என் கல்லூரி வாழ்வு அனுபவங்கள் எனக்கே உரியவை; அவற்றில் அவன் நுழைந்து பார்த்தது தவறு என்பதை எடுத்து உரைக்கவேண்டும்.

ஆஷா ஒன்று கேட்டாள்.

"நீ மறுக்க மாட்டாயா?"

"எதை?"

"நான் கேட்பதை"

"என் கணவனுக்குக் குழந்தை பிறக்காதாம்"

"யார் சொன்னது?"

"வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள்"

"அதற்கு நீ?"

"மறுமணம் செய்துகொள்ள விரும்பவில்லை"

"அப்படியானல்"

"குழந்தை வேண்டும்"

"அனுதை இல்லத்தில் கேட்டால் கொடுப்பார்கள்"

"எனக்கு ரவி வேண்டும்"

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

எதிர்பாராத விதமாக தாடி அன்று வீட்டுக்கு வந்தான்.

"யார் இவர்?"

"இவர்தான் அவர்" என்று அறிமுகப்படுத்தினேன்.

"அப்படி என்ருல்"

"'என் அவர்' அப்படித்தான் எல்லாரும் சொல்கிருர்கள்" என்றேன்.

அவள் துணிந்து 'அவரிடம்' பேசினுள்.

"நீங்கள் நினைத்தால் எத்தனை குழந்தைகளையும் பெற்றுக்கொள்ளலாம்."

அவன் சிரித்தான்

நான் எதையும் மறுக்க விரும்பவில்லை.

"என் கணவன் என்னோடு இல்லை" என்ற குறை என்னை வாட்டியது. அவள் அப்படித்தான் நினைத்துக் கொள்ளட்டுமே என்று விட்டு வைத்தேன்.

அவள் என் கலியாணத்திற்கு வரவில்லை. அவள் வாழ்த்தை மட்டும் அனுப்பி இருந்தாள்.

என் கணவன் என்னோடு வாழ்ந்து நான் மறுபடியும் குழந்தைகளைப் பெறமுடியும். அவள் தன் கணவனோடு வாழ்ந்தாலும் குழந்தைகளைப் பெறமுடியாது.

என் வீட்டில் இரண்டு பைத்தியங்கள் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

ரவியைச் சுற்றி ஆஷா; என்னைச் சுற்றி தாடி.

எனக்கு இந்த உலகத்தில் ஏதாவது வேடிக்கை தேவைப்பட்டது.

"இவர் ஒரு சினிமா ரசிகர்" என்று அறிமுகம் செய்தேன்.

"அப்படி என்றால்"

"முதல் படத்தில் முதல் நாளில் முதல் டிக்கட்டு இவர் தரன்" என்றேன்.

"ரசனையுள்ள மனிதர்" என்று பாராட்டினாள்.

"உன் கணவர்?"

"அவருக்குத் திரைப்படமே பிடிக்காது அதைப்பார்ப்பதால் கெட்டுவிடுவார்களாம்." இது அவள் சொல்லியது.

"இவர் அப்படி அல்ல; அதைப் பார்ப்பதால் கெடவில்லை. இவருக்குப் பொழுதுபோக்கு"

தாடி பேசத் தொடங்கினான். "எனக்கு ஏன் வாழ்கிறோம் என்று தெரிவதில்லை. அதற்குத்தான் இந்த திரைப் படங்களைப் பார்க்கிறேன். ரொம்பபேருக்கு ஏன் வாழ்கிறோம் என்பதே தெரிவதில்லை."

"நம் ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் இருக்கிறரே அவரைத்தெரியுமா" என்று கேட்டாள்.

"இருக்கிறர்"

"அவர் ஓய்வு பெற்றுவிட்டார். ஆனல் இன்னும் பணி செய்கிறர்"

"ஏன்?"

"வீட்டில் என்ன செய்வது என்று தெரியாமல்தான்?"

"அவர் சதா மில்ட்டனின் 'பாரடைஸ் லாஸ்ட் ரிகெய்ண்ட்' இதையே பேசுவார்."

"மற்றெருவர் ஒருவர் இருக்கிறர். ஒவ்வொரு ஞாயிறும் குதிரைப் பந்தயத்துக்குப்போய்ச் சம்பாதித்தை இழந்து விட்டு வேதனையோடு திரும்புகிறர்."

"ஒவ்வொருவரும் அதிகம் உழைக்க விரும்புவதில்லை. தேவைக்கு ஏற்ற உழைப்புதான்."

"அப்படி என்றல்"

"யாரும் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. செய்திகள் படிக்க அவ்வளவுதான். அதற்குமேல் புற உலகத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லை."

"துணிந்து என்னை 'அவர்' என்று அறிமுகப்படுத்துகிறயே ஏன்?"

"நானும் கொஞ்சம் தமாஷ் அனுபவிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். வாழ்க்கை ரொம்பவும் மந்தமாகவிட்டது. நினைத்துப்பார்த்து ரசிக்கவேண்டிய நாட்கள் படித்த நாட்கள். இப்பொழுது பிரச்சனைகளோடு மோதவேண்டும். அவ்வளவுதான்."

"என்னைத் துணிந்து அறிமுகப்படுத்தும்பொழுது இப்படிச் செய்வீர் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"இல்லை அந்த முடிவுக்கு வந்துவிட்டேன். உங்களை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துவிட்டேன்."

"அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"'நீங்கள் என் ரசிகர்''

''ஆமாம்''

''என்னோடு வாழவேண்டும்

அதாவது விரைவில் என் கணவராக ஏற்றுக்கொள் ளப்போகிறேன்.''

அவன் தன் தாடியைத் தடவிக்கொடுத்தான். "இது விளையாட்டு அல்ல. நீர்தான் என் காதலர் என்பதை என் தாய் நம்புகிருள்; என் பாட்டி நினைக்கிருள்; என் தங்கை வேறுவிதமாக அவளுக்கு எண்ணத் தெரியாது.என் மாஜி கணவர் சாமியாராகிவிட்டார். மன அமைதி தேடி அலை கிருர். என் தோழி ஆஷா வாழ்க்கையில் ஒரு பிடிப்பைத் தேடி அலைகிருள். ரவியை அவளிடம் ஒப்படைக்கப் போகிறேன்.''

''ஏன்?''

''ரவி அனுதை ஆகக்கூடாது. அவனை வளர்க்க ஒரு தாய் வேண்டும் அதற்கு அவள்தான் சரி''.

ஆஷாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''அப்படியானுல் இவர்''

''இவர் 'அவர்' அல்ல: ஆனுல் அவர் ஆவதற்கு வேண் டிய விருப்பு இருக்கிறது. என்னை விடாமல் தொடர்கிருர்''

''அதைத் தடுத்து இருக்க வேண்டும். அமைதியாகச் சொல்லி அவரை விலகச்சொல்லி இருக்கவேண்டும்.''

"எதற்காக?

அம்மா பாட்டி என் 'அவர்' எல்லாரும் அப்படி நினைக்கும்பொழுது''

''அவர்கள் நினைத்தால்''

''அதைச் செயல்படுத்துவதுதர்ன் நான் அவர்களுக் குச் செய்யத்தக்க கைம்மாறு.''

''எ ன்னடி உனக்கு என்ன பைத்தியமா?''

"வாழ்க்கையே ஒரு சிதறல் அதுதான் உண்மை. நீ உன் கணவனோடு வாழநினைத்தாய்; அதற்காக நீ உன் தொழிலை விட்டாய் பிறகு உன்னால் அவரோடு வாழமுடிய வில்லை. மறுபடியும் நீ மற்றொரு லட்சியத்தை நாடுகிறாய். பெண்மை தாய்மையாக மாறுகிறது. நீ உன்னை ஏதோ ஒரு லட்சியத்துக்குத்தர விரும்புகிறாய். சமூகத்துக்கு உன் னால் நேரிடையாக எந்தத் தொண்டும் செய்ய முடிய வில்லை. அதற்கு ஒரு வெளிப்பாடாக ரவியை நாடுகிறாய்.

என் அம்மா நான் கெட்டுவிட்டதாக நம்புகிறாள். அவ ளால் நான் யோக்கியமாக வாழ முடியாது என்று நினைக் கிறாள். எனக்கு அவளே பட்டம் கட்டிவிட்டாள். அவ ளால் வேறுவிதமாக நினைக்க முடியவில்லை. இவரையும் நான் போ என்று எப்படிச் சொல்ல முடியும். என் உடன் படித்தவர்; என்னோடு திரைப்படம் பார்க்க வந்தவர்.

நான் ஒரு படம் பார்த்தேன் அதில் ஒரு டயலாக் வருகிறது.

"Love without sex is empty."

இதுவரையும் இவர் இந்தக் கொள்கையோடுதான் சுற் றிக்கொண்டுவந்தார். இதற்கு ரசனை, நட்பு, அன்பு, பாசம் இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. 'ஆசை' ஒன்று இல்லாவிட்டால் இந்தச் சொற்களுக்கு அர்த்தம் இல்லை என்பதை நன்றாக உணர்கிறேன்.

நாங்கள் பழகுகிறோம், பேசுகிறோம், எங்கள் உணர்வு களைப்பற்றி அல்ல; பொதுச் செய்திகளைப்பற்றி. கல்லூரி நாட்களிலும் அந்தக் கவிதைப் பயித்தியம் ஆசிரியரோடு பல செய்திகளை விமரிசனம் செய்து இருக்கிறேன். அவர் கவிதைக்கு நான் தூண்டுதலாக இருக்கலாம். அல்லது என் கவிதைக்கு அவர் தூண்டுதலாக இருக்கலாம். அந்த அனுபவங்கள் வெறும் நினைவுகள்தான்.

நான் இவரோடு பல இடங்களுக்குச் சென்று இருக் கிறேன். கடற்கரையில் மணிக்கணக்காகப் பேசி இருக் கிறேன். ஆனால் நெருங்கியது இல்லை. வாய்ப்புத் தந்தால் அவர் உணர்வுகளைத் தூண்டி இருக்க முடியும். நான் தூண்டவில்லை.

சாதாரண என் பேச்சுக்கும், குரலுக்கும் என் புன்ன கைக்குமே இவர் தன்னை மறந்து தாடியை வளர்த்துக் கொண்டிருக்கிறார். இவரை என்னைத் தொட, சுருக்கமாகச் சொன்னால் என்னையே இவருக்குத் தந்திருந்தால் இவர் பைத்தியமாகவே மாறிவிட்டிருப்பார்.

இப்பொழுது என்னை இவருக்குக் கொடுக்க முடிவு செய்து கொண்டுதான் பேசுகிறேன். இதுவரை இந்த உலகத்தில் நேர்மையாகவே வாழ்ந்தேன்; உயர்ந்த லட்சியங்களுக்காகவே வாழ்ந்தேன்;பேசினேன்; பழகினேன்; சிந்தனைகளை வெளியிட்டேன். என் கணவன் என்னை நம்பவில்லை. அவற்றை மதிக்கவில்லை. நான் கெட்டு இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார்.

அவர் நினைவைப் பொய்யாக்குவது நல்லது அல்ல; அவர் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக் கூடாது. நான் கெட்டு இருக்க வேண்டும் என்று நினைத்து என்னைவிலக்கி விட்டார். நான் அவரிடம் காதல் பிச்சை கேட்கமாட்டேன்; அதை அவமானமாகக் கருதுகிறேன். என்னிடம் மண்டியிடக் காத்துக் கிடக்கும் இந்த இளைஞனிடம் என்னை ஒப்புவிக்கத் தீர்மானித்து விட்டேன்.

இந்த அவல வாழ்க்கையில் நான் ஒரு சுவர்க்கத்தைத் திறக்க முடியுமானால் ஏன் அதை உண்டாக்கக் கூடாது. என்னைச் சுற்றி வரும் இவருக்கு ஏன் நான் சுகவாழ்வு தரக்கூடாது.

நான் இதுவரை கெடவில்லை. கெட நினைக்கவில்லை; இப்பொழுது கெடாமல் இருக்க முடியவில்லை. அதற்குப் பிறகு இந்தக் குழந்தை என்னிடம் வளரமுடியாது. என் பழி பாவம் அவனைச் சுற்றிக் கொள்ளும். ஒரு விபசாரியின் மகன் என்று உலகம் சொல்லும். கணவனுக்குத் துரோகம் இழைத்தவளின் மகன் என்று சுற்றுப்புறம் பேசும், அவனிடம் நான்தான் தாய் என்று சொல்லாதே. அவனைப் பெற்றவளைப் பற்றி அவனிடம் பேசாதே. வளர்த்தவள்; வளர்க்கப் போகிறவள் நீதான். நீதான் அவன் தாய். ஒரு குழந்தைக்காகக் கணவனையும் இழக்கத் தயார் என்று நீ பேசிய சொற்கள் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்

கின்றன. ஒரு காதலுக்காகக் குழந்தையையும் இழக்கத் தயார் என்பதைச் செயலில் காட்டுகிறேன். நாம் எவ்வளவு முரண்பட்டவர்கள் பார். வாழ்க்கையே முரண்பாடுமிக் கதுதான்.

படித்த காலத்திலே நான் சோஷியலிசத்தைப் பற்றிக் கனவு கண்டேன்; கவிதை எழுதினேன். அரசியலைப்பற்றி விமரிசித்தேன். இப்பொழுது என் உடற் பசிக்கு ஒரு வழி தேடிக் கொள்கிறேன். என் கணவனிடம் கிடைக்காத ஒரு வாழ்வை ஏன் பச்சையாகச் சொன்னல். இன்பத்தை என் காதலனிடம் பெறத் துணிந்துவிட்டேன்.

நிச்சயமாக இவர் என்னைக் கைவிட மாட்டார். நானும் அவரை எந்தக் காலத்திலும் விட்டுப் பிரியேன். 'உண்மை யான காதல்' என்பதற்கு விளக்கம் காணப் போகிறேன்' என்று விடாமல் பேசினேன். அந்த இளைஞன் ஒன்றும் பேசாமல் மவுனமாக இருந்தான். ஆஷாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்னைக் கல்லூரியில் பேசக் கேட்டிருக் கிறார்கள். என் ஆற்றலை வியந்து இருக்கிறார்கள். ஒரு கூட் டத்துக்கு முன்னல் எப்படிப் பேசுவது என்பதை முன் கூட்டிச் சிந்தித்து இருக்கிறேன். ஆஷாவையே அதற்குக் கருத்துகள் தரும்படி கேட்டு இருக்கிறேன்.

இப்பொழுது திடீர் என்று இப்படிப் பேசுவேன் என்று என் நண்பர் எதிர்பார்க்கவில்லை. அவர் அசந்துவிட்டார். இது திரைப்படம் அல்ல; எட்டி இருந்து வேடிக்கை பார்க்க;வாழ்க்கை என்பதை உணர்ந்து கொண்டார். இது ரசிப்பதற்கு என்று அமைந்தது அல்ல; வாழ்வதற்கு என் பதை உணர்ந்து கொண்டார்.

அம்மாவுக்கு அதிர்ச்சியாகி விட்டது. தான் நினைத்தது உண்மை என்பதற்காக அவள் பெருமைப்பட்டாள்.

"எனக்குத் தெரியும் இப்படி நடக்குமென்று. பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருக்கக்கூடாது என்று சொன்னல் அவள் கேட்டால் தானே. இன்று பற்றிக் கொண்டது" என்று அவள் விமர்சனம் செய்தாள்.

பாட்டி மூலையில் உட்கார்ந்துகொண்டு அழத் தொடங் கினுள். மானமே நிதானம் இழந்துபோய் விட்டதற்காக

வருந்தினாள். தங்கைக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் அந்தக் குடும்பத்துக்குத் தேடித் தரும் அவமானம் அவளை யும் பாதிக்கும் என்பதை அவள் எண்ணிப் பார்த்தாள். இது பெரியவர்கள் விஷயம் என்று அவள் பேசாமல் மவுனம் சாதித்தாள்.

"அவள் தன் கணவனுடன் மனம் கோணாமல் வாழ் வது" என்று மனக்கோலம் கொண்டாள்; மணக்கோலம் ஒன்றுதான் அவள் எதிர்பார்த்தது. அப்பொழுது அவள் செம்மையாக வாழ்ந்து எனக்குப் பாடம் கற்றுத்தரக் காத்துக் கிடந்தவள் போல் காட்சி அளித்தாள்.

ஆஷா பேசுவதற்கு இடம் தராமல் நானே பேசிக், கொண்டிருந்தேன்.

"இவ்வளவு தூரம் துணிந்து விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"துணிந்துதான் யாரும் கெடுவார்கள்" என்று துடுக் காகச் சொன்னேன்.

"உன் லட்சியங்கள் எல்லாம்"

"எது லட்சியம் என்றே தெரியாமல் இருக்கிறேன், இந்த மனிதக் கூட்டத்தைப் பார்க்கிறேன். அவரவர்கள் எதை லட்சியம் என்று நினைக்கிறார்கள். பொழுது போவது எப்படி என்பதைத்தான் லட்சியமாகக் கொண்டிருக் கிறார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் சிலரே பங்கு கொள்கிறார் கள். விழாக் கொண்டாடுவதற்கு எல்லோரும் போட்டிக்கு முந்திக் கொள்கிறார்கள். ஒரு புதிய விழா என்று கூறட் டும் உடனே கூட்டம் கூடி விடுகிறார்கள். உலகத் திரை; அரங்கு படங்கள் என்று சொல்லட்டும் உடனே கூட்டம் • கியூ; தொலைக்காட்சி என்று சொல்லட்டும் எப்படியாவது வாங்கிவிட முடிவு; ஊர் சுற்றிப் பார்ப்பது என்று சொல் லட்டும் உடனே உல்லாசப் பயணம். மனிதன் சுகத்தைத் தேடித்தான் அலைகிறான்.

'அரசியலில்' என்ன செய்கிறார்கள். இந்த மக்களை நல்லவர்களாக ஆக்க விரும்புகிறார்கள். அதாவது பக்தி

கோவில் பிரச்சாரங்களைச் செய்து விட்டு மென்மைப் படுத்த நினைக்கிறார்கள். அதாவது சமுதாயச் சிந்தனை களைத் தூண்டாமல் ஆத்ம விசாரணைகளில் ஆழ வைக் கிறார்கள்.

வேறு என்ன செய்ய முடியும். அரசியல்வாதிகள் தாம் பதவிக்கு வருவது எப்படி என்று திட்டம் போடுகிறார்கள். வன்முறைகளைத் தூண்டுகிறார்கள். பிறகு அது எங்கே போய் முடிகிறது. ஒரே சிதறல்தான்.

என் கணவன் அவர் மனம் ஒரே கலக்கம்; அதாவது மனைவி அவரது தனி உடைமை என்ற போதையில் வாழ்ந்தார். அதாவது நான் யாரோடும் பழகி இருக்கக் கூடாது. யாரும் எனக்குக் காதல் கடிதம் எழுதி இருக்கக் கூடாது. என் குழந்தையை யாரும் எடுத்துப் பாராட்டக் கூடாது. நான் அவருக்கு முழு அடிமையாக வாழ வேண்டும். என் சமுதாய உணர்வுகளை அவரால் மதிக்க முடியவில்லை.

நான் இனி வாழ்ந்து என்ன செய்யப்போகிறேன். இந்த உடல் இந்த இளைஞன் விரும்பினால் எடுத்துக் கொள்ளட்டும்.

ஏன் அவன் வாழ்க்கையில் மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடாது. நான் துணிந்து நின்றேன்.

அவன் கரங்கள் நடுங்கின; கற்பனை உண்மையாகும் என்று அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

"என் தவறை உணர்கிறேன்" என்ற ஒரே சொல்தான் அவன் வாயிலிருந்து பிறந்தது.

"நான் அவன் ரசனைக்கு உரியவள்; ஆனால் அவன் வாழ்வுக்குப் பயன்படமாட்டேன்" என்பதைத்தான் அந்தச் சொற்கள் உணர்த்தின.

என் கற்பனை, ரசனை, என் டையரிக்குறிப்புகள் அவ்வளவையும் எரிப்பதை விட எனக்கு வேறு வழி தோன்றவில்லை.

எனக்கு என்று ஒரு தொழில் தேடிக் கொண்டேன். என் படிப்பு எனக்குப் பயன்பட்டது. என் நற்சான்றுகள் எனக்கு ஒரு நல்ல தொழிலைத் தந்தது.

என் மீது எழுதப்பட்ட வீடு என் தங்கைக்கு மாற்றி விட்டேன். என் மான உணர்வு அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. அதை நான் பெறுவதால் தானே அவர்கள் பழிச் சொற்களுக்கு, என்னைப் பற்றி அவர்கள் பேசுவதற்கு உரிமை இருந்தது.

அந்தச் சொத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டேன். ஆஷா அன்று என் பேச்சில் ஒரு அதிர்ச்சியைக் கண்டாள்.

என் குழந்தை எனக்குத் தேவை என்பதை உணர்ந்தாள்.

மறுபடியும் அவளைச் சந்தித்தேன். அவள் ரவியிடம் பாசம் காட்டவில்லை.

"என்னால் குழந்தை இல்லாமல் வாழ முடியாது, குழந்தை பெறாததால். அவரிடம் அதைப் பெற முடியாததால் அவரை வெறுத்தேன். எனதயும் என்னை வைத்துக் கொண்டே மதித்தேன். அதனால்தான் என் வாழ்வில் ஒரு பெரிய சோதனை ஏற்பட்டது. அவரை வெறுக்கும் அளவுக்குச் சென்றுவிட்டேன்.

குழந்தை என்னைவிட உனக்குத்தான் அவசியம்" என்றாள். அதாவது கணவனை விட்டு வாழும் எனக்கு அவன் தான் ஆறுதல் தரமுடியும் என்பதை உணர்ந்தாள்.

நான் இப்பொழுது என் தாய், பாட்டி இவ்வுறவுகளைக் கடந்து என் காலில் நிற்கிறேன். தனி வீட்டில் வேலைக்காரக் கிழவி ஒருத்தியோடு நிம்மதியாகக் காலம் கழிக்கிறேன். என் வாழ்க்கை ஒரு லட்சியத்தோடு இயங்குகிறது.

ரவி இந்தப் புதிய பாட்டியை ரொம்பவும் நேசிக்கிறான். அவள் அவனுக்குச் சொத்துத் தரமாட்டாள். தன் உழைப்பைத் தருகிறாள். அவள் அவனைத்தன் பேரனாகவே மதிக்கிறாள்.

யார் இந்த அன்பை அவளுக்குத் தந்தார்கள்.

யார் இந்தக் கிழவி?

இவள் ஏன் என் மீது அன்பு சொரிகிறாள்.

இந்த நினைவுகள் என் சிந்தனையை விரிவு படுத்தின.

எனக்கு உற்றவர்கள் உறவினர்கள் ஏதோ எதிர் பார்த்தார்கள். அதைநான் அவர்களுக்குத் தரமுடியவில்லை. அவர்கள் என்னை விட்டு விலகினார்கள். நான் அவர்களை விட்டு விலகினேன்.

புதிய உலகம், புதிய உறவு. நானே அமைத்துக் கொண்டேன்.

அந்தப்பாட்டி மட்டும் கேட்டுக் கொண்டே இருக்கிறாள்.

"ஏம்மா ரவி அப்பா வரமாட்டாரா?"

"வருவார்; கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறேன்."

"எப்பொழுது?"

"அவர் என்னை மதிக்கும்பொழுது" என்று சொல்லி முடித்தேன்.

ரவியைப் பார்த்தேன். அவன் தன்னை எடுத்துக் கொள்ள என்னிடம் அவன் கரங்களை நீட்டினான். அவனை எடுத்துக் கொண்டு அணைத்துக் கொண்டேன்.

'ரவி! நீ இந்த உலகத்தில்
பிறக்க அவசரப் படவில்லை;
நான்தான் அவசரப் பட்டேன்;
நீ எனக்குத் தேவைப் பட்டாய்
நீதான் என் கதைத் தலைவன்;
உன்னை வைத்தே என் கதையை
அமைத்துக் கொள்வேன்''

எடுத்துப்போகச் சொல்லிச் சாடை காட்டினான்.

அவனுக்கும் இந்த சின்ன உலகம் வீடு பிடிக்கவில்லை. வெளியுலகத்தைக் காண விரும்பினான் என்பதை எண்ணிப் பார்க்க முடிந்தது.

மறுபடியும் அந்தக் கவிஞனின் வரிகள் என்னுள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன.

"கன்னிமை என்பது பிச்சைப் பாத்திரம்
தாய்மை என்பது அட்சய பாத்திரம்''.



## நூல்கள் கிடைக்குமிடம்

### அணியக வெளியீடுகள்

ஆசிரியர் : ரா.சீ

1. அணியகம், சென்னை-30. © 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.